பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 03 ஞாயிற்றுக்கிழமை (15.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# குற்றங்கள் நிரூபணமானால் தண்டனை வழங்கத் தயார்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் போர்ச்சூழல் நிலவிய காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டால் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கத் தயார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## மைத்திரி இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இன்று ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்குப் பயணிக்கவுள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி வரை இந்தியாவில் தங்கியிருக்கும் அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அவர் அங்கு அந்நாட்டின் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்தர மோடி, முன்னாள் பிரதமர் மனமோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி 15 ஆம் பக்கம் பார்க்க....

## மனித உரிமை நிலைமை மாற்றம்

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைபபுக்கான அமெரிக்க பிரதிநிதி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் பின்னா ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

மனித உரிமை நிலைமைகள் குறித்த மாற்றம் மகிழ்ச்சி அளிக் கின்றது என அவர் தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச் சர்மங்கள சமரவீரவுடன நடத்திய சந்திப்பினைத் தொடர்ந்து டுவிட்ட ரில் பவர் இதனைத் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஐ.நாவின் அறிக்கை வெளியீட்டை தாமதிக்க இலங்கை கோரிக்கை

### பான் கீ மூனுடன் மங்கள பேச்சு

(கொழும்பு)

ஐ.நாவின் தலைமைச் செயலர் பான் கி மூனை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ள இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கை வெளியீட்டை தாமதப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நாவின் தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்த சந்திப்பு நடந்துள்ளது.

இலங்கையின் இறுதிக் கட்டப் போரின் போது நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட ஐ.நா விசாரணையின் அறிக்கை வெளியீட்டைத் தாமதப் படுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் விருப்பத்தை மங்கள சமரவீர இதன்போது 15 ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய விஜயத்துக்கு முன்னதாக ஜனாதிபதி எம்முடன் பேசவில்லை

### வடக்கு மீனவர்கள் கவலை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக அண்டை நாடான இந்தியாவுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்கின்ற பயணத்தின்போது, இந்திய பிரதமருடன் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினை குறித்தும் முக்கிய பேச்சுக்கள் நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில், இந்தப் பேச்சு வார்த்தைக்கு முன்னதாக தமது பிரச்சினைகள் குறித்து புதிய அரசாங்கம் தங்களுடன் கலந்தாலோசிக்கவில்லை என்று வடக்கு- இலங்கை மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதனால் வடக்கு இலங்கை மீனவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதுபற்றி செய்தியாளர்களிடம் கருத்து வெளி 15 ஆம் பக்கம் பார்க்க....

## தனியாரின் அடிப்படைச் சம்பளத்தை ரூ 10,000 வரை உயர்த்த இணக்கம்

(கொழும்பு)

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பிற்கு அமைவாக, தனியார் துறையிலும் ஆகக் குறைந்த அடிப்படை சம்பளத்தை 10,000 ரூபாய் வரை உயர்த்துவதற்கு தேசிய தொழில் ஆலோசனை சபையுடன் புரிந்துணர்விற்கு வந்துள்ளதாக நீதி மற்றும் தொழில் உற 15 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவின் விசாரணை அறிக்கை மார்ச்சில் வெளியாக வேண்டும்

### இரா.சம்பந்தன் வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றதாகக்கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணையின் அறிக்கை ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு அடுத்த மாத இறுதியில் வெளியிடப்பட வேண்டும என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி 15 ஆம் பக்கம் பார்க்க....

## நகைக்கடை உரிமையாளரை அச்சுறுத்தி பணத்தைப் பெற பொலிஸார் முயற்சி

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள நகைக் கடை உரிமையாளர் ஒருவரை அச்சுறுத்தி பெருந் தொகைப் பணத்தை பெற்றுக் கொள்ள பொலிஸார் முயற்சித்த சம்பவமொன்று யாழ் நகரில் இடம்பெற்றுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் யாழ் நகரின் கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடையொன்றின் உரி 15 ஆம் பக்கம் பார்க்க....




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்ஷயா
**அழகுக் கலை பயிற்சியகம்**

- இலவச அழகுக்கலை பயிற்சிகள் ஆரம்பம். உடன் தொடர்பு கொள்ளவும்.
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள் கடும் கறை அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு. கண்கருவளையம் அகற்றும் கிறீம்
- உடல் எடை கூட்டும் பால்மா, டொனிக்
- உடல் எடை குறைக்கும் குளிசை பால்மா, டொனிக்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை.
- மார்பு கூட்டும், குறைக்கும் கிறீம்
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய் என்பன விற்பனைக்கு உண்டு.
- பேசியல், அயனிங் கிளின்அப் செய்து கொள்ளலாம்.

0772106155 421, நாவலர் றோட் (பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ். (9527)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் · அன்பளிப்பு பொருட்கள் · உடுபுடவைகள் · CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER (சி-109)

இவ்வனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வு ஒரே இடத்தில் கிடைக்கும்

## மையூரா (F) பஷன் மந்திர்



1. கரும்புள்ளி அகற்றல்
2. முகப்பருவிற்கான சிகிச்சை
3. சத்திரசிகிச்சை தழும்புகள்
4. கருமை நிறத்தினை குறைத்தல்
5. பித்தவெடிப்பு மற்றும் கை, கால், நக வெடிப்புக்கள் மற்றும் தோல் உரிதல் பிரச்சினைகளுக்கான தீர்வு.
6. முடி கொட்டுதல் பிரச்சினை மற்றும் முடிவெடித்தல் வளராமை பிரச்சினைகளுக்கான தீர்வு.
7. கழுத்து கறுப்பு நீக்குதல்
8. உடல் எடை கூட்டுதல் மற்றும் குறைத்தல்
9. செந்நிற முடியை கருமையாக்குதல்
10. கண்புருவ வளர்ச்சிக்கான சிகிச்சை
11. கருவளையம் நீக்குதல்
12. உதடு வெடிப்பு மற்றும் கருமை நிற உதட்டு பிரச்சினைக்கான தீர்வு.



குறிப்பு:-அனைத்து பிரச்சினைகளுக்கும் இயற்கை மூலிகைகளின் மூலம் சிகிச்சை அளிக்கப்படும். (சி-129)


## மரண அறிவித்தல்

### திருமதி திருமலர் சண்முகசுந்தரம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருமலர் சண்முகசுந்தரம் 14.02.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகசுந்தரத்தின் அன்பு மனைவியும், சண்முகநாதன் (நாதன் வோச் வேக்ஸ்), வாசுகி (கொக்குவில் இந்துக் கல்லூரி). நாளினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.02.2015) 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமுப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (9522)

தகவல்:
பிள்ளைகள்


## தையல்கலை பயிற்சி வகுப்புக்கள்

நவ நாகரிகத்திற்கேற்ற வகையில் சகல டிசைன்களில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்களால் தையல் பயிற்சி வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

**மையூரா (F) பஷன் மந்திர்**
71, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சி-129)
தொடர்புகளுக்கு:-0775242852, 0215688645


## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.ஒஸ்மானியா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி ஜின்னா மைதானத்தில் பாடசாலை அதிபர் வி.மகேந்திர ராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதர் ஏ.நடராஜன், சிறப்பு விருந்தினராக முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.எம். முகுதர், கௌரவ விருந்தினராக கரித்தாஸ் கியூடெக் பணிப்பாளர் வணக்கத்துக்குரிய ஏ.ஜே. ஜாவீஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

## மணல் பறிமுதல்

சட்டவிரோத மணல் விற்பனையில் ஈடுபட்டு வந்த நபரை கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் அவரிடம் இருந்த மணலைப் பறிமுதல் செய்து உள்ளனர்.

இச் சம்பவம் நேற்று பி.ப 2 மணியளவில் துன்னாலை வேம்படி பகுதியில் இடம் பெற்றது.

குறித்த பகுதியில் உள்ள வீட்டு காணியொன்றில் வைத்து சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட மணலே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.(செ-60)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பணியாள் தேவை

உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் உடன் தேவை.
- பராட்டா தயாரிப்பவர்
- உணவு பரிமாறுபவர்கள்

தொடர்புகளுக்கு:
0771711215, 0771262724 (C-130)

## தேவை

தையல்வேலைதெரிந்தபெண்பிள்ளைகள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
நேரில் தொடர்பு கொள்ள:-
0775242852, 0215688645 (சி-129)

## தவறிவிட்டது

நேற்று முன்தினம் ஜேர்மன் செப்பேட் வகை நாய் இலுப்பையடிச் சந்திக்கும், பழமுதிர்ச்சோலை சந்திக்கும் இடையில் காலை தவறிவிட்டது. கண்டுபிடித்து தருபவர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
T.P:0778933418 (9528)

## கடை வாடகைக்கு

இலக்கம் 40 (8B) ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 077-0761177 (9526)

## UNIVERSITY OF CAMBRIDGE CAMBRIDGE ENGLISH

**GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY**

The Cambridge English exams listed below are approved by the U.K Home Office for Spouses and Civil Partner visa Applications to the U.K

### Cambridge - Prelimnary English Test (PET)

- இது ஓர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லுரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

### Cambridge First Certificate in English (FCE)

FCE is an upper intermediate level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.

UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றனர்

### Cambridge Certificate in Advanced English (CAE)

CAE is an advanced exam. CAE tests the ability to communicate with confidence in English for work or study purposes. This exam is at CEFR Level C1

Subjects: Reading, Writing, Listening, Speaking, Use of English


நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழு வதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.


**புதிய வகுப்புக்கள் 16-02-2015ஆரம்பம்**

**Course Schedule**

| Mon,Tuse,Wed,Thur | | Saturday & Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | |
| Time | 10.00 - 12.00 | 03.00 - 05.00 |
| | 03.00 - 05.00 | Exam Date :- May & June |

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887 (இ-070)



தனியார்துறை ஊழியர்களின் சம்பளவுயர்வு தொடர்பாக **கௌரவ அமைச்சர் வேலாயுதம்** மற்றும் **கௌரவ பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க** ஆகியோரின் வேண்டுகோளிற்கிணங்க **தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரன்** அவர்கள் தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் குழாமிற்கு முதல் கட்டமாக 3500 ரூபாய் சம்பள உயர்வு வழங்குவதற்கு உறுதியளித்துள்ளார். (சி-128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study in CHINA

SICHUAN UNIVERSITY
**MBBS**
Approved by Sri Lankan Medical
GMC- UK, ECFMG-USA , IMED, WHO & UNESCO
* Asia's No 1 Medical / Dental University & 3rd largest in the world
* 33 hospitals in the campus including Asia's biggest hospital building with more than 5,000 beds

**ENGINEERING**
**Civil / Software**

100% Guaranteed Employment in USA, Canada UK, Australia & Europe After Study !!!

- 100% English Medium
- No IELTS / No Interview
- No Bank Balance
- 35% Scholarships Available
- 100% Visa Success
- Part time Job Allowed

Free Seminar/ Counseling Mon to Sat 9AM-3PM

ICS Study Overseas
107 B 1/1 ,Galle Road, Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
021 4926222 , 076 7013060



3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில் உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்

ரூபா.5மில்லியன்வரை பெற்றுக்கொள்ள முடியும்

நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்

ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.14,990 மட்டுமே

SINGER FINANCE நாடுங்கள்

உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்



தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்


## ஊழியர்களின் நன்மை கருதி விடுமுறை வழங்குங்கள்

ஊழியர்களின் நன்மைகருதி சிவராத்திக்குமறுநாள்விடுமுறை வழங்குமாறுயாழ்வணிகர் கழகம் வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்17.02.2015 அன்று சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் விரதமிருக்கும் வர்த்தக ஊழியர்கள் நன் மை கருதி அவர்கள் கோரிக்கைக்கு அமைவாக 18.02.2015 புதன் கிழமை அவர்களுக்கு விடுமுறைவழங்கிஉதவுமாறு யாழ்ப்பாண வர்த்தகர்களை யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொள்கின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

## வாய்மொழி மூல தேர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட தொழில்பயிற்சிநெறிகளினைப் பயின்ற மாணவர்களுக்கான வாய்மொழி மூல இறுதித்தேர்வு இன்றுநடைபெறவுள்ளது.

கணனி வன்பொருள் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், வீட்டுமின் இணைப்பாளர், மரவேலை தொழில் நுட்பவியலாளர், காச்சி இணைப்பவர், கட்டட நிர்மான உதவியாளர், நீர்க்குளாய் பொருத்துகை ஆகியோருக்கானவாய்மொழி மூல இறுதித் தேர்வு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.மேலதிக தகவல்களுக்கு 021 222 7949 என்ற இலக்கத் தைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# மரண அறிவித்தல்

## நாராணி நல்லதம்பி (சின்னத்துரை)



புதுக்குடியிருப்பு கோம்பாவில் 4 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட நாராணி நல்லதம்பி (சின்னத்துரை) அவர்கள் 13.02.2015 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் நல்லதம்பி நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாராணி சேதிப்பிள்ளை தம்பதியரின் மகனும் அமரர் ஆனந்தராசா சரசானந்த லட்சுமி, மகேஸ்வரி (ஆசிரிய ஆலோசகர் - வலயக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு) நாகேஸ்வரி, சோதிலட்சுமி (Holand), அமரர் விவேகானந்தம் அன்னலட்சுமி(Canada) ஆகியோரின் தந்தையாரும், பொ.பாலராசா (மேற்பார்வையாளர், புதுக்குடியிருப்பு வைத்தியசாலை) பி.தேவநேசன், அ.இராஜேந்திரம், ஆ.துரைராஜா (Holand), சு.கிரகலப்பிரதாபன் (Canada) ஆகியோரின் மாமனாரும் , பா.ஸாருஹாசன் (கணினிப் பொறியியலாளர், சிங்கப்பூர்) பா.ஹிந்துஹாஷன் (வைத்திய கலாநிதி, புதுக்குடியிருப்பு வைத்தியசாலை) ப.தரணியா (லண்டன்), இ.ஜனராஜ் (லண்டன்) இ.சோபிதன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), து.சாளின், து.சினோயன், து.சினோயா (Holand) கி.ஆபேரி கி.மதுமிதா, கி.மயூத் (Canada) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15.02.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் புதுக்குடியிருப்பு, கோம்பாவில், 4 ஆம் வட்டார இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுக்குடியிருப்பு.
கோம்பாவில்,
4 ஆம் வாட்டாரம்.

தகவல்:
குடும்பத்தினர்.



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

## ஆண்டுப் பொதுக்கூட்டம்- 2015

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளின் இணைந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2015 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமையன்று மு.ப 9.30 மணியளவில் பருத்தித்துறை வீதி,நெல்லியடி மாலுச்சந்தியிலுள்ள வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் தீர்மானங்கள் ஏதும் சமர்ப்பிக்க விரும்பின் அதனை 2015 பெப்ரவரி 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக செயற்குழுவின் பரிசீலனைக்கும் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படும் வகையில் உரியவர்கள் ஊடாகவோ நேரடியாகவோ இல.43, மூன்றாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் பொதுச் செயலாளரிடம் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவும்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

சி-119

தொடர்புகளுக்கு:
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்- 077 730 1021
செல்வராசா கஜேந்திரன்- 077 302 4316
அலுவலகம்- 021 222 3739

செல்வராசா கஜேந்திரன்,
பொதுச்செயலாளர்,
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி.

# இன்றைய இராசி பலன்

**01.02.2015**
தை 18, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 2.20 மணிக்கு
திருவாதிரை பிற்பகல் 5.39 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை
சுபநேரம் 8.36- 11.16 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**மீனம்:** பயணங்களால் பலனுண்டு, சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள் ,பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்:** சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்:** தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது, குடும்பத்தில் பொறுப்புக்கள் கூடும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்:** புண்ணியகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவீர்கள்.

**மகரம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம்மேலோங்கும்நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும் நாள்.

**சிம்மம்:** வருமானம் வருவதற்கான வழியைக் கண்டுகொள்வீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**தனுசு:** கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள்.

**விருச்சிகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் தாமதமாகவே நடக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**துலாம்:** புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியமான நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இறைவரித் திணைக்களத்தின் அலுவலகத்தை இடமாற்ற கலந்துரையாடல்


யாழ். மாவட்டத்திலுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சேவைகளை இலகுபடுத்தல் மற்றும் அலுவலகத்தை இடமாற்றம் செய்வது தொடர்பான கலந்துரையாடல், யாழ். மாவட்ட இறைவரித் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த குழுவுக்கும் திணைக்கள யாழ். அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், வரி செலுத்துபவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள், சேவைகளை வழங்குதில் உள்ள குறைபாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

வீரசிங்கம் மண்டபத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள இறைவரி திணைக்களத்துக்கு வரி செலுத்துபவர்கள் வந்து செல்வது சிரமமாக இருப்பதால் புதிய இடத்தை தெரிவு செய்து அலுவலகத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய வருகை தந்திருந்த குழுவினர் மிகவிரைவில் அதற்குரிய சரியான இடத்தை தெரிவு செய்து, திணைக்களத்தின் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிரதி பொது ஆணையாளர் ஜி.சுபஜரத்னே, வடமாகாண உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் எம்.கணேசராஜா, யாழ். மாவட்ட பொறுப்பு உதவி ஆணையாளர் திருமதி எஸ்.சர்வேஸ்வரன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (இ-5)







## சிவராத்திரி தினத்தன்று கர்ப்பூரம் ஏற்றி பிரார்த்தனை

(தொல்புரம்)

பொன்னாலைச் சந்தி நாராயணன் ஆலயத்தில் நாளை மறுதினம் 17 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று கலாபூஷணம் க.லோகேஸ்வரன் தலைமையில் மாலை 6 மணி தொடக்கம் விசேட பூஜை வழிபாட்டுடன் இரவு முழுவதும் கர்ப்பூரம் ஏற்றி பிரார்த்தனை இடம்பெறவுள்ளது. (இ-3-70)

## சிவராத்திரி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளன.

மாலை 5.55 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நள்ளிரவு 12 மணிக்கு சிவலிங்கத்திற்கு வில்வ அர்ச்சனை நடைபெறும். காலை 6 மணிக்கு மங்களாராத்தியுடன் நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன. (இ-3)

# பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் கடந்த பல வருடங்களாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் எந்தவிதமான வேதனமும் இன்றி சேவையாற்றி வந்த தொண்டராசிரியர்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு ஆசிரிய உதவியாளர்களாக (3 ஆயிரம் சம்பளத்துடன்) உள்வாங்கப்பட்டனர்.

ஆனாலும் இவ்வாசிரிய உதவியாளர் நியமனத்தில் மிகவும் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் கிட்டத்தட்ட 124 தொண்டராசிரியர்கள் குறிப்பிட்ட 3 வருட தொடர்ச்சியான சேவை மற்றும் குறிப்பிட்ட கல்வித்தகுதியை கொண்டிருந்தும் குறிப்பிட்ட ஆண்டிலிருந்து (2002) சேவையைக் கொண்டிருக்காத ஒரேயொரு காரணத்தினால் நாம் புறக்கணிக்கப்பட்டிருப்பதும் மிகவும் வேதனைக்குரியதொன்றாகும்.

ஆனாலும் நியமனத்தில் வேறு துறை சார்ந்தவர்களுக்கு (பகுதி நேர ஆங்கில ஆசிரியர், மீன்பிடி டிப்ளோமா) சேவைக் காலம் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது என்பதனையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

எனவே இவ்வாசிரிய உதவியாளர் நியமனம் வழங்கி எமக்கும் 3 ஆயிரம் ரூபா வேதனம் கிடைக்க மதிப்பிற்குரிய தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என நாம் நம்புகின்றோம்.

நாம் பல வருடங்களாக ஆசிரியத் தொழில் மேன்மையும் அதன் சமூக அந்தஸ்தையும் கருத்தில் கொண்டு நிரந்தர நியமனத்தின் போது எமது பெயர்களும் கருத்தில் கொள்ளப்படும் என்ற காரணத்தினால் வேறு தொழில்களுக்கு முயற்சி செய்யாது இருந்து வந்தோம்.

தற்போதைய நியமனம் வழங்கலில் நாம் புறக்கணிக்கப்பட்டு நட்டாற்றில் விடப்பட்டுள்ளோம் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருவதுடன் தாங்கள் இது தொடர்பில் எம்மீது கருணை கொண்டு மிகுதியாக உள்ள அனைவரையும் ஆசிரிய நியமனத்தில் உள்வாங்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம் என யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்கள் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிவராத்திரியை முன்னிட்டு சமய, கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய பரிபால்ன சபையும் சொக்கவளவு சோதி விநாயகர் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் சமய, கலை நிகழ்வுகள் நாளை மறுதினம் 17 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய மண்டபத்தில் பரிபாலன சபை செயலாளர் பொன். சந்திரவேல் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி.பிரகாஷ், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். உதயபாலன், யாழ். குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் த.தவராஜா, குப்பிளான் வடக்கு கிராம அலு வலர் ந.நவசாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# அச்சுவேலியில் 12 நிறுவனங்கள் தொழிற்சாலை அமைக்கக் கோரிக்கை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் 3 தொழிற்சாலைகள் தற்போது இயங்கி வருவதாக யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப்பணிப்பாளர் எஸ்.சிவகங்காதரன் தெரிவித்தார்.


இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், தரையில் பதிக்கும் சீமெந்து கல் தயாரிக்கும் தொழிற்சாலை, ஆணி, பிணைச்சல் உள்ளிட்ட மென் இயந்திரவியல் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, பிளாஸ்ரிக் குழாய் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியன தொழிற்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்களில் தற்போது 35 பேர் பணிபுரிந்து வருகின்றார்கள். காகிதம், நைலோன் கயிறு, ஜாம், கோடியல் போன்றவை தயாரிக்கும் 12 தொழிற்சாலைகள் அனுமதி கோரியுள்ளன.

அவற்றுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அவை பூர்த்தியானதும் இந்த தொழிற்சாலைகளும் இயங்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கில் இடம்பெற்ற நீண்ட கால யுத்தம் காரணமாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை இயங்காது இருந்த நிலையில் இந்தியாவின் நிதிப்பங்களிப்புடன் மீண்டும் இக்கைத்தொழில் பேட்டையின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்து வந்தது.

இருப்பினும் இக்கைத்தொழில் பேட்டையின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பணி மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# யாழ்.பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

நீதியமைச்சின் அதிகாரிகள் பருத்தித்துறைக்கு விஜயம் மேற்கொண்டு பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு புதிய கட்டடங்களை அமைப்பதற்கும் மற்றும் தேவையான காணியை ஒதுக்குவதற்குமான நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டுள்ளனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி கணேசராசா, மாவட்டப் பதிவாளர் மற்றும் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் என்பன இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை கடந்த 12 ஆம் திகதி மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை மாவட்ட நீதிபதி மற்றும் சட்டத்தரணிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி நீதியமைச்சரைச் சந்திக்கத் தீர்மானித்துள்ளனர். (இ-3)

# சிவராத்திரிதின நிகழ்வுகள் ஞானவேல் ஆச்சிரமத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் மகா சிவாராத்திரி தினத்தன்று மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 மணிவரை நான்கு சாமப்பூசைகள், ஓம் நமசிவாய பாராயணம், பஜனை, சத்சங்கம் மற்றும்கலை நிகழ்வுகள், வீடியோ ஒளிப்பதிவுக் காணொலிகளின் காட்சிப்படுத்தல் என்பன நடைபெறும்.

அத்தோடு ஒவ்வொரு அடியவர்களும் தாங்களே தமது லிங்கத்திற்கு சிவசகஸ்ரநாம அர்ச்சனை செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிகழ்விற்கான பதிவினை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிவரை இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் மேற்கொள்ளலாம் எனவும் மேலதிக தொடர்புகளுக்கு 021 222 3447 என்ற இலக்கத்துடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது (சி-9913)

## கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776


## கும்பாபிஷேகம்

யாழ்.நவாலி வடக்கு தேற்றாவத்தை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய கும்பாபிசேம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை இடம்பெற வுள்ளது.

கும்பாபிசேகத்திற்கு தேவையான அபிசே கத்திரவியங்களன் பால், தயிர், நெய், பழவ கைகள், இளநீர், பூக்கள் பூமாலைகள் என்பற்றை மிகவும் அழகாக உருவமைத்து தந்து உதவுமாறும் பெருமானின் அளுளாசிகளைப் பெற்றுய்யுமாறும் ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (இ-3)


## தொழில் வாய்ப்புக்கள்

உங்கள் வயதுக்கேற்ப 18-50 வயது ஆண், பெண் சம்பளம் 18000- 38000+ (தொழில் அடிப்படையில்) **கொழும்பை அண மித்த** பிரதான தொழிற்சாலைகள். (ஜாம், ரொபி, கோடியல், பிஸ்கட்) தனியார் துறைமுகம், விமான நிலையம், வாகன சாரதிகள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இலற்றீசியன், வெல்டர், தச்சு மற்றும் மேசன் கையுதவியாளர் உட்பட பல வேலை வாய்ப்புக்கள். உணவு,தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள், குழுக்கள், தம்பதியினராகவும் இணைந்து கொள்ளலாம்)
தொடர்புகளுக்கு:- 077 111 6770, 077 683 8231 (கு—)

## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= - 35.000/=வரை தங்குமிடம்,உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

077 792 0278, 077 628 9655 (9513)

## வைத்திய சேவை இடமாற்றம்

பரமேஸ்வரா சந்தியில் இயங்கி வந்த யாழ். மத்திய வைத்திய நிலையம் தற்பொழுது இலங்கை வங்கிக்கு முன்னால் தபால் கட்டை சந்தி இல. 89, பலாலிவீதி, திருநெல்வேலியில் இயங்குகிறது.

சேவை வழங்குபவர்கள்
காலை 09.00-10.00 மணிவரை Dr. வே. மகேந்திரன்
மாலை 03.00-06.00 மணிவரை Dr. இ.தெய்வேந்திரன்

விபரங்களுக்கு
தொலைபேசி:- 021 221 9332 (9474)


### கசிப்பு விற்ற பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம்

கசிப்பு விற்பனை செய்த இளம் பெண் ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

வடமராட்சி துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த இளம் பெண்ணே கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார்.பிரஸ்தாப பெண்ணை கடுமையாக எச்ச ரித்த நீதிபதி 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

(இ-3-60)


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 17 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BBA, MSC/ லண்டன்
தொ.இ: B/281

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 30 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: கணக்காளர்/ கனடா PR
தொ.இ: B/285

பிறப்பு: 1978 NON RC
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 14 சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: / விரிவுரையாளர்
தொ.இ: B/286

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 50 செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSC
எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்தானவர் விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/288

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 32
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/520

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 31 செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1522

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 15 செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1717

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 27
உயரம்: 167cm
தகைமை/தொழில்: BSC/ DEMO
தொ.இ: G/2368

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## சர்வதேச தரத்திலான தொழில்நுட்பக் கற்கைநெறிகள்Ê
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆரம்பம்.....

பெரும்பாலான மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

➢ க.பொ.த உயர்தர கணித பிரிவில் 3 பாடங்களில் சித்தி **அல்லது** பொருத்தமான NVQ 4 தகைமை உடைய மாணவர்களுக்கான பாடநெறிகள்

- **Higher National Diploma in Building Services Technology**
- **Higher National Diploma in Construction Technology**
- **Higher National Diploma in Farm Machinery Technology**
- **Higher National Diploma in Mechatronics Technology**
- **Higher National Diploma in Production Technology**

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 23.02.2015**

➢ க.பொ.த உயர்தர உயிரியல் பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது பொருத்தமான NVQ 4 தகைமை உடைய மாணவர்களுக்கான பாடநெறிகள்

- **Higher National Diploma in Farm Machinery Technology**
- **Higher National Diploma in Food Technology**

**Leads to B.Tech Degree**

**வயதெல்லை:- 31.12.2014 இல் 29 வயதிற்குட்பட்டோர்**
**அனைவருக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில பாடநெறி**
**அரசமானிய அடிப்படையிலான பாடநெறிக் கட்டணங்கள்**
**தவணை அடிப்படையில் கட்டணம் செலுத்துவதற்கான வசதிகள்**
**சமுர்த்தி பயனாளிகளுக்கு பாடநெறிக் கட்டணங்கள் இலவசம்.**

மின்னஞ்சல;: applications2015ucj@gmail.com

| கற்கைநெறி | காலம் | பாடநெறிக் கட்டணங்கள் |
|---|---|---|
| அடிப்படைக் கற்கைநெறி(Foundation) | 6 மாதங்கள் | இலவசம். |
| NVQமட்டம் 5 (Diploma) | 12 மாதங்கள் | ரூபா 30,000.00 |
| NVQ மட்டம் 6 (Higher Diploma) | 12 மாதங்கள் | ரூபா 30,000.00 |
| கைத்தொழிற்பயிற்சி (On the Job Training in Industries) | 6 மாதங்கள் | இலவசம். |

மேலதிக தொடர்புகளுக்கு;தொலைபேசி இல: 021-221 7792
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி,
இல-17, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.

UNIVERSITY COLLEGE

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
நெடுஞ்சாலைகள்,உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

UNIVOTEC


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடலோர காவற்படைக்கு அதிநவீன ரோந்து கப்பல்

(மன்னார்)

மன்னார் வளைகுடா மற்றும் பாக்குநீரிணை கடல் பகுதியை கண்காணிக்க, மண்டபம் இந்திய கடலோர காவற்படைக்கு அதிநவீன ரோந்து கப்பல் வழங்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கை வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என்று வெளியான தகவலை அடுத்து கடல்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இந்திய கடற்படை மற்றும் கடலோர காவற்படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கென, இரவு நேரத்தில் கண்காணிப்பை தீவிரப்படுத்தும் வகையில் அதிநவீன ரோந்து கப்பல் இந்திய கடலோர காவற்படைக்கு கடந்த ஜனவரி 15ஆம் திகதி கோவாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்த கப்பல் இன்று மண்டபம் கடலோர காவற்படை முகாமிற்கு வந்தது. இதனை மண்டபம் கடலோர காவற்படை தளபதி மோரே வரவேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மைத்திரியின் இந்திய வருகை நல்ல தொடக்கமாக அமையும்

## மத்திய அமைச்சர் ராதா கிருஷ்ணன் நம்பிக்கை

**இந்தியாவுக்கான இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வருகையானது இலங்கை, இந்திய உறவில் மீண்டும் நல்லதொரு தொடக் கத்தை ஏற்படுத்தும் என இந்திய மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**

கோவையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் மேலும் தெரிவிக்கையில், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற்க என்னை நியமித்துள்ளனர்.

மைத்திரி - மோடி சந்திப்பு இந்திய தமிழக் மீனவர் உரிமைகளை காப்பாற்றும் வகையில் அமையும். மேலும் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு புதிய வழியை காட்டும் வகையிலும் அமையும் என ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர்களுக்கு சகல அதிகாரங்களும் கிடைக்கும் வகையில் பா.ஜ.க. நடவடிக்கை எடுக்கும்.

மேலும் இலங்கை தமிழர்களை பழிவாங்கும் செயலில் ஈடுபட்டதாக காங்கிரஸ் மீது பொன். ராதாகிரு ஷ்ணன் குற்றச்சாட்டை சுமத்தி யிருந்தார் என்பது குறிப்பிடத்த க்கது. (இ-5)

# நீர்க்கேணியிலிருந்து ஒன்றரை வயது பெண்குழந்தையின் சடலம் மீட்கப்பட்டது

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மீராகேணியில் அமைந்துள்ள நீர்க்கேணிக்குள் விழுந்து ஒன்றரை வயது பெண் குழந்தை உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மீராகேணி, கலந்தர் வீதியில் வசிக்கும் யூசுப் இஸ்மாயில் பாத்திமா றிபாஸா (ஒன்றரை வயது) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. வீட்டில் இருந்த குழந்தை ஒன்று காணாமற் போயுள்ளது. இதனைத்தொடர்ந்து குழந்தையை தேடுவதற்காக, அக்குழந்தையின் பெற்றோர் குழந்தையின் கால்பாத தடங்களைத் தொடர்ந்து தேடிச் சென்றுள்ளனர்.

இதன்பொழுது குழந்தை நீர்க் கேணிக்குள் இறந்து கிடந்துள்ளது. பின்னர், குழந்தையின் சடலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாக மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் தெரிவித்தார்.

ஏறாவூர் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வேகமாக வந்த புகையிரதம் மோதியதில் பயணிகள் பேருந்து இரண்டாக பிளந்தது

மெக்சிகோவின் நுவோலியான் மாநிலத்தில் உள்ள அனாகுவாக் நகரில் நேற்று முன்தினம் பயணிகள் பேருந்து மீது சரக்கு புகையிரதம் மோதியதில் பேருந்து இரண்டு துண்டாக உடைந்தது. இந்த கோர விபத்தில் 16 பேர் பலியாகினர். 30 பேர் படுகாயமடைந்தனர்.

இது குறித்து அவசர சேவைகள் தலைவர் ஜார்ஜ் கமாச்சோ கூறுகையில், "சிக்னலை மதிக்காமல் பேருந்து புகையிரத கடவையை கடந்ததால் விபத்தில் சிக்கி இரண்டு துண்டானது" என்றார்.

இந்த விபத்தில் 16 பேர் இறந்தனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், பேருந்துக்கு அடியில் இன்னுமசிலர் சிக்கியிருப்பதால் பலி எண்ணிக்கை 20 வரை உயரும் என்றும் அவர்தெரிவித்தார். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 40 இருக்கைகளே கொண்ட அந்த பேருந்தில் 60 பேர் பயணித்ததாக உள்ளூர் பத்திரிக்கை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 110-140 | 150 | 130 | 150 |
| தக்காளி | 200 | 200 | 170 | 200 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 100 | 80 | 80 |
| கரட் | 150 | 120 | 100 | 150 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 40 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 | 100 | 140 |
| லீக்ஸ் | 180 | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 100 |
| முருங்கைக்காய் | — | 600 | — | 800 |
| போஞ்சி | 160 | 100 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50-55 | 40-50 |
| இராசவள்ளி | 110 | 120 | 100 | 100 |
| வெங்காயப்பூ | 60-100 | 100 | — | 120 |

# பிரிவுத்துயர் பகிர்வு



### கதிரவேலு முருகேசு

காரைநகரை பிறப்பிடமாகவும் கன்னாதிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு முருகேசு கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லதில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்



### பாலசிங்கம் வைத்திலிங்கம்

காரைநகரை பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் வைத்திலிங்கம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் காரைநகர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### செல்லையா சிவனொளிபாதம்

கள்ளப்பாடு வடக்கைச் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவனொளிபாதம் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கள்ளப்பாடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி தம்பிராசா சரஸ்வதி

காரைநகரை பிறப்பிடமாகவும் தங்கோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சரஸ்வதி நேற்று முன்தினம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன் னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட் கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சீராளன் சித்திரவேலு
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்)

யாழ்.அச்சுவேலியை பிறப்பிடமாகவும் கொழும்பு கல்கிஸ்ஸையை வசிப்பிடமாகவும் கொண்ட சீராளன சித்திரவேலு கடந்த 12 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.




### கந்தையா ஆறுமுகம்

முள்ளியவளையை பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா ஆறுமுகம் நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமைஅன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முள்ளிய்வளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

சரவணை கிழக்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தர்மலிங்கம் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### அம்பலவாணர் பாலசிங்கம்
(இளைப்பாறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்)

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் திருநகர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அம்பலவாணர் பாலசிங்கம் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் திருநகர் வடக்கு, பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.



### வீரசிங்கம் சகாதேவசங்கரி
(ஓய்வுபெற்ற பதில் முகாமையாளர் மக்கள் வங்கி)

அச்சுவேலியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சகாதேவசங்கரி கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சிக்குழுவுடனான மோதலில் 47 இராணுவத்தினர் உயிரிழப்பு!

(பர்மா)

**பர்மாவில் ஒரு சிறிய கிளர்ச்சிப் படையினருடன் கடந்த நான்கு நாட்கள் இடம்பெற்ற மோதலில் இராணுவத்தினர் 47 பேர் கொல்லப்பட்டுள்ள அதேவேளை, 73 பேர் படுகாயமடைந்துள்ளதாக அரசாங்க ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.**

கோகங்கில் பர்மிய இராணுவத்தினர் சீனாவுடனான எல்லைக்கு அருகே இருக்கும் கோகங இன குழுவைச் சேர்ந்த இந்த மோதலில், இராணுவம் வான்தாக்கு தலையும் பயன்படுத்தியதாக முக்கிய அரசாங்க பத்திரிகை கூறியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் பர்மாவில் நடந்த மிகப்பெரிய மோதல் இதுவாகும்.

கடந்த 5 வருடங்களாக சீனாவில் நாடுகடந்து வாழ்ந்த கிளர்ச்சிக் குழுவின் ஒரு தலைவர் நாடு திரும்பியதை அடுத்தே இந்த மோதல் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

# 200 பேருடன் சென்ற படகு திடீரென கவிழ்ந்து விபத்து

(டாக்கா)

பங்களாதேஸின் கடற்கரை மாவட்டமான பர்குனாவில் நேற்று முன்தினம் சுமார் 200 பேருடன் சென்ற படகு கவிழ்ந்த விபத்தில் ஐவர் பலியாகியுள்ளனர்.

இங்குள்ள குகாட்டா பகுதியை சேர்ந்த சுமார் 200 பேர் பர்குனாவில் உள்ள ஒரு தர்காவில் நடைபெறும் விழாவில் பங்கேற்பதற்காக பைரா ஆற்றின் வழியாக படகில் சென்றனர்.

கொள்ளளவை விட அதிகமான நபர்களை ஏற்றிச் சென்ற அந்தப் படகில் திடீர் விரிசல் ஏற்பட்டதால் படகு ஆற்றில் கவிழ்ந்தது.

அதில் பயணித்தவர்களில் பலர் நீந்தி கரையை வந்தடைந்தனர். எனினும், நீச்சல் தெரியாத 5 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

காணாமற் போன மேலும் சிலரை தேடும் பணியில் கடலோரக் காவல் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# டில்லி முதல்வராக மீண்டும் கெஜ்ரிவால்



டில்லி முதல்வராக ஆம் ஆத்மி கட்சியின் தேசிய அமைப்பாளர் அர்விந்த் கெஜ்ரிவால் நேற்று பதவியேற்றுள்ளார்.

அர்விந்த் கெஜ்ரிவால், டில்லியின் 8ஆவது முதல்வரானார். ஜன் லோக்பால் மசோதாவை நிறைவேற்ற முடியாமல் ஆட்சியை கலைத்து சரியாக ஓராண்டு ஆன பின்னர் ஆம் ஆத்மி கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது.

டில்லி துணை நிலை ஆளுநர் நஜீப் ஜங் அவருக்கு பதவிப் பிரமாணம், இரகசிய காப்புப் பிரமாணம் செய்து வைத்தார்.

# 6மாத சிறை வாசத்துக்குப்பின் ஜாக்கிசானின் மகன் விடுதலை

(பீஜிங்)

சீனாவில் நகர்ப்புறங்களில் போதைப்பொருள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சாதாரண மனிதர்கள் மட்டுமின்றி பல்வேறு பிரபலங்களும் இதில் சிக்கியிருப்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இரகசிய நடவடிக்கைகளில் பல்வேறு திரையுலக பிரபலங்கள் கைது செய்யப்பட்டனர்.

இதில் புகழ்பெற்ற நடிகர் ஜாக்கிசானின் மகனும், நடிகருமான ஜெய்சீசானும் சிக்கினார். கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட ஜெய்சீசான் போதைப்பொருள் பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அவரது வீட்டில் இருந்து 100 கிராம் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

அவர் மீது, போதைப்பொருள் பயன்படுத்தியது, போதைப்பொருள் பயன்படுத்தியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது உள்ளிட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் ஜெய்சீசானுக்கு 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தண்டனைக் காலம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது. இதைத்தொடர்ந்து ஜெய்சீசான் நேற்று முன்தினம் காலையில் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

சீனாவின் போதை ஒழிப்பு பிரிவின் விளம்பர தூதராக கடந்த 2009ஆம் ஆண்டு ஜாக்கிசான் செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# படுகொலைகள் தடுக்கப்படுமா?

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் மீண்டுமொருமுறை தீவிரவாதிகளின் கொடூர முகம் வெளிப்பட்டுள்ளதை பள்ளி வாசலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது. பெஷாவர் பகுதியில் இயங்கி வந்த இராணுவப்பாடசாலை மீதான தாக்குதல் சம்பவத்தின் சோகம் மறைய முன்னர் மீண்டும் அங்குதீவிரவாதிகள்நாசவேலையை அரங்கேற்றியுள்ளனர்.

பாகிஸ்தானில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் தலிபான் தீவிரவாதிகள் கடந்த டிசெம்பர் மாதம் பாடசாலைக்குள் புகுந்து மாணவர்கள் உட்பட 141 பேரை சுட்டுப் படுகொலை செய்து கோரத் தாண்டவம் ஆடியதை சர்வதேசம் என்றும் மன்னிக்காது.

நீதி கேட்டு போராடும் உயிரிழந்த ஆத்மாக்கள் சாந்தியடையாது. அவர்களின் அழிவை எதிர்பார்த்து காத்திருக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ஆனாலும் தீவிரவாதிகளின் அழிவுக்காக காத்திருக்கும் ஆத்மாக்களின் எண்ணிக்கை பாகிஸ்தானில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதே தவிர அது குறைந்தபாடாக இல்லை.

ஈராக், சிரியா நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பிணைக் கைதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு காணொலி வெளியிடுவதும் கப்பம் கோருவதும் பின்னர் அவர்களை கழுத்து அறுத்தும், சுட்டும், பெற்றோல் ஊற்றி படுகொலை செய்வதும் என பிஸியாகவுள்ள நிலையில் தீவிரவாதிகளை ஒடுக்குவோம் என்று நாளுக்கு ஒருவர் என சூளுரைத்துக் கொண்டு இருப்பதும் உலகத்தலைவர்களின் வழக்கமாக மாறிவிட்டது.

மக்களை பாதுகாக்க வேண்டிய நேரத்தில் மௌனமாக இருந்துவிட்டு மனிதீவுரிமை மீறப்பட்டு விட்டது என்று மாநாடுகளைக் கூட்டுவதால் பலன் ஏதும் உண்டா?

மக்களின் மனங்களில் வெறுப்புத்தான் உண்டாகும் என்பதை மனிதவுரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று போராடும் அமைப்புக்கள் புரிந்து கொண்டு தமது வழமையான நடவடிக்கைகளை மாற்றிவிட்டு செயலில் இறங்க வேண்டும்.

பாகிஸ்தானின் பெஷாவர் நகர் மரணங்கள் மலிந்த பூமியாக மாறி வருவதை சர்வதேச நாடுகள் உணராமல் இருக்க வாய்ப்பில்லை.

ஆனால் உதாசீனப்படுத்துகின்றனர் என்பது புலனாகின்றது. அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பொங்கி எழுந்தவர்கள், தீவிரவாதத்தை ஒழிக்க கங்கணம் கட்டியவர்கள் பெஷாவர் படுகொலைக்கு இதுவரை பதிலுக்கு மாநாடுகளைக் கூட்டியதைத் தவிர வேறு ஏதேனும் செய்யவில்லை என்பது பாகிஸ்தான் மக்களின் மனக் குமுறலாகவுள்ளது.

பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகள் படுகொலை செய்யப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பார்கள் என்று எந்தவொரு பெற்றோரும் நினைத்திருக்க மாட்டார்கள். நினைத்திருந்தால் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பியிருக்கமாட்டார்கள்.

பாடசாலைகள் மீதும் வைத்திய சாலைகள் மீதும் தாக்குதல்கள் இடம்பெறுவது ஒன்றும் புதிதல்ல. அது வன்னி இறுதிப் போரிலும் இடம்பெற்றது என்பதற்கான பல ஆதாரங்கள் வெளிவந்தன.

அதை மறக்கவும் முடியாது. யாரும் மறைக்கவும் முடியாது. பாகிஸ்தானில் நடந்தாலும் இலங்கையில் நடந்தாலும் ஏன் அமெரிக்காவில் நடந்தாலும் சர்வதேச விதி முறைகளுக்கு முரணானதே.

பெஷாவர் பாடசாலைப் படுகொலை இடம்பெற்று மூன்று மாதங்கள் ஆவதற்கு முன்னர் அந் நகரிலுள்ள மசூதிக்குள் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 20 பேர் பலியாகியுள்ளனர் என்ற செய்தி உலக நாடுகளை மீண்டும் கலக்கமடைய வைத்துள்ளது.

படுகொலைகளைத் தடுப்பதற்கு இனியாவது அதிகாரத்திலும் அசண்டையீனமாகயிருப்பவர்களும் முன்வருவார்களா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது. வேறு எதை நாம் செய்ய முடியும்.

(ஆர்.கே)



பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் இராணுவம் நடத்திவந்த பாடசாலை மீது கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 132 பாடசாலை மாணவர்கள் உட்பட 141 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

பாகிஸ்தானின் வடகிழக்கு பகுதியில் பெஷாவர் பகுதியில் நேற்று முன்தினம் தொழுகை நேரத்தின் போது அங்குள்ள சியா பிரிவு மசூதிக்குள் புகுந்த 2 தீவிரவாதிகள் அடுத்தடுத்து மூன்று இடங்களில் குண்டு வீசி தாக்குதல்களை நடத்தினர். இந்த தாக்குதலில் 20 பேர் பலியாகியுள்ளனர். 46 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். எந்த வகையான குண்டுகள் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.சபை அறிக்கையை வெளியிட வலியுறுத்தி யாழ்.பல்கலை.முன்றிலில் மாபெரும் போராட்டம்

## ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பவும் முடிவு

**(யாழ்ப்பாணம்)**

**ஐ.நா.விசாரணை அறிக்கை திட்டமிட்டபடி மார்சில் வெளியிடப்பட வேண்டுமென வலியுறுத்தி அனைத்து பொது அமைப்புக்களையும் ஒன்றிணைத்து மாபெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.**

இவ் ஆர்ப்பாட்டத்தின் பின்னராக இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கையை எதிர் வரும் மார்ச் மாதமே வெளியிட வேண்டுமெனக் கோரி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அறிக்கையொன்றும் அனுப்பி வைக்கப் படவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக முன்றிலில் மு.ப. 11 மணிக்கு நடத்தப்படவுள்ளதாகவும ஆகவே ஈழத்தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட் அநீதிகளுக்காக நீதி கோரி அனைவரையும் அணி திரளுமாறும் மேற்படி சங்கத்தின் தலைவர் ஆர்.இராசகுமாரன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலுள்ள ஆசிரியர் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற் கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழினத்திற்கு எதிராக காலங் காலமாக ஈழத்தில் நடைபெற்ற அநீதிகள் குற்றங்களுக்கு தமிழினம் இன்று நீதி கோரி நிற்கின்றது. பல்லாயிரக்கணக்கான உயிர்கள் கொடூரமாக கொன்றொழிக்கப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்டுள்ளது.

வயது வேறுபாடின்றி குழந்தைகளையும் கைகளில் உணவைக் கொடுத்து விட்டு கொன்ற சம்பவங்கள் இறுதி யுத்தத்தில் நடந்துள்ளன. இவ்வாறு தமிழினத்திற்கு எதிராக பல்வேறு அடக்குமுறைகள், அச்சுறுத்தல்கள், அட்டூழியங்கள் அரங்கேற்றப்பட்டன.

காலங்காலமாக இவ்வாறு தமிழினத்திற்கு எதிராக பேரினவாதிகளால் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு தமிழினத்தையே இல்லாதொழிக்கும் முயற்சிகள் இடம்பெற்று வந்துள்ளன. இவை இன அழிப்பென்பது அப்பட்டமாக வெளித்தெரிகின்ற உண்மையாகும்.

இவ்வாறு அழித்தொழிக்கப்பட்ட இனத்தின் குரல்ாகவே நாம் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். இதனை சர்வதேசம் சாதாரணமாக விசாரணையென்று கருதி விடாமல் அழிவுக்குள்ளான ஒரு இனத்தின் அழுகுரல் என்பதனை புரிந்து செயற்பட வேண்டும்.

இதற்கமையவே சர்வதேசத்தின் உதவியுடன் கடந்த வருடங்களில் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என்பதனை நிரூபிக்கும் வகையில் சரவதேச விசாரணையை ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கொண்டு வந்திருந்தோம்.

தற்போது அவ் விசாரணையின் அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் வெளியாகவிருந்த நிலையில இலங்கையில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசின் வேண்டுகோளுக்கு இணங்க அவ்வறிக்கையினை பிற்போடுவதற்கு பல சர்வதேச நாடுகள் முயன்று வருகின்றன.

இந்நிலையில் அதனை மார்ச் மாதமே வெளியிடக் கோரியே மாபெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம். இதற்கு வடக்கு, கிழக்கிலுள்ள பொது அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

எனவே இந்தப் பேரணியில் அனைவரும் கலந்து கொண்டு ஈழத்தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைக் கோரியும் ஈழ்த் தமிழினத்தின் விடுதலைக்கும் தொடர்ந்தும் வீறு நடையுடன் செயற்பட வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஷிரந்தி மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறைப்பாடுகள் இல்லை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ மீதான குற்றச்சாட்டு தொடர்பில் இதுவரை பொலிஸாருக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஷிரந்தி ராஜபக்ஷ, சிரிலிய சவிய என்ற பெயரில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று நடத்தியமை மற்றும் போலி அடையாள அட்டைகளை விநியோகித்து வங்கி கணக்குகளை ஆரம்பித்தமை சம்பந்தமாக பொலிஸாருக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மக்கள் வங்கியின் அதிகாரியினால் தகவல்கள் வெளியாகியதன் பின்னரே சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.

வங்கி அதிகாரியின் தகவலில் ஷிரந்தி ராஜபக்ஷவின் 222222 222V என்ற இலக்கம் கொண்ட அடையாள அட்டை தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)




- கி.மு 399 - மெய்யியலாளர் சாக்கிரட்டீஸ் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்.
- 590 - பாரசீகத்தின் மன்னனாக இரண்டாம் கொஸ்ராவு முடி சூடினான்.
- 1637 - புனித ஒரோம் பேரரசின் மன்னனாக மூன்றாம் பேர்டினண்ட் முடிசூடினான்.
- 1898 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் USS Maine கியூபாவில் அவானா துறைமுகத்தில் வெடித்து மூழ்கியதில் 260 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இந்நிகழ்வையடுத்து அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.
- 1920 - யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ந்தது. கிட்டத்தட்ட 80,000 இந்திய, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஆஸ்திரேலியப் படையினர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர்.
- 1946 - ENIAC என்ற முதல் தலைமுறைக் கணினி அறிமுகமானது.
- 1950 - சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக் குடியரசு ஆகியன பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1989 - ஒன்பது ஆண்டுகால ஆக்கிரமிப்புக்குப் பின் ஆப்கானிஸ்தானிலிருந்து அனைத்து சோவியத் படைகளும் வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.
- 1994 - ரஷ்யா தார்த்தஸ்தானை ஒரு உட்குடியரசாக இணைத்துக் கொண்டது. தார்த்தஸ்தானின் விடுதலைக்கான போர் ஆரம்பமானது.
- 1999 - குர்டிஸ்தான் தீவிரவாதத் தலைவர் அப்துல்லா ஒக்கலன் துருக்கிய இரகசியப் படைகளினால் கென்யாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
- 2005 - யூடியூப் சேவை ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

**பிறப்புகள்**

- 1564 - கலிலியோ கலிலி, இத்தாலிய வானியலாளர், இயற்பியலாளர் (இ. 1642)
- 1861 - ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலாளர் (இ. 1947)
- 1861 - சார்ல்ஸ் கில்லோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர், (இ. 1938)
- 1873 - ஹான்ஸ் இயூலர்-செல்ப்பின், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1964)
- 1922 - டி. பி. விஜயதுங்க, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி
- 1949- அனுர பண்டாரநாயக்க- இலங்கையின் அரசியல்வாதி. (இ.2008)
- 1956 - டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், மேற்கிந்தியத் தீவுகள கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாளர்.
- 1984- மீராஜஸ்மின்- மலையாள திரைப்பட நடிகை

**இறப்புகள்**

- 1973 - அழகு சுப்பிரமணியம், ஆங்கில எழுத்தாளர், இலங்கையர். (பி. 1915)
- 1988 - ரிச்சார்ட் பெயின்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர், (பி. 1918)
- 1999 - ஹென்றி கென்டால், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர், (பி. 1926)



**சாக்கிரட்டீஸ்**

சாக்கிரட்டீஸ் ஏதென்சைச் சேர்ந்த ஒரு மெய்யியலாளர் (தத்துவ ஞானி) ஆவார். இவர் மேற்கத்திய தத்துவ மரபின் முக்கியமான சின்னமாகத் திகழ்பவர்களுள் ஒருவர்.

இவருடைய சீடர் பிளேட்டோவும் புகழ்பெற்ற தத்துவஞானி ஆவார். கிரேக்க நாட்டின் தத்துவஞானி என்றும், உலகத்தின் முதல் தத்துவ ஞானி என்றும் இவர் போற்றப்படுகிறார். மதவாதிகளை நோககி "கடவுள் என்பவர் யார்?" எனக் கேள்வி கேட்ட முதல் பகுத்தறிவாளர், இவர் தான். சிறுவனாக இருந்தபோதே இவர் கேள்விகள் கேட்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். எதைப் பற்றியும் கேள்வி கேட்டு, அது பற்றிய உண்மையை அறிந்துகொள்வதே இவரின் வழக்கமாகும். நீதி, நியாயம், ஆத்மா, கடவுள், சமூகம், அரசு, சம்பிரதாயம் என எல்லாவற்றையும் ஆய்வுக்கு உட்படுத்தினார் சாக்ரடீஸ். இவரின் இந்தக் கேள்வி கேட்கும் முறை ஏதென்ஸ் நகர இளைஞர்களைக் கவர்ந்தது. அவரின் கேள்வி கேட்கும் பழக்கம் இளைஞர்களிடமும் தொற்றிக் கொண்டது. கிரேக்க சமூகத்தில் காலகாலமாக கடைப்பிடித்து வந்த மூடக்கொள்கைகளையெல்லாம் இவரை சிந்திக்க வைத்ததல்லாமல், மெல்ல இளைஞர்களையும் மாற்ற ஆரம்பித் திருந்தது. இது ஏதென்ஸ் அரசுக்கு தெரியவந்தது.

சாக்ரடீஸ் இருக்குமிடங்களில் எப்போது இளைஞர்கள் கூட்டம் சூழ்ந்திருப்பது சிலருக்கு எரிச்சலைத் தந்தது. சாக்ரடீஸ் தினம்தோறும் இளைஞர்களிடம் உரையாடியது கிரேக்க ஆட்சியாளர்களை கோபப் படுத்தியது. அவர் மீது கடும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இளைஞர்களைத் தூண்டி விடுவதாகவும், மத எதிர்ப்பை எழுப்பி விடுவதாகவும், தனக்குப் பெருமை சேர்ப்பதற்காக சாக்ரடீஸ் தவறான வழிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்காகவும், அதன் வழியாக ஏதென்ஸ் அரசுக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும் சாக்ரடீஸ் மீது அனிடஸூம், லைகோனும், மெலிட்டஸூம் குற்றம் சுமத்தி வழக்குத் தொடுதத னர். இதன்போது நீதிமன்றத்தில் தர்ப்பு கூறும் தருணம் வந்தது . மரணம், மன்னிப்பு என்ற இரண்டு பெட்டிகள் வைக்கப்பட்டன . நீதிக் குழுவின் உறுப்பினர்கள் 501 பேர் வாக்குப் பதிவு செய்யத்தொடங்குகின்றனர். 220 பேர் சாக்ரடீஸை மன்னித்து விடுமாறும் 281 பேர் மரண தண்டனை அளிக்கவும் வாக்களித்தனர். நீதிபதிகள் சாக்ரடீஸ் குற்றவாளி தான் என்று தீர்ப்புக்கூறி அவருக்கு விஷம் கொடுத்துக் கொல்ல வேண்டும் என்று கி.மு. 339 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி நீதிபதிகள் உத்தரவிட்டனரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 நாள் திட்டத்தை குழப்ப சதி முயற்சி!

## கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தை காரணம் காட்டி அரசாங்கம் கல்விக்காக பணம் அறவிடுவதாகச் சிலர் பொய்யான வதந்திகளை பரப்பி வருவதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் குற்றம் சாட்டியுள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வியை சந்தித்து அடிப்படைவாத அரசியல் குழுக்களே இவ்வாறு வதநதகளை பரப்பி வருகின்றன. இது குறித்து பெற்றோர் அவதானமாக இருக்குமாறு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



மிக நீண்ட காலமாக பாடசாலைகளின் வேறு தேவைகளுக்கு எனக்கூறி பெற்றோரிடமிருந்து பணம் அறவிடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வந்துள்ளது என முறைப்பாடுகள் வந்துள்ளன.

இந்த நடவடிக்கைகள் தொடர்பாக உடனடியாக விசாரணைகள் மேற்கொண்டு உடனடியாக பணம் அறவிடுவதை நிறுத்துமாறும் ஏதாவது அவசர தேவை இருப்பின் கல்வி அமைச்சின் அனுமதியுடன் குறிப்பிட்டளவு பணம் அறவிடலாம் என கல்வி அமைச்சு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியது.

இதனை சாதகமாக்கிக் கொண்டு அரசின் 100 நாட்கள் திட்டத்தை குழப்பும் வகையில் இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர் என்றும் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும். அத்துடன் வரவு - செலவு திட்டத்தில் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கப்படும் வரையே இந்த பணம் அறவிட முடியும் என்பது செல்லுபடியாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பசில் ராஜபக்ஷ என்னை ஓரம் கட்ட முயற்சித்தார்

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தம்மை ஓரம் கட்ட முயற்சித்தார் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார. கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய டிக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தோல்வியைத் தழுவ பசில் ராஜபக்ஷவும் ஓர் காரணமாகும்.

முழுப் பிழையையும் அவர் மீதே சுமத்தி விட முடியாது. பசில் ராஜபக்ஷ என்னுடன் கோபித்துக் கொண்டிருந்தார். எனது விபரங்களை என்னைப் பற்றிய செய்திகளை அரச ஊடகங்களில் பிரசாரம் செய்ய வேண்டாம் எனவும் அவர் உத்தரவிட்டிருந்தார்.

இந்த விடயங்கள் குறித்து நான் தனியான செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தெளிவுபடுத்துகின்றேன். என்னிடம் உலங்கு வானூர்தி உண்டு. உலங்கு வானூர்தி வைத்திருப்பது அவ்வளவு பெரிய விடயமல்ல.

50 மில்லியன் கொடுத்து உலங்கு வானூர்தி வாங்கினேன். சிலர் 40 மில்லியன் பெறுமதியான வாகனங்களை வைத்திருக்கின்றார்கள். நான் ஓர் வர்த்தகர், வங்கிக் கடன் பெற்று பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேன். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் பலப்பிட்டியவில் போட்டியிடுவேன். மக்கள் என்மீது நம்பிக்கை கொணடுள்ளனர் என அவர் சிங்கள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார். (இ-5)

## மாடியிலிருந்து விழுந்த மாணவன் மரணம்

அம்பாறை, அட்டாளைச்சேனை ஷர்க்கி அகில இலங்கை அறபுக்கல்லூரி மாணவன் கல்லூரியின் 3ஆவது மாடியிலிருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விழுந்து ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி அன்று இரவு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் குர்ஆன் மனனம் செய்யும் மூன்றாம் வருட மாணவன் என்றும் இவர் வாழைச்சேனையைச் சேர்ந்த ஏ.றவுசுடீன் (வயது-16) என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.05இற்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கல்லூரியின் 3ஆவது மாடியிலிருந்து விழுந்த மாணவனை, சக மாணவர்கள் உடனடியாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். இதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி மாணவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## அசாத்சாலியின் கருத்துக்கு பொதுபல சேனா கண்டனம்

(கொழும்பு)

முஸ்லிம் அரசியல்வாதியான அசாத் சாலி, பொதுபல சேனா குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்களை அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே வன்மையாகக் கண்டித்துள்ளார்.

மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில், இலங்கை முஸ்லிம்களை சர்வதேசப் பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி ஞானசார தேரர் மற்றும் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே ஆகியோர் வெளியிட்டிருந்த கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இதற்கு மறுப்பளித்து பொதுபல சேனா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே இவ்வாறு கண்டித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

தான் வெளியிடாத ஒருகருத்தை, முஸ்லிம்கள் மத்தியில் இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றைத் தூண்டி மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து வரும் அரசியல்வாதியான அசாத்சாலி தெரிவித்துள்ளார். இவரது கருத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தொடர்ந்தும் பொய்யான அறிக்கை விட்டு இவர் மக்கள் மத்தியில் பிரபலம் அடைந்து வருகின்றார். நான் சொல்லாத ஒரு செய்தியை தெரிவித்ததாக கூறி, பௌத்த, முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி, எதிர்வரும் தேர்தலில் வாக்குச் சேகரிப்பில் ஈடுபடும் வெட்கம் கெட்ட ஒரு முயற்சியாகவே இதனை சாதாரண அறிவுள்ள ஒரு முஸ்லிமும் புரிந்துகொள்வார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது மத ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவித அறிவித்தலும் எம்மாள் விடுக்கப்படவில்லை. மூளையுள்ள எவரும் இது தொடர்பில் பரிசீலனை செய்து பார்த்துக் கொள்ள முடியும். பொலிசுக்கோ அல்லது தேவையான எவருக்கும் இது குறித்து பார்த்து அறிந்துகொள்ள முடியும்.

சிங்கள பௌத்த மக்களின் பாதுகாப்பு, இருப்பு தொடர்பிலும் குறிப்பாக, மதவாத மற்றும் இனவாத பயங்கரவாதத்திலிருந்து எமது தாய் நாட்டை காப்பதற்குத் தேவையான எந்தவொரு நீதியான போராட்டமொன்றை முன்னெடுக்க நாம் பயப்பட மாட்டோம் எனவும் அந்த அறிக்கையில் பொதுபல சேனாவின் நிறைவேற்று அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### சரித்திரச் சம்பவம்

"நல்வாழ்த்துக்கள்"

"என்ன... திடீரென்று"

"இன்றைக்கு உங்களுடைய பிறந்தநாள் சேர்"

"ஓ... மறந்துவிட்டேன்"

"என்ன இது... நீங்கள் ஒரு சரித்திரப் பேராசிரியர். சரித்திரக்கால சம்பவங்களையெல்லாம் சரியாக ஞாபகம் வைத்திருக்கிறீர்கள், ஆனால் உங்களுடைய பிறந்தநாளை மறந்து விடுகிறீர்கள்"

"ஹி! அது இருக்கட்டும். உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா?

"என்ன... சரித்திர விடயம் ஏதாவது சொல்லப் போகிறீர்களா?"

"ஆமாம். 1957 இல் நடந்த சம்பவம் செக்கோஸ்லா வாக் கியாவில் சாத்தான் ஏரி என்று ஒரு ஏரி உண்டு. அந்த ஏரியில் ஒரு பையன் தவறி விழுந்து விட்டான். அவனைத் தேடி நீச்சல் வீரர்கள் போனார்களாம். ஒரு ஆழமான இடத்தில் ஏரியின் தரைப் பகுதியில் குதிரைகள் பீரங்கி சகிதமாக ஜேர்மன் படைப்பிரிவு ஒன்று போருக்கு தயாராக காத்துக் கொண்டி ருந்ததாம்"

"ஆச்சரியமாக இருக்கே... அது எப்படி?"

"நீச்சல் வீரர்கள் கரையேறி வந்து இந்த விடயத்தை கூறியதும் எல்லோருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்ததாம். ஆனால் அதன் பின்னர் பலர் ஆராய்ச்சி செய்து உண்மையைக்கண்டு பிடித்தார்களாம்"

"என்ன அது?"

"1945 இல் இரண்டாவது உலகப்போரின் இறுதிக் கட்டத்தை நாஜிப்படைகள் ரஷ்யக் குளிருக்குப் பயந்து பின்வாங்கியதால் அல்லவா? அப்போது ஜேர்மன் படைப்பிரிவொன்று இந்த ஏரி வழியாக ஓடிவந்து கொண்டிருந்தபோது பனிப்பாறை பிளந்து உள்ளே போய்விட்டது. அப்படியே சமாதியாகி விட்டது. அதைத்தான் இந்த வீரர்கள் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட் டிருக்கிறார்கள்"

"உங்களிடம் வந்துவிட்டால் பழையகால சமாச்சாரங்களுக்கு பஞ்சமேயில்லை சேர். செவிக்கு விருந்து கொடுத்து விட்டீர்கள். உங்கள் பிறந்தநாள் அதுவுமாக வாய்க்கும் அதுமாதிரி ஏதாவது கொடுக்கக் கூடாதா"

"இதோ வைத்திருக்கிறேனே லட்டு. எடுத்துச் சாப்பிடுங்க"

"தாங்ஸ் சேர். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ... சென்ற வருடம் உங்கள் பிறந்தநாளுக்கும் லட்டுத் தான் கொடுத்தீர்கள். அதுவும் நன்றாக இருந்தது. அதேபோல் இதுவும் நன்றாக இருக்கிறது"

"அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை"

"ஏன்?"

"அதுவேதான் இதுவும். அப்பொழுது தயார் பண்ணியதுதான்"

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தேர்தல்; இனவாதிகள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்



இலங்கை அதிபர் தேர்தலில், சிங்கள இனவெறிப் போர்க்குற்றவாளிகளான ராஜபக்சேக்களின் வீழ்ச்சி, சோனியா போன்ற பாசிசக் கூட்டாளிகளுக்கும், சோ, சு.சாமி முதலிய கைக்கூலிகளுக்கும் அதிர்ச்சிகரமாகவும், புலம் பெயர்ந்த தமிழின ஆதரவாளர்களுக்கும் இந்தியாவிலுள்ள தமிழினவாதிகளுக்கும் எதிர்பாராததாகவும் அமைந்தது.

இலங்கை அரசியலில் இவ்வாறானதொரு மாற்றம் நிகழும் என்பது அவர்கள் அனைவரும் கனவிலும் எண்ணிப்பாராதது.

வே.பிரபாகரனின் தற்கொலைப் போர்ப் பாதையைச் சாதகமாகக் கொண்ட சிங்கள இனவெறி பாசிச இராணுவம் விடுதலைப்புலிகளோடு இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை இனப்படுகொலை புரிந்து ஈழப்போரில் அடைந்த வெற்றியின் கவர்ச்சி மங்கிப்போவதற்கு முன்பு, பலனை மேலும் அறுவடை செய்து கொள்வது மற்றும் சோதிடர்களின் ஆரூடங்களையும் வைத்து அரசியல் கணக்குப் போட்டார், ராஜபக்ச.

அவரது பதவிக் காலம் முடிவதற்கு இன்னும் இரண்டாண்டுகள் இருந்த போதும், அதிபர் தேர்தலில் மூன்றாவது முறையாகப் போட்டியிட முடியாது என்றாலும், சட்டத்தைத் திருத்தி தேர்தலை எதிர்கொண்டார். சிங்கள இனவெறி புத்தச் சாமியார்களின் உறுமயக் கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட போலி கம்யூனிஸ்ட் குழுக்கள், தமிழின இஸ்லாமியத் துரோகிகளின் குழுக்களுக்கு அதிகார, பதவி எச்சிலையை வீசி, வளைத்துப்போட்டு சிறுபான்மையாக இருந்த அவரது ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியைப் பெரும்பான்மையாக உருவாக்கிக் கொண்ட இந்த சிங்கள இனவெறி பாசிச ராஜபக்ச கும்பல், இலங்கையில் அசைக்க முடியாத சக்தியாகத் தன்னைக் கருதிக்கொண்டது.

ஆனால், ராஜபக்ச கும்பல் மூன்றாவது முறை அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டிருந்தால் ஈழத்தமிழர்கள்- இஸ்லாமியர் ஆகிய சிறுபான்மையினருக்கும் சிங்கள சமூகத்துக்கும் பேரழிவை விளைவித்திருக்கும். அக்கும்பல் நடத்தி வந்த ஜனநாயக விரோத, சட்டவிரோத, மக்கள் விரோத வெள்ளைவான் ஆள்கடத்தல்- பாசிசக் கொலை வெறியும் லஞ்ச- ஊழலும் அதிகார முறைகேடுகளும் நிரம்பி வழியும் ராஜபக்சக்களின் குடும்ப அதிகாரத்தைக் கண்டு; இனங்களைக் கடந்து இலங்கை மக்களில் பெரும்பான்மையினர் அதற்கெதிராகக் குமுறிக்கொண்டிருந்தனர். இதனால்தான் முற்றிலும் எதிர்பாராத வகையில்,

> “இராஜபக்சேக்களின் அரசியல் வீழ்ச்சியும், ஈழத்தமிழர்களின் சில கோரிக்கைகளையேனும் ஏற்கும் சிறீசேனா-ரணில் அரசு அமைந்திருப்பதும், ஈழச் சிக்கலுக்கான தீர்வுகளை மாறாநிலையியல் பார்வையில் அணுகக்கூடாது என்பதைத் தமிழினவாதிகளுக்கு இடித்துரைக்கிறது.”

மக்கள் ஆதரவு பெற்ற எதிர்த்தரப்பை அக்கும்பல் திடீரென்று தேர்தல் அரசியல் களத்தில் கண்டது.

ராஜபக்ச கும்பலின் சுகாதார அமைச்சராக இருந்த மைத்திரிபாலா சிறீசேனா வெளியேறினார். அவரோடு வெளியேறிய போட்டி ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் முதன்மை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து புதிய ஜனநாயக முன்னணியை அமைத்தனர்.

அதன் பொது வேட்பாளரான மைத்திரிபாலா சிறீசேனா, ஜாதிகா ஹெல உருமயா, ஜே.வி.பி. போன்ற சிங்கள இனவெறி அமைப்புகள், தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்கள் ஆதரவைப் பெற்று அதிபராகியுள்ளார். கொடுங்கோலன், போர்குற்றவாளி ராஜபக்ச கும்பல் வீழ்ந்தது. இலங்கையில் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் நிலைநாட்டப்போவதாக வாக்குறுதியளித்த கட்சிகளின் கூட்டணி அரசு ஏற்பட்டுவிட்டது.



இதனால், இலங்கையின், ஈழத் தமிழர்களின் இனச் சிக்கலுக்கு தீர்வு ஏற்பட்டு விடும் என்று மிகை நம்பிக்கை கொள்ள முடியாது. என்றாலும், இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் மாற்றங்கள் சிங்களவருக்கும் இஸ்லாமியருக்கும் சில உண்மைகளைச் சொல்லுகின்றன. ஈழத்தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் வாழ்வுரிமைகளை அங்கீகரிக்கும்படி சிங்கள சமூகம் நிர்பந்திக்கப்பட்டிருக்கிறது. ஈழத்தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் ஆதரவில்லாமல், சிங்கள இனவெறி பாசிச சக்திகளின் கோரப்பிடியிலிருந்து விடுபடவும் தமது ஜனநாயக உரிமைகளைப் பெறவும் முடியாது. அதேசமயம், இலங்கையில் ஒரு ஜனநாயக ஆட்சியில்லாமல், சிங்கள மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவைப் பெறாமல் ஈழத் தமிழர்களும் இஸ்லாமியர்களும் தமது வாழ்வுரிமைகளைப் பெறவும் முடியாது.

ஈழத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான முரண்பாடு எவ்வித மாற்றத்துக்கும் இடமில்லாதது. அவர்கள் எந்தவொரு புள்ளியிலும் ஒரு பொதுநோக்கில் ஒரே அணிவரிசையில் நிற்க முடியாது. சிங்கள மக்கள் அனைவரும் தங்களுக்குள்



முரண்பாடுகளின்றி, வெவ்வேறு பிரிவுகளின்றி, எவ்வித மாறுதலுமின்றி முற்காலத்திலும் ஒரே வார்ப்பாக ஈழத் தமிழர்களுக்கு ஒரு பகை இனம். அவர்களிடையே ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நட்புப் பாராட்டக் கூடிய சக்திகள் எவரும் கிடையாது. இவ்வாறான பார்வையையே மார்க்சியம் கற்றவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் தியாகு, மணியரசன் போன்ற தமிழினவாதிகளும் கொண்டிருக்கிறார்கள்.

எனவேதான், விடுதலைப் புலிகளின் போர் வெற்றி மட்டுமே ஈழச் சிக்கலுக்கான ஒரே தீர்வு என்று நம்பச் சொன்னார்கள். புலிகளின் அழிவுகளுக்குப் பிறகு ஏகாதிபத்தியமும் மற்றும் சர்வதேச சமூகமும் தான் ஈழத் தமிழர்களுக்கும் புலி ஆதரவாளர்களுக்கும் கதியென்று வழி சொன்னார்கள். ராஜபக்சக்களின் அரசியல் வீழ்ச்சியும் ஈழத்தமிழர்களின் சில கோரிக்கைகளையேனும் ஏற்கும் சிறீசேனா-ரணில் அரசு அமைந்திருப்பதும், ஈழச் சிக்கலுக்கான தீர்வுகளை மாறா நிலையியல் பார்வையில் அணுகக்கூடாது என்பதை அவர்களுக்கு இடித்துரைக்கிறது. இந்த உண்மையை புதிய ஜனநாயகம் சொன்னபோதெல்லாம், தமிழினவாதிகள் எல்லோரும் இந்தியர்கள் ஈழத்தமிழர்களுக்கு எதிரானவர்கள் என்று அவதூறு செய்தார்கள். தமிழினவாதிகள் தங்கள் இலட்சியமாகச் சொல்லிக்கொள்ளும் தமிழீழத் தனியரசு மீது அவர்களுக்கு உண்மையில் நம்பிக்கையோ, அக்கறையோ துளியும் கிடையாது. அதனால் தான் அதை அடையும் பாதையைப் பற்றியும், அதை அடைந்தாலும் தக்க வைத்துக் கொள்வது எப்படி என்பதைப் பற்றியும் பேச மறுக்கிறார்கள். (தொடரும்)

-வினவு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2015 - 14.03.2015



வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் நேரம்!
பரந்த மனப்பான்மையும், தெய்வ நம்பிக்கையும் கொண்ட மிதுன இராசி நேயர்களே!

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசி நாதன் புதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். மறைந்த புதனால் நிறைநத தனலாபம் கிடைக்கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். தனாதிபதி சந்திரனை, குரு பார்த்து மாதம் தொடங்குவதால் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். மனக்கவலை மாறி உள்ளத்தில் மகிழ்ச்சி குடியேறும்.

பத்தில் கேதுவும், செவ்வாயும் இணைந்து சஞ்சரிப்பது யோகம் தான் தொழிலில் மேன்மையுணடு. புதிய கூட்டாளிகள் வந்திணைந்து வளர்ச்சிக்கு கைகொடுத்து உதவுவர். தொழிற்சாலைகள் மற்றும் கம்பெனிகள் நடத்தும் இடத்தை விலை கொடுத்து வாங்க அல்லது விரிவுபடுத்த நினைப்பவர்கள் செய்யும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**வக்ர குருவின் ஆதிக்கத்தால் பகை விலகி பாசம் கூடும்.**

குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. அவர்களின் கல்யாணப் பேச்சுக்கள் முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் மகிழ்ச்சி அடையும் விதத்தில் வரன்கள் வாயில் தேடி வந்து சேரப் போகின்றன. அந்நிய தேசம் செல்ல வேண்டுமென்று எண்ணிய மாணவர்களுக்கு அதற்கான தேர்வில் வெற்றி பெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. சுக ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல.

ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் ஏற்படலாம். அலைச்சல் கூடுதலாக இருக்கும். வாகன மாற்றம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். பழைய வாகனங்களில் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். ஒரு சிலர் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சூரியன், சுக்ர சேர்க்கை இருப்பது நல்லதல்ல, சகோதர வழியில் விரயங்கள் ஏற்படலாம். உடன்பிறப்புகளின் வாயிலாக வரும் கடன் சுமை கூடலாம். அதற்குரிய பரிகாரங்களை செய்வதன் மூலம் நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம். குறிப்பாக இம்மாதத்தில் அங்காரக வழிபாடு செய்வது நல்லது. சுக ஸ்தானத்தில் ராகுவும், 10 இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப சாந்தி பரிகாரங்களை செய்வதன் மூலம் சந்தோஷத்தை தக்கவைத்துக் கொள்ள இயலும்.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**




# வாழ்க்கைத்தேவைகள் பூர்த்தியாகும் நேரம்!

பெப்ரவரி 17 ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். விட்டுப் போன வரன்கள் மீண்டும் வந்து மகிழ்ச்சியை வழங்கும். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்கி சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டுப் பயணங்கள் ஒரு சிலருக்கு அமையலாம்.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

கும்ப ராசியில் மார்ச் 4 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் 9 இல் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதார நிலை உயரும். புகழ் மிக்கவர்களின் சந்திப்பு கிடைக்கும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். பங்காளி பகை நீங்கும். தூர தேசத்திலிருந்து வரும் தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். புத-ஆதித்ய யோகத்தால் கல்வி மற்றும் கலைத்துறை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. வி.ஐ.பி.க்களின் சந்திப்பால் விருப்பங்கள் நிறைவேறும்.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 13 ஆம் திகதி மேஷ ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். விரயாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயத்திற்கேற்ற லாபம் வந்து கொண்டே இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். இளைய சகோதர வழியில் இணக்கம் ஏற்படும். அஞ்சல் வழித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும். வீடு வாங்கும் யோகம் அல்லது வீடு கட்டும் யோகம் ஒரு சிலருக்கு உருவாகும்.

இம்மாதம் ஞாயிறுதோறும் சிவன் வழிபாட்டை மேற்கொள்வதோடு சிவராத்திரியன்று சிவாலய வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எண்ணங்கள் எளிதல் நிறைவேறும் மாதமாக அமையப் போகின்றது. தொழிலில் எதிர்பார்த்தபடியே லாபம் கிடைக்கும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். சிக்கல்களிலிருந்தும், சிரமங்களிலிருந்தும் விடுபடுவீர்கள். உங்கள் பெயரிலேயே தொழில்கள் தொடங்கலாமா என்ற எண்ணம் குடும்பத்தில் ஏற்படும். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும்.

அன்னியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். அவர்களுக்குரிய சீர்வரிசைகள் வாங்குவதில் ஆர்வம் கூடும். ஆனைமுகப் பெருமான் மற்றும் ஆறுமுகப் பெருமான் வழிபாடு ஆனந்தத்தை வழங்கும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்!
சோம்பலைத் தவிர்த்தாலே சாதனையாளராகலாம் என்று சொல்லும் கடக இராசி நேயர்களே!

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் சந்திரன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். குருவின் பார்வையோடு ராசிநாதன் விளங்குகிறார். எனவே, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கடுமையாக முயற்சித்தும் சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இந்த மாதத்தில் நடைபெறப் போகிறது.

வக்ர குருவின் இயக்கத்தால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் மாற்றங்கள் வந்து சேரலாம். நீண்ட தூரப் பயணங்கள் ஒரு சிலருக்கு உருவாகும். வெளிநாட்டு பயணத்திற்கு ஏற்பாடு செய்து அது கைகூடவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது அங்கிருந்து வரும் அழைப்புகள் வியக்கச் செய்யும். தனாதிபதி சூரியன் 8 இல் மறைவதால் பணம் வந்த மறுநிமிடமே செலவாகலாம்.

எனவே, எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. நினைவாற்றல் மிக்க நீங்கள் முந்திய செயற்பாடுகளை நினைத்துப் பார்த்து உறவினர் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. வாக்கு ஸ்தானத்தை சூரியன் பார்க்கிறார். எனவே கோபம் அதிகரிக்கும். படபடப்பும், முன்கோபமும் தலைதூக்கும். பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்புக் குறையலாம்.

9 ஆம் இடத்தில் செவ்வாய், கேதுவுடன் இணைந்திருக்கிறார். தந்தை வழியில் இருந்த உறவில் நெருக்கம் ஏற்படும். மற்ற சகோதரர்களிடம் இதுவரை பாசம் [illegible] பெற்றோர்கள் இப்பொழுது உங்களிடமும் அதிக பாசம் காட்டத் தொடங்குவர். பூமி யோகம் உண்டு. வாங்கிப் போட்ட பூமியை கூடுதல் விலைக்கு விற்று வருமானத்தை உயர்த்திக் கொள்வீர்கள். தொழிலை விரிவுபடுத்த ஒருசிலர் முன்வருவர்.

ஜென்ம குருவின் ஆதிக்க காலமாக இருப்பதால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் சிவாலயத்திற்கு சென்று குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. வியாழக் கிழமை தோறும் விரதமிருப்பதன் மூலம் நன்மைகளை அடையலாம்.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 17 ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் உச்சம் பெறப் போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. அதே நேரத்தில் உச்சம் பெற்ற குரு அந்த சுக்ரனை பார்க்கப் போகிறார். "உச்சனை, உச்சன் பார்த்தால் ஒரு காரியமும் நடைபெறாது" என்று சொல்வது வழக்கம். எனவே, இக்காலத்தில் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் மேலோங்கலாம். அருகிலிருப்பவர்களிடம் ஆவேசமாகப் பேசுவதன் மூலம் பெரிய வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம்.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**




மார்ச் 4 ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாகும். 12இற்கு அதிபதியான புதன் 8 இல் மறையும் பொழுது, விபரீத ராஜயோக அடிப்படையில் சில செயற்பாடுகள் நடைபெறும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். தெய்வீக சிந்தனை மேலோங்கும். கொட்டமடித்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். நூதனப் பொருட்சேர்க்கை உண்டு.

# வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் மார்ச் 13 ஆம் திகதி மேஷ ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் 10 இல் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பழைய பங்குதாரர்கள் விலகுவர். கூட்டாளிகளால் ஒரு சிலர் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். பெற்றோர் உடல நலனில் கவனம் தேவை. மருத்துவச் செலவுகள் கூடலாம். இம்மாதம் சிவசக்தி வழிபாடு சிறப்பை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பயணங்கள் அதிகரிக்கும். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். குழந்தைகளின் எதிர்காலம் கருதி நகை வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். கணவன்-மனைவிக்குள் சண்டையும், சமாதானமும் மாறிமாறி வந்து கொண்டேயிருக்கும். கும்ப புதனின் ஆதிக்க காலத்தில் குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். சொத்துக்களை உங்கள் பெயரிலேயே வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். விநாயகர் வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளவி கொட்டியதால் மூவர் வைத்தியசாலையில்

(குருமன்காடு)

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் குளவி கொட்டியதில் பாடசாலை அதிபர், உப அதிபர், மாணவி ஒருவர் என மூவர் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் நேற்று இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நடைபெறவிருந்த நிலையில், காலை அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த சமயம் பாடசாலைக் கட்டடத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து அங்கு நின்றவர்களைத் தாக்கியது. இதனையடுத்து பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெறாது என்றும், பிறிதொரு தினத்தில் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-250)

## மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி -1)

கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளைதிங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ம.கி. மனுவல் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக கிளிநொச்சி கரைச்சி கோட்டக்கல்விப்பணிப்பாளர் ம.அமுதலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் வி.சுவீஸ்கரன், கௌரவ விருந்தினராக வட்டக்கச்சி வைத்தியசாலை வைத்தியர் கே.என்.பிரசன்ன பண்டார ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-277)

# சேதமடைந்த வீடுகளுக்கான திருத்த கொடுப்பனவு வழங்கப்படவில்லை

## சிவநகர், உருத்திரபுரம் மேற்கு மக்கள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னி யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியேறிய சிவநகர், உருத்திரபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் பகுதியாக சேதமடைந்த வீடுகள் திருத்தத்திற்கான கொடுப்பனவுகளை இதுவரை வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கிராமங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் தமக்கான வீடுகளை திருத்தம் செய்வதற்கு முயன்ற போது வீட்டின் பகுதி சேதமடைந்த நிலையை நிழற்படம் எடுத்து வைத்துவிட்டு திருத்துமாறும் இதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினால் உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதன்படி மீள்குடியேறியும் வீடற்ற நிலையில் இருந்த மக்கள் வீட்டிற்கான கூரை வேலையை மட்டும் வங்கியில் கடன்பெற்று பூர்த்தி செய்தனர்.

அதன்பின்னர் இந்திய வீட்டுத்திட்ட உதவி வழங்கப்படுவதற்கான ஆயத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது இவர்களும் விண்ணப்பித்து தகுதிக்கான புள்ளிகளும் கிடைக்கப் பெற்றன.

இதன்போது இந்திய வீட்டுத்திட்டத்தை மேற்படி கிராமங்களில் நடைமுறைப்படுத்தும் யு.என்.ஹபிரற் நிறுவனத்தினர் வீடுகளை தரிசித்து பார்வையிட்டு நிழற்படங்களையும் எடுத்தனர்.

பகுதி சேதமடைந்த வீடுகளுக்கான கூரைகள் அமைக்கப்பட்டுள்ளதால் எந்தவிதமான திருத்தக் கொடுப்பனவுகள் வழங்க முடியாதென நிறுவனத்தினர் நிராகரித்தனர்.

யு.என்.ஹபிரற் நிறுவனத்தினர் இந்த வீடுகளை மேலோட்டமாக பார்வையிட்டு சென்றதாகவும் இவ்வீடுகளைப் பார்வையிடுவதற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மாவட்ட செயலகத்திலுள்ள அலுவலர்களை அனுப்பி வைத்துஉண்மைத்தன்மையை அறிந்துதமக்கான பகுதி சேதக் கொடுப்பனவை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரியிருந்தனர்.

ஆனால் மாவட்ட செயலகத்தினரால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதன்பிரதி கரைச்சி பிரதேச செயலருக்கும் அனுப்பப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதிக்கும் வடமாகாண ஆளுநருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கும் மகஜர் வழங்கப்பட்டன.

நாமல் ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பில் கரைச்சி பிரதேச செயலருக்கு அறிவித்து அதன் பிரதிகளும் வீட்டு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண தவிசாளர் சி.வி.கே.சிவஞானத்திற்கு பதிவுத் தபால் மூலம் உரிய ஆவணப் பிரதிகள் அனுப்பப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டிற்கான பகுதி சேதக் கொடுப்பனவு கிடைப்பதற்கு வடமாகாண சபை, கிளிநொச்சி மாவட்ட செயலகம், கரைச்சி பிரதேச செயலகம் என்பன நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-2-254)




## மன்னகுளத்தில் விபத்து; ஒருவர் உயிரிழந்தார்!

(பனிக்கன்குளம்)

தனியார் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.45 மணியளவில் மாங்குளத்திற்கு அருகிலுள்ள மன்னகுளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

அம்பாறையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி ஏ-9 வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்துடன் வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மன்னகுளம் விசேட அதிரடி படை இராணுவ முகாமிற்கு முன்பாகவுள்ள வீதி வளைவில் தனது வலத்திற்கு எதிர் வலத்தை பயன்படுத்திய வேளை எதிரே வந்து கொண்டிருந்த குறித்தபேருந்துடன் மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் தகவலறிந்த கனகராயன்குள பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

உயிரிந்தவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் வவுனியா மாவட்ட பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2-281-250)

## கிராம அபி. திணைக்களத்தால் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(கிளிநொச்சி)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் யுத்தத்தால் உயிரிழந்த போராளிகளின் குடும்ப விபர்ங்கள், தடுப்புக் காவலிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு குடும்பங்களுடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் விபரங்கள் எனபன திரட்டப்பட்டு வருகிறன.

இந்த விபரங்களைப் பதியும் படிவங்களை பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள கிராம அபிவிருத்தி அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

படிவங்களை உரியவர்கள் பூரணப்படுத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்திடம், அல்லது மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் உறுதிப்படுத்தி உடனடியாக ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-254)



(கிளிநொச்சி)

இரணைமடு செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு சொந்தமான பிக்கப் ரக வாகனமும் இராணுவத்தினரின் உழவு இயந்திரமும் மோதிய விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்நேற்றுக்காலை 6 மணியளவில் கிளிநொச்சி 155 ஆம் கட்டை வயலெஸ் பகுதிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் பல்லவராயன் கட்டைச்சேர்ந்தவர்களான விசுதர்சன் (வயது-23), எஸ்.கபிலன் (வயது-27), எஸ்.காந்தன் (வயது-18), திருவையாறைச்சேர்ந்த என். செந்தாளன் (வயது -23) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இரணைமடுவிலிருந்து பரந்தன் நோக்கி ஏ-9 வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த பிக்கப் வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்த பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் எதிரே வந்து கொண்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் பிக்கப் வாகனத்தில் பயணித்த நான்கு பேர் படுகாயம் அடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் அறிந்த கிளிநொச்சி பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்ததுடன் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டனர்.

இவ்விபத்து சம்பவத்தில் மூவர் தலையில் படுகாயம் அடைந்ததுடன் மற்றையவரது கையில் படுகாயம் ஏற்பட்டது (அ-2-271)


## சாதிக்கும் சந்ததி செயற்றிட்டத்தின் 9ஆம் கட்ட நிகழ்வுகள் நடைபெற்றன

வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மாணவர்களின் பாடசாலை இடை விலகலை இல்லாதொழிக்கும் நோக்கில் முன்னெடுக்கும் சாதிக்கும் சந்ததி செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் 122 மாணவர்களை உள்ளடக்கிய ஒன்பதாவது கட்டத்தில் மாந்தை கிழக்கிலுள்ள நான்கு பாடசாலைகளையும் கரைதுறைப்பற்றில் ஒரு பாடசாலையையும் உள்ளீர்த்துள்ளது. இந்நிகழ்வு இரு வேறு பகுதிகளில் நடைபெற்றது.

இதன் முதற்பகுதி கடந்த 11 ஆம் திகதி காலை 9 மணியளவில் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

79 மாணவர்களை உள்ளடக்கிய இந்நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட நான்கு பாடசாலைகள் உள்வாங்கப்பட்டிருந்தன.



கொல்லவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, குமாரசாமி வித்தியாலயம், நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை மற்றும் பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளில் இருந்து உதவி கோரப்பட்ட அனைத்து மாணவர்களையும் உள்வாங்கியதாக இந்நிகழ்வின் முதற் பகுதி நடைபெற்றது.

இந்நிகழ்வின் இரண்டாம் பகுதி கடந்த 13 ஆம் திகதி முல்லை. அளம்பில் றோ.க. வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன் ஒன்பதாம் கட்ட நிறைவோடு இச் செயற்றிட்டத்துள் உள்வாங்கப்பட்ட மாணவர் தொகை 604 ஆக உயர்வடைந்துள்ளது.

வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்,

சாதிக்கும் சந்ததியின் ஒன்பதாம் கட்டத்தை நோர்வே நாட்டிலுள்ள ஸ்வரங்கள் மகளிர் அமைப்பினர் தமிழர் ஒற்றுமை அபிவிருத்தி குழுமம் நோர்வேயினூடாக சாத்தியமாக்கியிருக்கின்றனர். கல்வி கற்கும் மாணவ சமூகம் தேர்ச்சி பெற்று இதே சமூகத்தை வலுப்படுத்த முன்னிற்க வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் அப்பிரதேசத்தை சார்ந்த பணியாட்கள் அதிகரிக்க வேண்டும்.

அந்த வகையில் மாணவர்களின் பாடசாலை இடைவிலகலை இல்லாததாக்குவதற்கும் அவர்களின் சீரான கற்றல் செயற்பாடுகளை உறுதி செய்வதற்கும் களமும் புலமும் இணைந்து இன்னும் பல தொடர்ச்சியான செயற்றிட்டங்களை முன்னெடுத்து தமக்களை வலுப்படுத்து வோம் என்றார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.
–மில்டன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்கள் தொடர்பில் கதைப்பதற்கு சரத் பொன்சேகாவுக்கு அருகதை இல்லை

இனவாதத்தைத் தூண்டி நன்மை பெற வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் முயற்சிப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

கூடவே, போரில் மனிதப் படுகொலை இடம்பெறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். தமிழ் இனப் படுகொலை நடைபெற்றது என்ற தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறைவேறியதால் சீற்றமடைந்த சரத் பொன்சேகா போரில் மனிதப் படுகொலை இடம் பெறவில்லை என்று கூறுவது நகைப்புக்குரியது. குற்றவாளி ஒருவர் தான் குற்றம் செய்யவில்லை என்றே கூறுவான். அதற்காக அதை ஏற்றுக் கொள்ள முடியுமா என்ன?

வன்னியில் நடந்த போரில் தரைவழிப்போரை தானே வழிப்படுத்தியதாகவும் படையினருக்கு கட்டளைகளைப் பிறப்பித்தது தானே என்றும் கூறும் சரத் பொன்சேகா, எனவே போரில் மனிதப் படுகொலை இடம்பெறவில்லை என்றும் கூறியுள்ளார்.

வன்னியில் நடந்த இறுதிப் போரில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலைகளுக்கு சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப் படங்கள் மிகப் பெரும்சாட்சி.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்ற தீர்மானம் ஐ.நா அரங்கில் நிறைவேறியிருக்கும் வேளையில் மனிதப் படுகொலை நடக்கவில்லை என்று சரத் பொன்சேகா கூறுவது எந்த வகையில் நியாயமாகும்?

தமிழ் இனத்தின் கருவறுத்து கயமை புரிந்ததில் சரத் பொன்சேகாவுக்கு பெரும் பங்கு உண்டு. எனவே தமிழ் இனம்தொடர்பில் அவர் எந்த வகையிலும் கருத்து உரைப்பதற்கு தகுதி அற்றவர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் மன்னிப் புப் பெற்று, இழந்த பட்டங்களை பெறுவது போல இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் உயிர்களை மீளப் பெற முடியாது என்பதை பொன்சேகா முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் தமிழர்கள் வாழமுடியுமே தவிர ஆளவும் முடியாது; உரிமை கேட்கவும் முடியாது என்று இனவாதம் கக்கிய சரத் பொன்சேகாவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

ஒரு முறை நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருக்கலாம். அதற்காக தான் செய்த கொடுமைகளை தமிழ் மக்கள் மறந்து விட்டார்கள் என்று சரத் பொன்சேகா கருதியிருப்பாராயின்; அது அவர் சிறையில் அடைபட்டதன் பின்னர் அவரின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றமாக இருக்க முடியுமே அன்றி வேறு எதுவுமாக இருக்க முடியாது.

தமிழ் இனப் படுகொலை நடைபெறவில்லை என்று கூறும் சரத் பொன்சேகா, மைத்திரியின் மன்னிப் போடு பெற்ற பட்டம் என்பது, தமிழ் மக்கள் போட்ட பிச்சையின் பிச்சை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

எதுவாயினும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை என்பதை வலியுறுத்தி அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலமாகவே சரத் பொன்சேகா போன்ற இனவாதிகளை வேரோடு பிடுங்க முடியும் என்ற உண்மையை தமிழர் எவரும் மறந்து விடலாகாது.

அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறந்துவிடக் கூடாது.

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வல்லாண்மை நாடுகளுடன் பேச்சுவார்த்தை

## த.தே.கூட்டமைப்பு தகவல்

இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கையை மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கொண்டு வரக்கூடிய வல்லாண்மை கொண்ட நாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளருக்கும் அமெரிக்கா உட்பட சில மேற்குலக நாடுகளுக்கும் கட்சியினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மார்ட்டின் வீதியிலுள்ள அலுவலகத்தில் நேற்றுக் காலை ஊடகவியலாளர்களைச் சந்தித்து ஜெனிவா அமர்வு தொடர்பாக கருத்து வெளியிடுகையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையில் நடைபெற்றதும் நடைபெற்றுக் கொண்டிருப்பதும் இனப் படுகொலையே. அதற்கு சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டு இந்த வருட மார்ச் மாத அமர்வின் போது விசாரணை அறிக்கையை வெளியிட வேண்டுமென்றே நாம் கோரி வந்தோம்.

ஆனால் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்வின் போது மேற்படி விசாரணை அறிக்கையை ஒத்தி வைக்குமாறு அரசாங்கமும் கோரி வருகின்ற நிலையில் அதனை பிற்போடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்குலக சில நாடுகளும் மேற்கொண்டு வருகின்றன்.

இந்நிலையில் இங்கு இடம்பெற்றது இனப்படுகொலை என்றும் அதற்கு சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை வெளியிடப்பட வேண்டுமென்றும் வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் முதலமைச்சரினால் பிரேரனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப் பிரேரணையை தென்னிலங்கையிலுள்ள சில இனவாதக் கட்சிகள் இன நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் வகையில் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றன. வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை மத்திய அரசோ சிங்கள மக்களோ கண்டு அச்சம் அடையத் தேவையில்லை.

ஏனெனில் போர்க் குற்ற விசாரணைகளின் போதும் உண்மை வெளிக் கொண்டு வரப்பட வேண்டுமென்றே கோரியிருந்தோம். அதனூடாக உண்மைகள் கண்டறியப்பட்டு இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கோரினோம். அதனையே தற்போதும் கோரி வருகின்றோம்.

எனவே இங்கு இடம்பெற்றது இனப் படுகொலை என்பதற்கு பலமான சாட்சியங்கள், ஆவணங்கள் மற்றும் அடிப்படைத் தத்துவங்கள் என்பன முன் வைக்கப்பட வேண்டியிருக்கின்றது. ஆகவே இவற்றிற்குரிய நடவடிக்கைகளையும் கூட்டமைப்பு ஆரம்பித்துள்ளது.

அதாவது சர்வதேச சட்ட வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களிடம் ஆலோசனைகள் பெறப்பட்டு இனப் படுகொலைகளுக்கான மேலதிக சான்றாதாரங்கள் திரட்டப்பட்டு இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கை மேலும் வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதே வேளையில் இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கையை எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடப்பட வேண்டும். அதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதற்குரிய நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றோம். இதனையே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட மேற்குலகிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். (செ-4)

## புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடத்தின் புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு விருந்து பசார நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

எனவே மேற்படி நிகழ்வில் பீடத்தின் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முகாமைத்து பீட மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. (செ)

# இன்று நமது கடமை என்ன?

இன்று எமக்குத் தரப்படும் பைபிளின் நற்செய்திப் பகுதி ஒரு தொழுநோயாளரை இயேசு குணமாக்கியதை விளக்குகிறது. இது பைபிளில் மாற்கு எழுதிய நற்செய்தி 1:40-45 பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்றது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இயேசுவின் காலத்திலே அடைந்த துன்பங்கள அளவுகடந்தன. உடல் வலியால் மட்டுமல்ல,

சமூகத்தினுடைய கொடுமையாலும் வலியாலும் புறக்கணி க்கப்பட்டனர். வெறுக்கப்பட்டதோடு இல்லாமல் ஒதுக்கப்பட்டு, சமூகத்திலிருந்தே ஒரந்தள்ளப்பட்டனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயேசு தொழுநோயாளர்

### பரமபிதா காட்டிய பாதை

ஒருவர் மீது பரிவு கொள்கிறார், அவரைத் தொடுகிறார், அவரைக்குணப்படுத்துகிறார். மனிதர்கள் மீது இறைவன் வைத்திருக்கிற இரக்கம் இங்கே வெளிப்படுகிறது.

தொழுநோயாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து “நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” என்று முழந்தாள்படியிட்டு வேண்டும் போது, இயேசு “நான் விரும்புகிறேன். உமது நோய் நீங்கி நலம் பெறுக” என்று சொல்லி, அவரைத் தொட்டுக் குணப்படுத்திய நிகழ்வையும் காண்கிறோம். இந்த இறைவார்த்தைகள் நம்மில் எழுப்பும் கேள்வி: ஒருவர் நலம் பெறவேண்டும் என்றால், யார் விரும்பவேண்டும் என்பதுதான். நோயாளர், இறைவன் இருவரும் விரும்ப வேண்டும் என எடுத்துக்காட்டுகின்றன. இதிலே நமது கவனத்தைக் கவரும் ஒரு செய்தி, இயேசு அவரது உடலை நலப்படுத்தும் முன்னர், அவரது உள்ளத்தையும், ஆன்மாவையும் தொட்டார், நலமாக்கினார் என்பதுதான்.

கேள்வி கேட்பவனுக்கு உதவுவதற்கு நாம் பயப்படுகிறோம். இன்று பிறருக்கு உதவுவதில், தெளிவுகள், விளக்கங்கள் விவரங்கள் கொடுத்து உதவவும் உறவை ஏற்படுத்தவும் நாம் தயங்குகிறோம். ஆனால் இயேசு ஒரு தயக்கம் நிறைந்த கேள்வி கேட்டவனுக்கு, அவர் கேட்காத கேள்விகளுக் எல்லாம் விளக்கமாகவும், விரிவாகவும் பதில் தருகிறார். அந்த தொழுநோயாளியைத் தொட்டு தூக்கி, குணமாக்கியதோடு நில்லாமல், அந்தச் சமுதாயத்தில் மீண்டும் அவன் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என வழிகாட்டுகிறார். நோய் நீங்கினால் மட்டும் போதாது. அவன் சமுதாயத்தோடு இணைந்து வாழவேண்டும் என்பதற்காகக் குருவிடம் காட்ட ஆலோசனை கொடுக்கிறார்.

இது போன்ற கூடுதல் கரிசனை உடையவர் நம் இயேசு. நாங்கள் தயங்கலாம், பின் வாங்கலாம். ஆனால் இயேசு தாராளமானவர். தாமாக முன் வந்து உதவுவார். ஆறுதலும் ஆலோசனையும் தருவார். ஆகவே எதையும் தயங்காமல் கேளுங்கள். கேட்பதற்கும் மேலாக தருபவர் நம் இயேசு. இயேசுவைப்போல எங்களிடம் கேட்கத் தயங்குவோருக்கு நாங்களாக முன்வந்து உதவுவோம்.

தொழுநோயாளர்கள் ஊருக்குள் வசிக்க அனுமதி கிடையாது. அவர்கள் ஊருக்கு வெளியே தான் வசிக்க வேண்டும். அப்படியிருக்கிற காலத்தில், தொழுநோயாளர் இயேசுவைத்தேடி வருகிறார். இயேசுவும் அவரை கடிந்து கொள்ளவில்லை. இயேசு அவனை புறந்தள்ளி விடவும் இல்லை. இயேசு அவரது உணர்வுகளைப் புரிந்து கொள்கிறார். அவருடைய தேவைதான் இயேசுவின் கண்முன்னால் நிற்கிறது. இந்த சமூகம் என்ன நினைக்கும் என்று அவர் கவலைப்படவில்லை. அவரை தொடுகிறார். தொழுநோயாளியை ஏறெடுத்துக் கூட பார்க்கத் துணியாத சமூகத்தில், இயேசு அவரைத் தொடுவது மிகப்பெரய தாக்கத்தை அவருள் நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும். அந்த தாக்கம் நம்பிக்கையாக உருவெடுக்கிறது. இயேசு அவருடைய நம்பிக்கையின் பொருட்டு, அவருக்கு குணம் அளிக்கிறார். சமூகத்திற்கு அஞ்சாதவர் இயேசு. செய்வது சரியென்றால், எதற்கும் அஞ்சாமல், எவருக்கும் பயப்படாமல் துணிவோடு செயல்பட வேண்டும் என்பதுதான் இயேசு நமக்குத்தரும் செய்தி. அதனை நமது உள்ளத்தில் ஊற்றெடுக்கச் செய்வோம்.




**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

இன்று நாம் வாழும் சமூகத்தில் தொழுநோய் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆனால், வேறு வடிவங்களில் அந்த நோய் இன்னும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறது. ஏற்றத் தாழ்வுகள் அதிகாரப்போட்டிகள், அரசியல் போட்டிகள், கட்சிமனப் பான்மை, இப்படிப் பல அருவருக்கத்தக்க தொழுநோயாக இன்னும் பல விளங்குகிறன. அத்துடன் வேலை வாய்ப்பு, சமூக மதிப்பு போன்றவை மறுக்கப்படுகின்றன.

எனவே இன்று நமது கடமை என்ன? இயேசுவைப் போல நாமும் மனதளவிலும், உடல் அளவிலும் சமூக ஏற்றத்தாழ்வுகளை போன்ற தொழுநோயைத் துடைத் தெறிபவர்களாக உருவாகவேண்டும். அனைத்துத் தரப்பு மக்களுடனும், குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுடன் உறவு கொண்டு, அவர்களோடு உறவாடி இயேசுவின் பணியைத் தொடர்வோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# உலகக்கிண்ண கிரிக்கெட்-2015
# நியூசிலாந்து முதலாவது வெற்றி



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்து அணி 98 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.


இப்போட்டியில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள நியூசிலாந்து-இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்த களம் இறங்கியுள்ளன.

நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி துடுப்புடன் மைதானத்துக்குள் இறங்கிய நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர்கள் பிரன்டன் மக்கலம் மற்றும் மார்ட்டின் கப்தில் ஆகியோர் அதிரடியாக விளையாட்டு ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுகளை இழந்து 331 ஓட்டங்களை எடுத்தது.

அவ்வணி சார்பாக மக்கலம் 65 ஓட்டங்களையும், கப்தில் 49 ஓட்டங்களையும், கோரி அண்றசன் 75 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன்படி இலங்கைக்கு 332 என்ற கடினமான ஓட்ட இலக்கு



நிர்ணயிக்கப்பட்டது.

இதையடுத்து இலங்கை துரத்தலை தொடர்ந்தது. திரிமனே, டில்சான் இருவருமே சிறப்பான தொடக்கத்தை கொடுத்தனர். ஆனால ஓட்டஎண்ணிக்கை 13 ஓவரில் 67 ஓட்டங்களாக இருந்த போது வெட்டோரி பந்து வீச்சில், அவரிடமே பிடி கொடுத்து 24 ஓட்டங்களில் டில்சான் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து நம்பிக்கை நட்சத்திரம் சங்கக்கார களமிறங்கினார். இதனிடையே 65 ஓட்டங்களில் டிரெண்ட் பவுல்ட் பந்து வீச்சில் திரிமனே போல்ட் ஆனார். சிறப்பாக ஆடிய சங்கக்கார 38 பந்துகளில் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மஹேல ஜெயவர்த்தனே 4 பந்துகளை சந்தித்து, வெட்டோரி பந்தில் ரோன்சியிடம் கட்ச் கொடுத்துடக் அவுட் ஆனார். நடப்பு உலக கோப்பையின் முதல் டக் அவுட் ஆன துடுப்பாட்ட வீரர் என்ற மோசமான சாதனையும் ஜெயவர்த்தனேக்கு கிடைத்தது.

மற்ற வீரர்களும் சொற்ற ஓட்டங்களில் ஆட்டமிழக்க இலங்கை அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியை தழுவியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக நியூசிலாந்து அணியில் அன்ரூசன் தெரிவானார். (ஐ)

## சங்கக்கார சாதனை



ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களை குவித்த துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங்கை பின்னுக்கு தள்ளினார் இலங்கையின் குமார் சங்கக்கார.

உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் நேற்று நியூசிலாந்தும்- இலங்கையும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 331 ஓட்டங் களை குவித்த நிலையில் இலங்கை களமிறங்கியது.

ஒருநாள் போட்டிகளில் 13 ஆயிரதது 693 ஓட்டங்கள் குவித்திருந்த சங்கக்காரவுக்கு, பொண் டிங்கின் சாதனையை முறியடிக்க 12 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஏனெனில் பொண்டிங் ஓய்வு பெறும் முன்பாக மொத்தம் 13, 704 ஓட்டங்களை குவித்திருந்தார்.

இப்போட்டியின் 16ஆவது ஓவரில ஆடம் மில்னே பந்தை பவுண்டரிக்கு விரட்டியபோது அந்த சாதனையை சங்கக்கார நிகழ்த்தினார். இதன் மூலம் சச்சினுக்கு அடுத்தபடியாக ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்த 2 ஆவது வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

சச்சின் 18 ஆயிரத்து 426 ஓட்டங்களுடன் முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம் — நியூசிலாந்து (50 ஓவர்கள்) 331/6

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| அண்டர்சன் | 75 | 46 |
| மக்கலம் | 65 | 49 |
| வில்லியம்சன் | 57 | 65 |
| கப்ரில் | 49 | 62 |
| றோஞ்சி | 29 | 19 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

இலங்கை — பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| ஜீவன்மெண்டிஸ் | 02 | 0 | 05 | 2 |
| லக்மல் | 10 | 0 | 62 | 2 |
| ஹேரத் | 09 | 0 | 37 | 1 |
| குலசேகர | 08 | 0 | 78 | 1 |
| மலிங்க | 10 | 0 | 84 | 0 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம் — இலங்கை (46.1 ஓவர்கள்) 233

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| திரிமனே | 65 | 60 |
| மத்யூஸ் | 46 | 52 |
| சங்கக்கார | 39 | 38 |
| டில்சான் | 24 | 41 |
| கருணாரத்ன | 14 | 21 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

நியூசிலாந்து — பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| போல்ட் | 10 | 0 | 64 | 2 |
| சௌதி | 10 | 1 | 43 | 2 |
| மிலினி | 10 | 0 | 56 | 2 |
| விக்டோறி | 10 | 0 | 34 | 2 |
| வில்லியம்ஸ் | 01 | 0 | 07 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நாவின் விசாரணை...

உள்ளது.

அந்த விசாரணை தற்போது முடிவடைந்திருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட சர்வதேச விசாரணைக் குழுவின் அறிக்கை ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு அடுத்த மாத இறுதியில் வெளியிடப்பட வேண்டும் . அந்த அறிக்கையை இல்லாமல் செய்வதோ அல்லது தாமதமாக வெளியிடுவதோ ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த அமெரிக்காவின் துணை வெளியுறவுச் செயலாளர் மற்றும் பிரித்தானிய வெளியுறவு செயலாளர் ஆகியோருடன் இடம்பெற்றிருந்த சந்திப்புகளின் போதும் இதனை தாங்கள் வலியுறுத்தியுள்ளதாகவும் சம்பந்தன் தெரிவித்தார். (செ-11)

## இந்திய...

யிட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள், முன்னைய அரசாங்கத்தைப் போன்று இந்த அரசாங்கமும் தமது பிரச்சினைகள் குறித்து பாராமுகமாக நடந்துகொள்ள முயற்சிக்கின்றதோ என்று தங்களுக்கு சந்தேகம் எழுந்திருப்பதாகக் கூறியுள்ளனர்.

இந்திய விஜயத்துக்கு முன்னதாக, மீனவர் பிரச்சினைகள் குறித்து உயர்மட்ட கலந்துரையாடலை நடத்திய ஜனாதிபதியின் கூட்டத்திற்கு மீனவர் பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை என்று மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவரும் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் இணையத்தின் தலைவருமான நூர் மொஹமட் ஆலம் சுட்டிக்காட்டினார். (செ-11)

## ஐ.நாவின் அறிக்கை...

வலியுறுத்தியதாக ஐ.நாவின் இராஜதந்திர துறைத் தகவல்களை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

பான் கீ மூனும் மங்கள சமரவீரவும் மனித உரிமைகள் விவகாரம், பொறுப்பு சுமத்துதல் மற்றும் நல்லிணக்கம் உள்ளிட்ட இலங்கைக்கு முக்கியமான விவகாரங்கள் பற்றி பேச்சு நடத்தியதாக ஐ.நாவின் ஊடக அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.(செ-11)

## மைத்திரி இன்று...

சோனியா காந்தி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தப் பயணத்தின்போது ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகத்தால் இலங்கை குறித்து முன்வைக்கப்படவுள்ள மனித உரிமைகள் அறிக்கை மற்றும் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு, இரண்டு நாடுகளுக்கு இடையிலான மீனவர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால கலந்துரையாடவுள்ளார்.

மேலும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு முதலீடுகளை கொண்டு வருவதற்கும் இரு தரப்பு உறவை வலுப்படுத்துவதற்குமான பேச்சுகளும் இந்தச் சந்திப்பில் முன்னெடுக்கப்படவுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க மற்றும் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோரும் இந்தியா செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 15 - 12 - 1938



இறப்பு 14 - 02 - 2015

(9531)

### திருமதி திருமலர் சண்முகசுந்தரம்

அவர்கள் 2015.02.14 இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சித்திவிநாயகரை வேண்டுகின்றோம்

மதுஷா பந்தல்

ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்

## மத்திய குழு உறுப்பினராக தெரிவாகிய அங்கஜன் இராமநாதனிற்கு எமது வாழ்த்துக்கள்



மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் மத்திய சபை உறுப்பினராக ஜனாதிபதியால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமான திரு.அங்கஜன் இராமநாதன் தெரிவு செய்யப்பட்டதையிட்டு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின்**
**யாழ்.மாவட்ட**
**அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், உறுப்பினர்கள்.**

(9529)

## தனியாரின்...

வுகள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தேசிய தொழில் ஆலோசனை சபையுடன் நேற்று முன்தினம் விசேட பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணய சபைக்கும் கீழுள்ள நிறுவனங்களின் ஊழியர்களது ஆகக்குறைந்த அடிப்படை சம்பளத்தை 10,000 ரூபா வரை உயர்த்துவதற்கு இதன்போது புரிந்துணர்வு காணப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## குற்றங்கள்...

போர்க்குற்றங்கள தொடர்பிலான உள நாட்டு விசாரணை குறித்து ஊடகங்களிடம் நேற்று குறிப்பிட்ட போதே ஜனாதிபதி மேற் கூறிய கருத்தை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் நம்பகத்தன்மையுடன் உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தண்டனை வழங்கவும் தயாராக எமது அரசு உள்ளது.

இச் சம்பவங்கள் தொடர்பில் நீதியான தீர்வை வழங்க நாம் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம்.

இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வுகள் நீதியான முறையில் கிடைக்கப் பெறும் என்றார்.

மேலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற வகையில் எமக்காக சவால்களை வெற்றி கொள்ள நாம் அனைவரும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (செ-11)

## நகைக்கடை...

மையாளருக்கு கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருவதாக அக் கடையின் உரிமையாளர் மனவருத்தத்துடன் தெரிவித்துள்ளார்.

யாழ் நகரிலுள்ள நகைக் கடையொன்றின் உரிமையாளரின் வீடு யாழ் நகரை அண்மித்துள்ள பிறவுண் வீதியில் அமைந்துள்ளது. இந்நிலையில் மேற்படி வீட்டிற்கு கடந்த 9 ஆம் திகதி இரவு எட்டு மணியளவில் நெடுங்கேணிப் பொலிஸார் என்று கூறியவர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையதாகவும் இது தொடர்பில் விசாரிக்க வேண்டியிருப்பதாகவும் கூறி அக் கடையின் உரிமையாளரான சரவணமுத்து மோகனதாஸ் வயது (66) என்ற வயோதிபரை (LG 9591) என்ற இலக்க பொலிஸ்வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் ஏதும் அறியாமல் வீட்டுக்காரர்கள் அவதிப்பட்டிருந்தனர். இவ் வேளையில் மறுநாள் காலை 7.45 மணியளவில் நெடுங்கேணிப் பொலிஸ் தொலைபேசி இலக்கமான 0242053008 என்ற இலக்கத்திலிருந்து வீட்டுக்காரருக்கு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

களவு போனதாகக் கூறப்படுகின்ற பவுண் 8 அல்ல 11 என்றும் அதனைக் கொண்டு வந்தால் அப்பாவை விடுதலை செய்ய முடியுமென்றும் மகனிடம் பொலிஸார் தெரிவித்துள்ள அதேவேளையில் அப்பாவையும் மகனையும் பேசவும் வைத்துள்ளனர்.

இதற்குப் பின்னர் 10 ஆம் திகதி வர்த்தக சங்கத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய வர்த்தக சங்கப் பிரதிநிதியுடன் யாழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கும் காலை 9 மணிக்கே பொலிஸ் நிலையம் சென்றிருந்தனர். ஆயினும் வாயிற் கடவையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அத்தியட்சகரை சந்திக்க விடாது தடுத்துள்ளனர்.

இதன் பின்னராக பிற்பகல் 1 மணியள வில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்திற்குச் சென்று சம்பவம் தொடர்பாக முறையிட்டதனையடுத்து உடனடியாக நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்ட ஆணைக குழுவின் சம்பவம் தொடர்பில் பொலிஸாரைக் கேட்டுள்ளனர்.

எனினும் தாம் குறித்த கடை உரிமையாளரைக் கைது செய்யவில்லை என உடனடியாகவே நெடுங்கேணி பொலிஸார் மறுத்துள்ளனர். இந்நிலையில் மேற்படி நகைக் கடை உரிமையாளரை பொலிஸார் கைது செய்ததற்கான சான்றுகளும் சாட்சியங்களும் தம்மிடம் இருப்பதாக ஆணைக்குழுவினர் கூறியதனையடுத்து கைது செய்ததை பொலிஸார் ஒப்புக்கொண்டனர்.

தொடர்ந்து நெடுங்கேணிப் பொலிஸ் பிரிவில் இச் சம்பவம் தொடர்பு பட்டிருப்பதால் இதனை வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறையிடுமாறு யாழ் பிராந்திய அலுவலகத்தினர் அறிவுறுத்தியதற்கமைய வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மதியம் 1.30 மணியளவில் தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நெடுங்கேணிப் பொலிஸாருக்கு தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு சம்பவம் தொடர்பில் கேட்ட போதும் அவ்வாறு யாரையும் கைது செய்யவில்லை என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

ஆனால் அன்றையதினமே பிற்பகல் 2.30 மணியளவில் வவுனியா நீதிமன்றில் தந்தையாரை ஆஜர்படுத்தப்படுமென்று பொலிஸார் மகனுக்கு கூறியுள்ளனர். ஆனால் அங்கு நீண்ட நேரமாகக் காத்து நின்ற போதும் அவ்வாறு நீதிமன்றுக்கு அழைத்து வரப்படவில்லை.

இந்நிலையில் வவுனியாவிலிருந்து இரவு 11 மணியளவில் யாழிலுள்ள வீட்டிற்கு மகனார் மீண்டும் திரும்பினார். இதன் பின்னர் மறுநாள் காலையிலும் வவுனியா நீதிமன்றுக்கு மகனார் சென்றுள்ளார். இதன் போதும் தகப்பனார் அழைத்து வரப்படவில்லை. இதனையடுத்து பொலிஸ் நிலையத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி மகனார் சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு முறையிடப் போவதாக தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து அன்றையதினம் அதாவது 11 ஆம் திகதி பிற்பகல்2.30 மணியளவில் நீதிமன்றுக்கு பொலிஸார் தகப்பனாரை கொண்டு வந்தனர். இதன்போது விசாரணை மேற்கொண்ட நீதவான் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அவரை கடந்த வருடம் இடம்பெற்ற களவு சம்பவத்துடன் பொலிஸார் தொடர்பை ஏற்படுத்தியிருக்கின்றனர். ஆனால் கடந்த வருடமோ அல்லது இந்த வருட ஆரம்பத்திலேயோ இச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் எந்தவித அறிவுறுத்தலையும் தமக்கு விடுக்கவில்லை என்றும் உறவினர்கள் குறிப்பிடுகின்றனர்.

திடீரென எம்மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தியிருக்கின்ற பொலிஸார் காசு மற்றும் நகை கொடுக்கவில்லை என்பதற்காகவா இவ்வாறு செயற்பட்டிருக்கின்றனர் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக குடும்பத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் குடும்பத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் குடும்பத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-4)


### ஆசிரியர் தேவை

சமயம்:-6-11, சுகாதாரம்:-6-9
வர்த்தகம்:-10-11
25-ம் ஆண்டில்... ஏசியன் அக்கடமி
கேணியடி, கொக்குவில் மேற்கு. T.P:- 0777404883
(9530)

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில், அமைந்துள்ள 128,130 எனும் இலக்கமுடைய கடை விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 021 222 8875
(9507)

### வெளிக்கள உத்தியோகத்தர்

தகைமை:-
- G.C.E (O/L)
- மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவராக இருத்தல்.

சம்பளம்:-அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள்
தொடர்புகளுக்கு:-
0775242852, 021 5688645
(சி-129)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.

* French, Italian, English (A-J Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(C-107)

**Vivekananda Academy**

அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

(Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393


# வாகன விபத்து: குடும்பஸ்தர் காயம்

வேகமாக வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்ட குடும்பஸ்தர் தலையில் பலத்த காயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 5.20 மணியளவில் பருத்தித்துறை நவிண்டில் வீதியில் இடம்பெற்றது.

குறித்த வீதியில் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்தவரை எதிரே வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இச் சம்பவத்தில் வல்வெட்டித்துறை மாவடியை சேர்ந்த சதாசிவம் ராஜ் (வயது 32) எனும் குடும்பஸ்தர் தலையில் பலதத காயத்துடன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-60)


# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாவதி மகாதேவா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாவதி மகாதேவா 10.02.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மகாதேவாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - மனோன்மணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - திரவியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் மு.வேலாயுதபிள்ளை (ஓய்வுநிலை பிரதி அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி, நிரு கல்வி நிலைய இயக்குநர்), யோகேஸ்வரி, செல்வராணி, செல்வகுமார் (லண்டன்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், றேனுகா, ஞானச்சந்திரன் (கருணாலயம்), இராஜசிங்கம் (கஜன் நகை மாடம், வவுனியா), கௌரிதேவி (சுவிஸ்) சுஜாத்தா (லண்டன்), அன்னலிங்கம், நாகரட்ணம், பகவதி, பூமணி காலஞ்சென்றவர்களான இராஜலட்சுமி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, செல்லம்மா, மனோன்மணி, தேவராசா ஆகியோரின் மைத்துனியும், தர்சினி, தயாளன் (லண்டன்), தயானந்தன் (லண்டன்), தனுசா, தர்சிகா (சுவிஸ்), தாட்சாஜினி, தர்மிலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் மகாரூபன், சுஹா சினி (லண்டன்), தட்சாஜினி (லண்டன்), சுந்தரகுமார் (சுவிஸ்), கிரீசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - வேலணை), அருள் ஈசன் (குமரன் ஸ்ரோர்ஸ் - திருநெல்வேலி), டவல் (லண்டன்) ஆகி யோரின் அன்பு மாமியும் பானுசன் (கொ.இ.கல்லூரி), நிரோஜா (பெரியபுலம் மகாவித்தியாலயம்), வர்சிகா (கொ.இ.கல்லூரி) கிரிகேசன், சதுர்ஸ்சிகன் (கொ.இ. ஆரம்ப பாடசாலை), திவ்யன் (கொ.இ.கல்லூரி), தீபிகன் (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), அபிஸ், அபிசன், ஆரபி, அச்சயா (லண்டன்) சுசிர், சௌமி, சமீர் (சுவிஸ்), பிறிட்னன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (9496)

நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். 0777 960 138

தகவல்: குடும்பத்தினர்



# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

## Spoken English with Grammar 1 1/2 Months

(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

## Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

(C-124)

Batch 1 : 16-02-2015
Batch 2 : 19-02-2015
Batch 3 : 21-02-2015
Batch 4 : 22-02-2015

No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550

Hotlines 0777585913, 0777222422, 071429935

அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள்21/02/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.



# CANADA EXPRESS ENTRY

IMMIGRATION IN 6 MONTHS

**The fastest gateway to CANADIAN immigration**

**Canada will WELCOME more than 172,100 new immigrants in 2015**

with job Placement & without Job

**Call us 9.00am-8.00pm**

**THE EXPRESS ENTRY : Two Steps Program**

**STEP 1** : An online Express Entry profile for potential applicants will be generated. It will include information about their skills,work experience, language ability,education and other details. Those who meet the criteria of one of the federal economic immigration programs will be placed in a pool of candidates. **STEP 2** : The highest ranked candidates and candidates with qualifying offer of Arranged Employment or Provincial Nominations,will be invited for permanent residence.

1. **No Occupation List**
2. **No CAP Limit**
3. **Flexibile IELTS requirement**
4. **Equal opportunity for Skilled Professionals & Trade Persons (Diploma Holders)**

**To determine your eligibility & accurate assessment under the New Comprehensive Ranking System, visit us between**

CAN LANKA

CanLanka Immigration Service(Pvt) Ltd,
4/1, Sengunthа complex, Kalviyankadu, Point pedro road, Jaffna

Canada - 1-416-938-3768
Sri Lanka - +94-777516816
info@canlankaservices.com

(9510)



SPEED LANKA EXPRESS

# வெளிநாடுகளுக்கான

## தபால் பொதி விநியோக சேவை



* உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
* உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
* நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
* அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
* சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

**Speed Lanka Express (Pvt) Ltd.**

(C-115)

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே - 0772931062, 0776217926

www.speedlanka.net



# காலங்கள் கழிந்தாலும் நினைவுகள் அழிவதில்லை



திருமதி உதயராணி கோபாலகிருஷ்ணன் / 'கலாபூஷணம்' செல்லையா மெற்றாஸ்மயில்

பாச மலர்களின்

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

திதி : 15.02.2015

ஆண்டு நான்கு
கழிந்து விட்ட போதிலும்
ஆறவில்லை எமது மனதின்
சோகங்கள். இவ்வுலக வாழ்வில்
எம்மை வழிநடத்தி நல்வாழ்வுக்கு
வழிகாட்டிய ஒளி விளக்குகளே !
நீங்கள் எம்மைப் பிரியவில்லை
எம்முடன் வாழ்ந்து வழிகாட்டுகின்றீர்கள்
என்ற நம்பிக்கையுடன் நாம்
இன்னும் உயிர் வாழ்கின்றோம்

பாசமிகு சகோதரர்களின் ஆத்ம சாந்திக்கு அனுதினமும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

18, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 3586

இன்று (15.02.2015) கீரிமலை 'சிவபூமி மடத்தில்' அன்னார் இருவரது நினைவாக நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(9508) குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 15.02.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 02



# ஜனாதிபதி மைத்திரியை முதல்வர் விக்கி வெறுக்கிறாரா?



- உடைந்து கிடக்கும் வெளிநாட்டு உறவுகளை சீரமைக்கும் புதிய அரசு
- முன்னாள் ஜனாதிபதியின் எழுச்சியும் வீழ்ச்சியும
- வியாசர் பதில்கள்
  பெண்கள் மனதில் ஆண்கள் இருக்கிறார்கள் என்பதை எப்படி அறியலாம்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்திரியை முதல்வர் விக்கி வெறுக்கிறாரா?





இலங்கை அரசாங்கம் தமிழர்களை ஏமாற்றுகிறது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்ற தீர்மானத்தை வடக்கு மாகாண சபையில் முன்மொழிந்து உரையாற்றும்போதே அவர் மேற்போந்தவாறு கூறியுள்ளார்.

இலங்கை அரசு தமிழர்களை ஏமாற்றி வருகிறது என வடக்கின் முதல்வர் கூறியிருப்பதானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் குறிவைத்துக் கூறப்பட்டது என்றே கருத வேண்டும். ஏனெனில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரியுங்கள் என்று அறிக்கைவிட்டவர் விக்னேஸ்வரன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரியை ஆதரிப்பதாக அறிவித்து ஒருசில தினங்கள் கடந்த நிலையில் மைத்திரியை ஆதரியுங்கள் என்று வடக்கின்முதல்வர் விக்னேஸ்வரன் அறிக்கை விட்டிருந்தார்.

விக்னேஸ்வரன் விடுத்த அறிக்கை தமிழ் மக்கள் மத்தியில் வேலை செய்தது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும். ஆனால் இப்போது மைத்திரி ஜனாதிபதியாகியதில் விக்னேஸ்வரனுக்குத் திருப்தி ஏற்படவில்லை போல் தெரிகிறது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகியதில் முதல்வர் விக்கி திருப்தியடைந்திருப்பாராயின், மைத்திரி ஜனாதிபதியாகப் பதவியேற்று சரியாக ஒரு மாதம் நிறைவடைந்த கையோடு இலங்கை அரசு தமிழர்களை ஏமாற்றுகின்றது எனக் கூறியிருக்க மாட்டார்.



மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, இலங்கை அரசு தமிழர்களை ஏமாற்றுகிறது என்று முதல்வர் விக்னேஸ்வரன் ஒருபோதும் கூறவில்லை.


மகிந்த அரசு தொடர்பில் அவர் வேறுபட்ட விமர்சனங்களை முன்வைத்தாராயினும் இலங்கை அரசு தமிழர்களை ஏமாற்றுகிறது என நெற்றிமுட்டத் தாக்கியது கிடையாது. ஆனால் மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சி நடக்கும்போது 'அரசு தமிழர்களை ஏமாற்றுகிறது' எனக் கூறுவதற்குள் மைத்திரியின் அரசையே முதல்வர் விக்னேஸ்வரன் சாடியுள்ளார் என்பது புலப்படும்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவை ஆதரியுங்கள் என்று விக்னேஸ்வரன் விடுத்த வேண்டுகோள் என்பது சம்பந்தர் கேட்டுக் கொண்டதற்கிணங்க விடுக்கப்பட்டதா? என்ற ஐயம் எழுவதில் நியாயம் உண்டு. அவ்வாறு ஏதும் இல்லை என்று பதில் கிடைத்தால், மைத்திரியின் அரசு மீது முதல்வர் விக்னேஸ்வரன் சீறிப்பாய்ந்தது எதற்காகஎன்ற கேள்வி விடை காணாத வினாவாக நிற்கும். இவ்விடத்தில் மற்றொரு பதில் எழுகை பெறுகிறது.

ஆக, இங்குதான் முதல்வரின் உரை குறித்த சந்தேகம் எழுகிறது. அதாவது ஜனாதிபதித் தேர்தலில்

அதாவது 67 ஆவது சுதந்திரதின நிகழ்வு நடைபெற்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இஃது தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. அதிலும் குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி தமது எதிர்ப்பையும் காட்டியிருந்தனர்.

## நந்தவனத்தில் ஓர் ஆண்டிபோல் கூட்டமைப்பு செயற்படக்கூடாது



இந்நிலையில் சம்பந்தனும் சுமந்திரனும் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்டதில் முதல்வர் விக்னேஸ்வரனுக்கு உடன்பாடில்லாமல் இருந்திருக்குமோ! என்று எண்ணத் தோன்றும். சுதந்திரதின நிகழ்வில் சம்பந்தரை பங்கேற்க வைத்த ஜனாதிபதி மைத்திரி மீது ஆத்திரம் கொண்ட முதல்வர், அரசு எங்களை ஏமாற்றுவதாகக் கூறினாரோ என்று நினைப்பதிலும் தவறில்லை. இது ஒரு பக்கம்.

இதற்கு மறுபக்கமும் உண்டென்பதை மறந்து விடமுடியாது.

அதாவது ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி கண்டிருந்தாலும் பொதுத்தேர்தல் என்பது மைத்திரிக்கு சவாலாகவே உள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற மூவினமும் சேர்ந்து மைத்திரியை ஆதரித்தது போன்ற அமைப்பை பொதுத்தேர்தலில் காண முடியாது. பொதுத்தேர்தல், மைத்திரியை ஆதரித்த அத்தனை கட்சிகளையும் தனித்தனியாகப் பிரித்து தேர்தலில் போட்டியிட வைக்கும்.

தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குகிழக்கில் தனம் இறங்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தை தனதாக்கப் பிரயத்தனம் எடுக்கும். ஐக்கிய தேசியக்கட்சி அகில இலங்கையிலும் போட்டியிடுவதென்று தீர்மானிக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எக்காலத் திலும் சந்திக்காத சிக்கலைச் சந்திக்கும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தென்பகுதியில் முன்னணி வாக்குகளைப் பெற்ற மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்குதல் என்ற அணி அந்த இலக்கை அடையப் பெரும் போராட்டம் நடத்தும். அதற்காக மைத்திரியின் நூறு நாள் ஆட்சியில் நடந்தது என்ன? என்பதே அவர்களின் பிரசார யுக்தியாக அமையும்.

இந்தப் பிரசாரத்தை முன்னெடுப்பதில் நாம் எல்லோரும் நல்ல மனிதர் என்று தவறுதலாக நினைத்திருந்த வாசுதேவ நாணயக்கார தன் சீவிய காலத்தில் காட்டாத வேகத்தை இவ்விடத்தில் காட்டி, மகிந்தவை பிரதமராக்கப் படாப் பாடுபடுவார்.

இப்படியானதொரு நாடகம், விரைவில் நடைபெறவிருக்கின்றது. இந்த நாடகத்தில் சிங்கள மக்களைப் பார்த்து மகிந்த சில கேள்விகளைக் கேட்பார். எனதருமை சிங்கள மக்களே! துட்டகை முனுவின் வாரிசுகளே! மைத்திரி ஜனாதிபதியானதும், வடக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானம் கண்டீரோ! இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்ற தீர்மானத்தை வடக்குமாகாண சபை நிறைவேற்றியுள்ளது. நான் ஜனாதிபதியாக இருந்த போது - ஜி.ஏ.சந்திரசிறி ஆளுநராக அலங்கரித்த போது முள்ளந்தண்டை முடக்கிக்கொண்டிருந்த வடக்கு மாகாண அரசு இப்போது பார்த்தீர்களா? என்று கேட்க, அதற்கு சிங்கள மக்கள் தலையாட்டுவர். இத்தகைய நிலைமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கும். இந்நாட்டில் ஜனாதிபதிக்கே அதிகாரம் என்றிருந்தாலும் மகிந்த பிரதமரானால் மகிந்ததான் ஜனாதிபதி என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. பிரதமர் மட்டுமல்ல மகிந்தவை பாராளுமன்றத்தில் பியோனாக நியமித்தால்கூட, பாராளுமன்றில் பியோனின் கைதான் ஓங்கும் என்ற உண்மையையும் நாம் மறந்து விடலாகாது.

எது எப்படியாயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆட்சியைப் பலப்படுத்த வேண்டுமாயின், ராஜபக்ஷ குடும்பத்தை நீதிமன்றில் நிறுத்திவிட்டு பொதுத் தேர்தலை நடத்தினால் மட்டுமே அவரால் நிம்மதியாக ஆட்சி செய்ய முடியும்.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி... என்றவாறாகப் போட்டுடைக்கக் கூடாது.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பாராளுமன்றம் புகுந்தால் பிரதமர் பதவி அவருக்கே . அவர் பிரதமரானால் சிலவேளை உங்களுக்கு அது சாதகமாக இருக்கலாம். ஆனால் தமிழ்மக்களுக்கு அதுவே படுபயங்கரமாக அமையும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

நீண்ட காலத்திற்கு பின்னர் மீண்டும் ஆலடி மாநாடு கூடுகின்றது. பண்டிதர் பரமநாதன், விதானையார் விசுவலிங்கம் , சிறாப்பர் கனகசபை, மூப்பர் சூசை, கங்காணி கார்த்திகேயர் இவர்கள் தங்கள் ஊரில் உள்ள பிள்ளையார் கோவிலின் முன்றலில் இருக்கும் ஆலமர நிழலில் குந்தியிருந்து ஊர்ப் புதினங்களை கதைப்பர்.

மாலைப் பொழுது மெல்லிய காற்றிடையே வீசும் தென்றலில் ஆலம் இலைகள் மீட்டுகின்ற மெல்லிய இசையில் அந்த மாநாடு பல்வேறு விடயங்களை கதைத்து தீர்மானங்களை நிறைவேற்றும்.

. ஆலடி மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானம் வடக்கு மாகாண சபைத் தீர்மானம் போல அமுலாகாவிட்டாலும் ஆலடி மாநாட்டு தீர்மானம் ஊருக்கு நன்மை பயக்கும் என்பது மாநாடு நடத்துபவர்களின் நம்பிக்கை.

ஊர்ப்புதினங்களை கதைப்பது, குறை குற்றங்களை ஆராய்வது, என்பதற்கு அப்பால் கடுமையான தீர்மானங்களை எடுப்பதும் ஆலடி மாநாட்டின் பணி.

இந்தப் பணிக்காக ஆலடி மாநாடு நீதிமன்றப்படி ஏற வேண்டியும் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவிற்குச் சென்று விளக்கமளிக்க வேண்டியும் இருந்ததை இவ்விடத்தில் நினைத்துப் பார்ப்பது அவசியம்.

எதுவாயினும் ஆலடி மாநாட்டின் நோக்கம் எவரையும் மனம் நோக வைப்பதல்ல.

. அதே சமயம் சமூகத்தில் நடக்கும் தீங்கான விடயங்களை சுட்டிக் காட்டவும் தயங்கலாகாது.

அந்த வகையில்தான் மாநாடு கூடுகிறது. மாநாட்டுக்கு ஏகப்பட்ட கடிதங்கள் வந்து சேரும். ஆதாரம், சம்பவத்தின் தன்மை குறித்து ஆராய்ந்து கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயப்பொருள் மாநாட்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஆலடிமாநாட்டில் ஆராயப் பட வேண்டும் என்ற விடயங்களை ஆலடிமாநாட்டிற்கு நீங்களும் அனுப்பி வைக்கலாம். இப்படி பண்டிதர் பரமநாதன் கோயிலில் கூடி நின்ற பக்தர்களுக்கு ஒலிபெருக்கியில் அறிவித்தார்.

அறிவித்தல் வெளியாகியதும் ஒரே பரபரப்பு. ஆலடி மாநாடு மீண்டும் கூடுதாம் என்று ஒருவருக்கொருவர் செய்தி பரிமாறிக் கொண்டனர்.

பலர் ஆலடி மாநாட்டை வரவேற்றாலும் சிலர் நாசமறுப்பார் திரும்பவும் வந்திட்டாங்கள் என்று திட்டுவதும் செவியில் விழவே செய்தது.

காகம் திட்டி மாடு சாகாது என்ற பழமொழிக்கு நாம் சொந்தக்காரர் அல்லவோ. அதனால் திட்டல் , அதட்டல் எதற்கும் இந்த ஆலடி மாநாடு பயம் கொள்ளாது.

பயந்திருந்தால் ஆலடியில் குந்தியிருக்க முடியாது என்பதும் மாநாட்டு அங்கத்தவர்களுக்கு தெரியாததல்ல. இப்படி பண்டிதர் பரமநாதனின் முன்னுரையை ஒலிபெருக்கி ஊருக்கு தெரியப் படுத்தியது.

பண்டிதர் பரமநாதன், வாத்தியார் வைத்திலிங்கம், விதானையார் விசுவலிங்கம், கங்காணி கார்த்திகேசர், சிறாப்பர் கனகசபை , மூப்பர் சூசை ஆகியோர் ஆலடிமாநாட்டை நோக்கிச் சென்றனர்.



## மாணவர்களை வழிப்படுத்துவது ஆசிரியத்துவத்தின் முதற்பணி

நிலமகளுக்கு கம்பளம் விரித்தது போல் மூடி மறைத்துக் கிடந்த ஆலஞ் சருகுகளை ஆறுபேருமாக கூட்டித்துடைத்து மறைந்து கிடந்த மரக்கட்டை ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

**வாத்தியார்:-** என்ன இருந்தாலும் எங்கட சொந்த மண்ணில் குந்தியிருந்து கதைப்பதில இருக்கிற சுகம் ஐ.நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டாலும் வராது. அதாலதானே என்ர பிள்ளைகள் லண்டனில் இருக்கச் சொன்ன போதும் இந்த லண்டன் எனக்கு வேண்டாம் என்று தூக்கி எறிந்து போட்டு வந்தனான்.

**பண்டிதர்:-** வாத்தியார் நீங்கள் சொல்லிறதில நிறைய உண்மை இருக்கு. எங்கட சனங்கள் வெளிநாட்டு மோகத்தில் மன நிம்மதியை இழந்து போய் எவ்வளவு கஷ்டப்படுகினம் தெரியுமோ?

**விதானையார்:-**சரி... சரி... நீண்டகாலத்திற்குப் பின்னர் மாநாட்டைக் கூட்டியிருக்கிறம். கடவுள் வழிபாட்டோட மாநாடு ஆரம்பிக்கட்டும்.

பண்டிதரும் மூப்பரும் கடவுள் வாழ்த்து சொல்லுவினம்.

**பண்டிதர்:-** பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து...

**மூப்பர்:-** எல்லாம் வல்ல இறைவா... ஆலடிமாநாட்டிற்கு உமது ஆசியும் கருணையும் உண்டாகட்டும். வழக்குகள், கேஸுகள் வராமல் எங்களைக் காத்தருளும்.

**வாத்தியார்:-** ஆலடி மாநாட்டின் முதலாவது கடிதம் ஒரு கல்லூரி பற்றியதாகத்தான் இருக்குது. என்ன செய்வது. எங்கட சமூகம் எவ்வளவு பண்பாட்டோட இருந்தது. இப்ப....

(வாத்தியார் பெருமூச்சு விட விதானையார் விசுவலிங்கம் வயது போனாலும் மிடுக்கோடு எழுந்தார்.கையில் ஒரு கடதாசி)

**விதானையார்:-** யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு பிரபலமான ஆண்கள் கல்லூரியில கலாட்டாவாம். முந்தி ஒரு காலத்தில ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அடித்துப் படிப்பித்தனர். இப்ப மாணவர்கள் ஆசிரியர்களை வெருட்டுற அளவில நிலைமை மாறிப்போய்ச்சு.

**மூப்பர்:-** என்ன கதை... மாணவர்கள் வாத்திமார வெருட்டுகினமோ! என்ர பரமபிதாவே...

**விதானையார்:-** இஞ்சே மூப்பர் எங்கட பிள்ளையளைக் குறைசொல்லக் கூடாது. மாணவர்களை நல்வழிப்படுத்து வதற்குத் தானே பாடசாலை. இப்ப ஒரு மாணவனுக்கு ஆசிரியர் அடிக்க முடியாது. கண்டறியாத சட்டங்கள் வந்து எங்கட ஒழுக்கத்தை கந்தறுத்து போட்டுது. இதால எங்களுக்கேன் தேவையில்லா வேலை என்று ஆசிரியர்கள் நினைக்க எல்லாம் பிழைத்து விட்டது.

**சிறாப்பர் :-**விதானையார் இதுமட்டுமல்ல. எங்கட வடக்கு மாகாணத்தில பல பாடசாலைகள் வீழ்ச்சி கண்டதன் பின்னணியில ஒரு சில ஆசிரியர்கள் இருந்துள்ளனர். நாங்கள் கதைக்கிற பிரபலமான கல்லூரியில மாணவர்கள் அட்டகாசம் செய்ததின்ர பின்னணியில ஒருசில ஆசிரியர்கள் இருக்கினமாம். ஓய்வுபெற்ற ஒருசில ஆசிரியர்களும் இந்தப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டுள்ளதாகப் பரவலாகப் பேசப்படுகிறது.

**விதானையார்:-** நான் சொன்னன். எங்கட பிள்ளையளை குறைசொல்லக்கூடாது. வளர்ந்த சிலர் தங்கட சுய நலத்திற்காகப் பிள்ளைகளை தூண்டி விட்டு நாடகம் பார்க்கினம்.

**வாத்தியார் :-** இதுமட்டுமல்ல அந்தக்கல்லூரியில் இருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் ரயர் கொளுத்த வேணும் கண்ணாடி உடைக்க வேணும் என்று பிள்ளைகளைத் தூண்டி விட்டதாகவும் கேள்வி.

**மூப்பர்:-**அட துலைவாரே படிக்கிற பிள்ளைகள ஒழுங்குபடுத்துற பெரும் பணியல்லோ ஆசிரியப் பணி. இது என்னடா என்றால் மாணவர்களை தூண்டி விட்டு அந்தப் பிள்ளைகளின் வாழ்க்கையைத் துலைக்கிற வேலையல்லோ நடக்குது.

இதுதான் சொல்லுறது புலிகள் இருக்க வேணும் என்று.

**விதானையார்:-** மூப்பர் எதையும் கதையுங்கோ நாலாம் மாடிக்கு போற கதையை மட்டும் கதைக்காதீங்க.

**வாத்தியார்:-** ஒரு காலத்தில யாழ்ப்பாணம் கல்விக்கு பெயர் போனது. அந்தக் கல்வியை தந்தவர்கள் ஆசிரியர்கள். என்னட்டைப் படித்த எத்தனையோ மாணவர்கள் இன்றைக்கு சர்வதேசப் புகழோடு இருக்கினம்.

எங்க கண்டாலும் ஓடிவந்து சேர் என்று தாற மரியாதை இருக்குதே. கோடி கொடுத்தாலும் அதை எவரும் பெற முடியாது. அந்தளவுக்கு ஆசிரியர்களை மாணவர் சமூகம் மதிக்கும். எங்கட காலத்தில இரண்டு பரமாஸ் வேட்டி , இரண்டு நசனல் , உத்தரிய மடிப்புச் சால்வை ஒன்று. எங்கள் ஆசிரியப் பணி தூய்மையாக நடந்தது. ஆனால் இப்ப ரீயூசன் என்ற கலாசாரம் ஆசிரியத்துவத்தையே சின்னாபின்னமாக்கிற்று.

குறித்த கல்லூரியிலும் ரியூசன் தாக்கம் இருக்குதாம். சில ரியூசன் வாத்திமார் தங்களிட்ட படிக்க வராத மாணவர்களை திட்டமிட்டு தண்டிப்பதாகவும் கேள்வி. ஒரு காலத்தில இந்தக் கல்லூரியில கெமிஸ்ரி மகாதேவா என்ற ஒரு ஆசிரியர் இருந்தவர். அவர் ரியூசன் கொடுப்பது வழக்கம்.

ஆனால் கல்லூரியில் தன்னட்டப் படிக்கும் மாணவர் எவரும் தனது ரியூசனில இருக்கக் கூடாது என்பது அவரின் கண்டிப்பான உத்தரவு.

இப்படியும் உயர்வான ஆசிரியர்கள் இருந்திருக்கினம்.

**சிறாப்பர்:-** ரியூசன் சொல்லிக் கொடுப்பதை இந்தக் காலத்தில தவறு என்று கூற முடியாது. ஆனால் தன்னிடம் படிக்க வராத மாணவர்களை பழிவாங்க நினைப்பது மகா துரோகம்.இத்தகைய செயல்களை ஒரு போதும் மன்னிக்க முடியாது.

**பண்டிதர்:-** என்னவாக இருந்தாலும் இப்ப கடவுள் கண்ணுக்கு முன்னால காட்டிறார். இரண்டு வருடம் பதவியில் இருக்க வேண்டியவர் நாசமாப் போன சாத்திரியின் கதையைக் கேட்டு மணிக்கூட்டைப் பார்த்துப் பார்த்து கையொப்பம் இட்டார்.

நடந்தது என்ன? இப்படிப் பல சம்பவங்கள் கடவுள் நமக்குக் காட்டுகிறார். ஆகையால் நாங்கள் அத்தனை பேரும் கடவுளுக்கு கணக்குக் காட்ட வேண்டும். எனவே நல்லதைச் செய்வோம்.

இந்த மண்ணில வாழ்கிறது கொஞ்சக் காலம். அந்தக் காலத்தில அதர்மமாக நடந்து விட்டு, மரணப்படுக்கையில கிடந்து கண்ணீர் விடுவதால எந்தப் பயனும் ஏற்படாது. ஆகையால் எங்கட மாணவச் செல்வங்களை பிழையான வழிக்கு திசைதிருப்பாமல் அவர்களுக்குப் புத்திமதி கூறி பிள்ளைகளை வழிப்படுத்துவம்.

நாடும் நாங்களும் நிம்மதியாக வாழலாம். இப்படிப் பண்டிதர் பரமநாதன் கூற பள்ளியறைப் பூசைக்காக பிள்ளையார் கோவில் மணி ஒலிக்க , ஆலடியில் இருந்தவர்கள் அப்பனே; பிள்ளையாரே! என்றவாறு கோயில் முகப்பை நோக்கி நடந்தனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook வெங்காயம்



ஒ-ரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப் பித்திருந்தான்.

தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாய் ஒரு இண்டர்வியூ. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக ஈ-மெயில் முகவரி கேட்டார்கள்.

'ஈ- மெயிலா? எனக்கு ஈ-மெயில் இண்டர்நெட்டெல்லாம் தெரியாதே' என்றான் துடைக்க வந்தவன். 'கம்ப்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்க விரும்புகிறவனுக்கு ஈ-மெயில் முகவரி இல்லையா? ச்சே!' என்று அவனை அனுப்பி விட்டார்கள்.

வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கையில் 10 டொலர்கள் இருந்தன. அதைக் கொண்டு மார்க்கெட்டில் வெங்காயம் வாங்கினான். பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான் 10 டொலர் இலாபம் கிடைத்தது. மீண்டும் மீண்டும் வெங்காய விற்பனை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங்களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டான்.


இந்தச் சூழ்நிலையில் ஒரு வங்கிக் கணக்கு திறக்க வங்கி ஊழியர் அவரிடம் பேச வந்திருந்தார். அவனுடைய ஈ-மெயில் முகவரி கேட்டார். வியாபாரி, 'ஈ-மெயில் முகவரி இல்லை' என்று பதிலளிக்க, 'ஈ-மெயில் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா..? உங்களுக்கு மட்டும் ஈ-மெயில், இண்டர்நெட்டெல்லாம் தெரிந்திருந்தால்?' என்று ஆச்சர்யமாய்க் கேட்டார் வங்கி ஊழியர்.

'அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன்' என்றார் வியாபாரி...!

நீதி : வாய்ப்புக்கள் விலகும்போது கவலைப்படாதே..எல்லாம் நன்மைக்கே என்று எண்ணி தொடர்ந்து முயற்சி செய்தால் மிகப்பெரும் வெற்றி உனக்காக காத்திருக்கும்...!

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 284

ஸ்.செரின்



அ.நிதர்சன்




இந்த சர்க்கஸ்ல சறுக்கிறதுக்கு யாருக்கு பிக்கும்?


ராஜன்




யோ.பிலிப்



ம.சுதர்சி



இது தானுங்க மீன் கோலம்

அ.டெனிசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனவெளி

# புது அப்பா வந்திருக்கிறார்...

டாப்புப் புத்தகத்துடன் வந்த வானதி ரீச்சர், பிள்ளைகளின் வணக்கத்தை ஏற்றுக் கொண்டு அமர்ந்து, அவர்களின் பெயர்களை ஒன்றொன்றாக கூப்பிடத் தொடங்கினார்.

"சுவேதா"! "பிறெசன்ட் ரீச்சர்", "பிரசாந், கவின், செந்தமிழ், கீர்த்திகா", "கோகுலன். கோகுலன்..." "கோகுலன் என்னசெய்யிறாய் அங்கை?"

"ஓம் ரீச்சர் பிறசன்ட் ரீச்சர்".

"நான் கூப்பிட்டது கேக்கலையா உனக்கு? இஞ்சைவா நீ பள்ளிக்கூடம் ஒழுங்கா வாறதேயில்லை."



கைவிரல்களை வாயில வைத்துக் கடித்தபடி நின்றான் கோகுலன்.

"பல நாட்கள் தொடர்ச்சியாகப் படிந்த ஊத்தை அவனுடைய வெள்ளைச் சேட்டின் மேல் பளிச்சென்று தெரிந்தது. தலைமுடியின் அழுக்குக்கள் ஒன்றிணைந்து அதனை ஒரு மண்ணிறத்தில் படிய விட்டிருந்தது. வானதி ரீச்சரின் கவலைக்குரிய மாணவர்கள் வரிசையில் கோகுலனும் ஒருவன். இன்றைக்கு விடுவதில்லை. என்ற முடிவுக்கு வந்த வானதி ரீச்சர்,

"சொல்லு கோகுலன் ஏன் நீ போனகிழமை முழுவதும் பள்ளிக்கூடம் வரவில்லை? என்று கேட்டார். பதிலெதுவும் சொல்லாமல் மௌனமாகவே இருந்தான். கோகுலனைச் சமாளிக்க "ரவிசேர் தான் சரி, அவர்தானே உளவளத் துணைக்கு பொறுப்பான ஆசிரியர்." "ரவி சேர் பிளீஸ், கோகுலன் ஒன்றும் கதைக்கின்றானில்லை. ஒருகிழமை ஸ்கூலுக்கும் வரவில்லை. என்னெண்டு கேட்டுச் சொல்லுங்கோ"

ரவி சேர் ஒவ்வொரு பிள்ளையின் விபரத்தையும், நிலையையும் நல்லாத்தெரிந்து வைத்திருக்கின்றார். அவர் மனதில் கோகுலன் பாடசாலை சேர்ந்த நாட்களிலிருந்து நடந்த விடயங்கள் படமாகவிரிந்தன.

முதலாம் வகுப்பில் சேர்த்தபோது அவன் தன்னுடைய வகுப்புக் குழந்தைகள் யாரோடும் பேசாதுபயம் கலந்த அஞ்சி யொதுங்கும் சுபாவத்துடன் இருந்தான். உடம்பெல்லாம் புள்ளிபுள்ளி யாகத் தடித்து, தடித்து வீங்கியிருந்தது. தொட்டாலே நடுங்கியழுது விடுவான். யாரிலும் ஈடுபாடின்றி எவ்வளவு அன்பாகப் பேசினாலும் எதுவும் பேசாது வெறுப்பான ஓர் பார்வையுடன் இருப்பான். வகுப்பின் பின்பகுதியில் தனியே அமர்ந்து தனது கொப்பியில் ஏதாவதொன்றை வைத்துக் கிறுக்கிக் கொண்டிருப்பான். ஒருநாள் அவன் என்னதான் கிறுக்குகின்றான் என்று அருகில் சென்று பார்த்தபோது, வெண்ணிறத்தாளில் பெரிய மணற்பரப்பைக்கீறி தூரத்தில் சிறுவீடு, அதில் மரம் ஒன்று, அருகில் ஓர் ஊஞ்சல் அதனருகில் கிறுக்கிவிட்ட சில

குடும்பமாக இருந்தாலும் தந்தையின் குடியின் கோரத்தாண்டவங்கள் அவர்களின் குடும்பத்தைப் புரட்டிப்போட்டுவிட்டது. செல்வராசு தன்னுடைய குடும்பத்தினரோடு ஒன்றாக இருந்த காலங்களைவிட, கள்ளுக் கொட்டிலில் வாழ்ந்த காலம் தான் அதிகம். மூக்கு முட்டக் குடித்துவிட்டு கோகுலனின் தாய்க்கும், பிள்ளைகளுக்கும் அடிப்பது, உடைப்பது, காயப்படுத்துவது என்று அநியாயம் செய்து கொண்டிருந்தான். கோகுலனுக்கு ஐந்து வயது நிரம்பும் வேளை வீட்டைவிட்டுப் போன செல்வராசு திரும்ப வரவேயில்லை. சின்ன வயதிலேயே தந்தையைப் பிரிந்த கோகுலன் மிகவும் கவனிக்க வேண்டிய நிலையிருந்தான்.

சற்றுக் கட்டாயப்படுத்தி அவனை இரண்டாம் வகுப்புவரை கொண்டு வந்து சேர்த்தாயிற்று. ஒருநாள் மாணவர்களுக்கு நடுவில் உட்காரவைத்து அவனை அவர்களோடு சேர்க்கும் விதத்தில் சில குழுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது திடீரென்று தொடர்ச்சியாகப் பெரிய பெரிய மூச்சுவிட்டுக் கொண்டிருந்த கோகுலன் மயங்கி விழுந்ததையும் வகுப்பறையில் சலம் கழித்ததையும் ரவிசேர் மீண்டும் நினைத்துப்பார்த்தார். பிறகு வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் பல சிகிச்சைகள் செய்து பிரச்சினையில்லை யென்று டாக்டர் அனுப்பிவிட்டார்.

பின்னர் ஒருநாள் எல்லாப் பிள்ளைகளையும் டூர் கூட்டிக் கொண்டு போயிருந்தோம். பிள்ளைகள் எல்லோரும் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருக்கும் போது, கோகுலன் வேகமாக ஓடிப்போய் சாருஜனின் தலையைப் பிடித்து உலுப்பி கட்டுப்பாடற்ற முறையில் அடித்துக் கொண்டு நின்றதையும், மிகவும் பிரயத்தனப்பட்டு அவனைச் சுயநிலைக்கு கொண்டு வந்ததையும் மறக்கமுடியாது.

முக்கியமாக, மூன்றாம் ஆண்டு தமிழ் பாடம் தொடங்கும் நேரத்தில் அந்த வகுப்புக்கு ஓடிப் போய்விடுவான். விவேகன் சேர் தான் பாடம் எடுக்கிறவர். அவர் படிப்பிக்கும் போது அவருடைய கையைப் பிடித்தபடி அருகில் போய் நின்றுவிடுவான். ஆரம்பத்தில் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இந்தப் பிள்ளை என்னுடைய பாடத்துக்கு மட்டும் ஓடிவந்து பக்கத்தில் நிற்கிறான்? அவன் தன் தந்தையைத் தேடுகின் றானோ என்று அவர் நினைத்தார்.

கோகுலன்ரை பக்கத்து வீட்டிலிருந்து படிப்பிக்கவாற துவாரகா ரீச்சர் சொன்னா, "வானதி, கோகுலன்ரை அம் மான்ரை நடவடிக்கையள் சரியில்லை,

அவாவைத் தேடி வேற ஆக்கள் வாறவை. எனக்குத் தெரியும். உதுசரியில்லையப்பா நீர் தானே கோகுலன்ரை வகுப்புமிஸ், ஒருக்கா கூப்பிட்டுச் சொல்லும். பிளீஸ், பிள்ளையளின்ரை எதிர் காலத்தைப் பாதிக்கும்"

வானதி ரீச்சர், கோகுலனின் அம்மாவை அழைத்தபோது, அவர் தன்னுடைய கணவன் விட்டிட்டுப் போன சம்பவத்தைச் சொல்லிச் சொல்லி அழுதா. தான் கூலி வேலை செய்துதான் தன்னுடைய பிள்ளைகளைப் பார்ப்பதாகவும் கோகுலனைவிட மேலும் இரண்டு குழந்தைகள் இருப்பதையும் சொல்லி கடைசியில் "பிள்ளை வயித்துப்பாட்டையும் பாக்க வேணும் தானே?"என்று கூறி பெருமூச்சுவிட்டுக் கொண்டே போனா. அவவுக்கும் தேவைகள் நிறைய இருந்தன.

பழைய நிலையில் கோகுலன் இப்போது இல்லையென்றாலும் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் அவனை ஓரளவு நல்ல நிலைக்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறோம். அவன் என்னவென்றால் ஒருகிழமை பள்ளிக்கூடம் வராமல் நின்றி ருக்கின்றான். மீண்டும் பழைய நினைவுக்கு வந்த ரவி சேர்,

"கோகுலன் கிட்டவாங்கோ சொல்லுங்கோ பிள்ளை ஏன் கனநாளா பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை. என்னநடந்தது? தலையைத் தடவியவாறே கேட்டார்.

"சேர் அது வந்து எங்கடை வீட்டை புது அப்பா வந்தவர் அதுதான் நான் பள்ளிக்கூடம் வரயில்லை" என்று கோகுலன் சொன்ன வார்த்தை ரவி சேருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்ன புது அப்பாவா?" ரவி சேர் ஸ்தம்பித்துப்போய் நின்றார். கோகுலனின் அம்மாவின் தொடர்பினால் தான் இந்தப் புது அப்பா வந்திருப்பார் என்பது புரிந்தது. சிறு பிள்ளையை மனம் நோக வைக்கப் போகின்றார்கள்.

கோகுலனோ தன்னுடைய புது அப்பா வந்த அந்தக் கணங்களை நினைத்துக் கொண்டிருந்தான். வரும்போது. அவர் கொண்டுவந்த இனிப் புக்கள், உடுப்புக்கள், விளை யாட்டுச் சாமான்களை மறுபடி மறுபடி நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். தனக்கு "இனி அப்பா இல்லை என்று யாருக்கும் சொல்லத் தேவையில்லை." தனக்குள் புதிய உலகத்தில் மிதந்து கொண்டிருந்தான்.

"எனக்காக கடவுள் அனுப்பி வைத்தஅப்பாஇவர்தான்.

நான் இனிச் சொல்லிக் கொள்வேன், அப்பாச் செல்லம் தான் நான்"

நான் அழுதபோதெல்லாம் என் அருகில் இல்லாத அப்பா - இனி என் புது அப்பா என்னைத் தூக்கிவிளையாடுவார்"

"என்னோடு பட்டம் விடுவார்"

"எனக்கு என்னவேணுமோ வாங்கித் தருவார், எனக்கு இனிஎந்தக் கவலையும் இல்லை" உள்ளுக்குள் பட்டாம்பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன.

கடவுளே! இந்தக்குழந்தை தன்னுடைய அப்பாதான்



மீண்டும் வந்திருக்கிறார். புதிய உருவத்தில் வந்திருக்கிறார். இனி தனக்கெந்த துன்பமும் இனியில்லை. என்று கனவு கண்டுகொண்டிருக்கின்றது. கோகுலனின் அம்மாவின் நடவடிக்கையால் உருவாகிய அந்தப் புதிய உறவின் நிலையையும் தன்மையையும் புரியும் நிலையில் அவன் இல்லை. நிலையற்றதென்று உணரும் வயதும் இல்லை. நாளை அவன் எதிர்பார்ப்புக்கள் சிதறும் போது அவனது மனம் என்னபாடுபடும்? ரவிசேர் தான் கஷ்டப்பட்டு முன்னேற்றிய தன் மாணவனுக்கு வரப்போகும் தாக்கத்தை எண்ணி, உள்ளுக்குள் வருத்தப்படத் தொடங்கினார்.

கோகுலனின் தலையை ஆதரவாகத் தடவிவிட்டு, நீபோய் இரு. என்று கூறிவிட்டு வெளியில் வந்திருந்து ஏதாவது வழியிருக்கா? என்று யோசிக்கத் தொடங்கினார்.

துள்ளிக் குதித்துக் கொண்டு வீட்டுக்கு ஓடிப் போய்க் கொண்டிருந்தான் கோகுலன். "இன்டைக்கு புது அப்பாவிடம் சொல்லவேணும், சாருஜன் என்ரை பென்சிலை பறிச்சுப் போட்டான். நீங்கள் வந்து அவனிடம் வாங்கித்தாங்கோ" என்று. அவர் என்னோடையே பள்ளிக்கூடம் வந்து வாங்கித் தருவார். வீட்டுவாசலில் போய் நின்று புது அப்பாவைத் தேடினான். "அம்மா! அம்மா!............ என்று கத்திக் கொண்டு போனான். அம்மா! புது அப்பா எங்கையம்மா? நான் அவரிட்டை நிறையக் கதைக்க வேணும்?! சொல்லுங்கோ. "ஆரடா புது அப்பா? போய் உடுப்பைக் கழற்றிப் போட்டுச் சோறு போட்டு வைச்சுக் கிடக்கு சாப்பிடு" என்று சொல்லிவிட்டு தன்னுடைய வேலையைப் பார்க்கத் தொடங்கினா. அவவுக்கு அந்த புதிய நபர் கோகுலனின் அப்பாவாத் தெரியவில்லை. ஆனால் கோகுலனுக்கோ அவர் தன்னுடைய புதிய அப்பா ...என்னுடைய புது அப்பாவுக்கு என்னாச்சு? அவனது உடல் நடுங்கத் தொடங்கியது. அவனது ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் பொடிப்பொடியானது. திடுக்கிடலுடன் போய் அருகில் இருந்த மரக்குற்றியில் அமர்ந்து இரு முழந்தாள்களுக்குள் முகம் புதைத்தான்...அவர் என் புது அப்பா இல்லையா?

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.
அனுப்பவேண்டிய முகவரி:
சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:
Email : psych@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்து கிடக்கும் வெளிநாட்டு உறவுகளை சீரமைக்கும் புதிய அரசு

சன்டே ரைம்ஸ் பத்திரிகையில் புதிய அரசினால் சீரமைக்கப்படும் வெளி நாட்டு உறவுகள் என்னும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கம்

தமிழில் - யோகர்



அந்நியர் ஆட்சியின் நான்கு நூற்றாண்டு கால ஆதிக்க நுகத்திலிருந்து இலங்கை தன்னை விடுவித்துக்கொண்ட 67-வது வருட சுதந்திரதினத்தை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் எமது மனநிலையிலிருந்து விடுபடுவதற்கு முன்பாகவே நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பிரித்தானியாவுக்கும் பின்னர் அமெரிக்காவிற்குமான உடனடிப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

சர்வதேச சமூகத்தின் மத்தியில் மதிப்பிற்குரிய எமது உறுப்புரிமை தொடர்ந்தும் கௌரவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அங்கு வலியுறுத்துவதே அப்பயணத்தின் நோக்கமாகவிருக்கிறது.

இலங்கையின் அண்மைக் கால வெளிநாட்டு உறவுக்கான கொள்கை முன்னெடுப்புகள் முற்றிலும் அழிவுபூர்வமானதாகவே இருந்துவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல முனைகளிலான தமது சாதனைகளை பகிரங்கமான தனது அறிக்கைகள் மூலம் உரிமை பாராட்டிக் கொண்டிருந்தாலும் தமது வெளிநாட்டுக் கொள்கையில் பல குறைபாடுகள் உள்ளதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இந்த அறிவிப்பானது உண்மையில் அவரது குறைவான ஒரு மதிப்பீடேயாகும். ஏனெனில், வெளிநாட்டு விவகார சேவைகளுக்கான நியமனங்களில் அவரது நேரடியான தலையீடு காரணமாக் அனுபவமற்ற தகை மைக்குறைவான அமைச்சர் ஒருவரையும் சவால்களுக்கு முகங்கொடுத்து செயற்பட திராணியற்ற கண்காணிப்பாளர் ஒருவரையும் முக்கியமான இந்த பணிகளில் ஈடுபட வைத்தார்.

இதுவே வெளிவிவகார அலுவல்களை அடிமட்டத்திற்கு இட்டுச் செல்ல வைத்தது.

இத் தவறுகளுக்கான குற்றச்சாட்டை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டியவர்.

உண்மையைச் சொல்வதானால், நாட்டினது வெளிநாட்டுக் கொள்கை விடயத்தில் கூட்டுச்சேராநிலை **(Non alignment)** என்ற நிலைப்பாட்டிலிருந்து விலகிச் சென்று மேற்கு நாடுகளை பகைத்துக் கொண்டதுடன் ' சீன சார்பான ' **(Pro China)** தமது வெளிப்படையான நிலைப்பாட்டால் இந்தியாவுக்கு ஆத்திரமூட்டியுமிருந்தார்.

இப்போது புதிய அரசானது புதிய அமைச்சர் (அப்பதவிக்கு புதியவரல்ல) ஒருவரையே குலைந்து போன உறவுகளை சீரமைக்கும் பணியில் ஈடுபடுத்தியுள்ளது. தனது பணிக்கான ஆரம்ப நடவடிக்கையாக இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் விஜயம் மேற்கொள்வதைத் தொடர்ந்து லண்டனுக்கும் பின்னர் வோஷிங்டனுக்கும் செல்லும் அவர் அங்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சரையும் சந்திப்பார்.

அவரது இறுதித்தரிப்பிடமாக இருக்கும் ஐ.நா. சபையில் அதன் செயலாளர் நாயகத்தைச் சந்திப்பதற்கும் நேரம் எடுத்துக்கொள்வார்.

இவரது இப்பணியில் முன்னர் ஈடுபட்டிருந்த முன்னைய அரசின் அதிகாரி அமெரிக்க தலைநகருக்கோ நியூயோர்க்கிற்கோ விஜயம் மேற்கொள்வதற்கும் அமெரிக்கர்களுடனோ அல்லது ஐ.நா சபையிலோ முகம் கொடுத்து உரையாடுவதற்கும் அஞ்சியவராகவேயிருந்தார்.

உரை நிகழ்த்துவதற்கு மட்டும் பழக்கப்பட்ட அவர் மறுதரப்பு உரைகளை செவிமடுத்துக் கேட்பதற்கோ அல்லது அவர்களை எதிர்கொண்டு வாதிடுவதற்கோ அல்லது அவர்களது ஆலோசனைகளை விரும்பிக்கேட்பதற்கோ ஆற்றலற்றவராகவே இருந்தார்.

சர்வதேச ரீதியிலான இராஜதந்திர சமிக்ஞைகளை முற்றிலும் தவறாகப்புரிந்து கொண்ட அவர் முன்னாள் ஜனாதிபதிக்கு இராஜதந்திர உறவுகள் மட்டில் 'கயிறு கொடுத்து' தவறாக வழி நடத்திவந்தார்.

அதாவது, ஐ.நா. ம.உ. சபையில் **(UNHRC)** இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் தீர்மானமெதற்கும் அமெரிக்கா அனுசரணையாக இருக்காது என்பது போன்ற கருத்துக்களையும் அவர் வழங்கியுள்ளார்.

இலங்கை அரசியல் தலைவர்களையும் ஆயுதப்படைகளையும் குறிவைக்கும் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்படுவதையே இத் தீர்மானம் வலியுறுத்தியிருந்தது.

சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் மீது முழு நம்பிக்கை கொண்டு மேற்குலகுடன் முட்டுப்பட்டு குட்டுப்பட வேண்டியதாயிற்று. இதன்மூலம் தமக்கு [illegible] [illegible] இருக்க வேண்டியதாயிருந்தது.

ஜெனீவாவில் தமக்குச் சாதகமாக வாக்குகள் பெற்றுக்கொள்ளும் ஒரே நோக்கில் மட்டும் 'ஆபிரிக்காவை எடுத்துக் காட்டாகக் கொள்வது' என்ற கொள்கையொன்றையும் பைத்தியக்காரத்தனமாக கையாண்டனர்.

இவற்றின் காரணமாக, 2009 - ம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதிக்கட்ட போர் நடவடிக்கைகள் பற்றிய , 'நம்பகரமான விசாரணை' **(Credible investigation)** கோரும் அந்த தீர்மான அறிக்கையே இன்றும் ஐ.நா. ம.உ.ச. **(UNHRC)** சபையில் பேசுபொருளாக தொடர்ந்தும் இருந்து வருகிறது.

புதிய அரசு பதவிக்கு வந்த உடனேயே மேற்படி தீர்மானத்தை தடுத்து நிறுத்திவிடுவதற்கான பரீட்சார்த்த முயற்சியொன்றை மேற்கொண்டபோதிலும் அது முறியடிக்கப்பட்டு விடயம் தொடர் கதையாகவே தொடர்வது போல் தோன்றுகிறது.

பயங்கரவாத அமைப்புக்கெதிராக போராடி அதனை வெற்றிகொண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திய ஆயுதப் படை வீரர்களைப் பாதுகாப்பதற்கு தனக்கு உள்ள உரிமையை நியாயப்படி உறுதிப்படுத்திக்கொள்வதற்கு புதிய அரசு எடுத்திருந்த மேற்படி முயற்சியே அதுவாகும்.

போரை நிறுத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர்களை ஆசுவாசப்படுத் தும் நோக்கில் புலம்பெயர்ந்த இலங்கைத்தமிழர்களால் வழங்கப்பட்ட கடுமையும் பலமும் வாய்ந்த சட்டநுணுக்க ஆதரவுடன் கூடிய மேற்குநாடுகளின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் மேற்கொள்ளப்பட்டதே 'பயங்கரவாதத்திற்கு எதிரான' இந்த யுத்தமாகும். மேற்படி அழுத்தங்களுக்கெல்லாம் தாக்குப்பிடித்து நின்று இலங்கையில் நிலவிய இந்த 'பயங்கரவாத மேலாதிக்க நிலைக்கு **(Reign of Terror)** முடிவு கண்ட பெருமை முன்னாள் ஜனாதிபதி மகிந்தவையே சாரும்.

அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாயன்று நடந்த சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வின் போது நிகழ்த்திய உரையில், கடுமையானதும் வேதனைக்குரியதுமான அந்த பணியினை நிறைவேற்றி முடித்ததற்கான பாராட்டு மரியாதையை அவருக்களித்து கௌரவப்படுத்தியுமிருந்தார்.

ஆனால் போர் வெற்றியின் பின்னரும் மேற்குலக நாடுகளுடன் தவறான விதத்தில் அவர் தொடர்ந்தும் கொண்டிருந்த உரசல்புரசல் கொள்கைக்கு காரணம் முன்போலவே அவருக்கு தொடர்ந்தும் வழங்கப்பட்டுவந்த தவறான ஆலோசனைகளேயாகும் எனவும் அவர் கூறியிருந்தார்.

இதன் விளைவாகவே நாடு மேற்குலகின் கடுமையான கோபத்திற்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. அமெரிக்காவின் 2010-ம் ஆண்டுக்குரிய 'லியாஹி' சட்டத்திருத்தத்தின் படி **(Leahy Amenement 07.2010 US)** மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையின் நன்னடத்தை குறித்த எதிர்பார்ப்புகளுடன் முடிச்சுப்போடும் விதத்தில் இலங்கைக்கான ஆயுத தளபாட படைக்கல உதவிகள் முதற்தடவையாக மட்டுப்படுத்தப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் (EU) விதித்திருந்த 15 நிபந்தனைகளை புறக்கணித்த காரணத்தால் இலங்கைக்கான GSP+ வர்த்தக வரிச்சலுகை நிறுத்தப்பட்டது.

புதிய அரசானது வர்த்தக ரீதியிலான பிரதான சலுகை ஒன்றின் பொருட்டு 'நம்பகமான உள்ளக விசாரணை' மேற்கொள்வதற்கான வாக்குறுதியை இப்போது அறிவித்துள்ளது.

முன்னைய அரசு இப்படியான ஒரு நிலைமைக்கு நாட்டை இட்டுச் சென்றதற்குப் பதிலாக. உறவுகளை சீராக வைத்துக் கொள்ளவே முயற்சித்திருக்க வேண்டும்.

பிந்திய வாக்குறுதி இப்போதே நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்தவாரம் கொழும்புக்கு வருகை தந்திருந்த அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் புதிய அரசுடன் இணைந்து செயற்படுவதாக அளித்த உறுதியோ அல்லது அடுத்தவாரத்தில் எமது வெளிவிவகார அமைச்சர் உறவுகளை சீரமைப்பதற்காக வோஷிங்டன் செல்கிறார் என்பதோ ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானத்தை இல்லாமல் செய்துவிடப் போவதில்லை.

ஆனாலும் இந்த நடவடிக்கைகள் மேற்குலகிற்கும் இலங்கைக்கும் இடையிலான பதற்றத்தை ஓரளவு தணிக்கும் என்பதுடன் இலங்கை மேற்கொள்ளக் கூடிய எந்தவொரு நியாயமான விட்டுக்கொடுப்பும் வருகின்ற மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் இடம்பெறவிருக்கும் UNHRC அமர்வுகளின் போது தீர்மானத்தை மேலும் கடினமாக்காத விதத்தில் நிலைமைகளை இலங்கை சீரமைத்துக் கொள்வதற்கான நேரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய சந்தர்ப்பமாக அமையலாம்.

2015 மார்ச் அமர்வுகளை தொடர்ந்து செப்டெம்பரில் இடம் பெறவிருக்கும் அடுத்த அமர்வுகளுக்கான ஒன்றுகூடல் வரை இலங்கை சம்பந்தமான விடயங்கள் பிற்போடப்படுமானால் இலங்கை மீதான அதன் பிடிதளர்வடைவதுடன் வட பகுதிக்கும் தென்னிலங்கை அரசிற்கும் இடையில் ஏற்படக் கூடிய இணக்கப்பாடு எதுவும் இரு தரப்புக்கும் இடையில் நல்லுறவை உருவாக்குவதன் மூலம் கடந்தகால சிவில் யுத்தத்தின் கசப்பான உணர்வுகளிலிருந்து நாடு விடு படுவதற்கான (07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு...

56

...“பஞ்சாயத்தின் கட்டளையை மீறினால், நீங்களும் ஊரை விட்டு வெளியேற வேண்டியதுதான்” என்று பஞ்சாயத்து தலைவர் கூறுவார். அதையும் மீறி, அம்பிகாவின் உடலை தன் இரு கைகளாலும் தூக்கிச்சென்று தகனம் செய்துவிட்டு, ஊரை விட்டு வெளியேறுவார், ரஜினி. ராதாவும், மகளும் அவருடன் செல்வார்கள்.

### அம்பிகா நடிப்பு

இப்படத்தில் ரஜினிகாந்த் மட்டுமின்றி, அம்பிகாவும் மிகச்சிறப்பாக நடித்திருந்தார். ராதா, கமலா காமேஷ், டெல்லி கணேஷ் ஆகியோரும் பாத்திரத்தை உணர்ந்து நடித்தனர். படத்தில் தனியாக காமெடி எதுவும் கிடையாது. 14-08-1982 அன்று இப்படம் வெளிவந்தது. முதலில் சில நாட்கள் கூட்டம் குறைவாக இருந்தது. பிறகு கூட்டம் அதிகரித்தது. பெண்களை இப்படம் அதிகமாகக் கவர்ந்தது. எனவே நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

### எஸ்.பி.முத்துராமன்

இப்படத்தின் டைரக்டர் எஸ்.பி. முத்துராமன் கூறியதாவது:- “பஞ்சு அருணாசலம் கதையைச் சொன்னதுமே, படத்தில் நடிக்க ரஜினி ஒப்புக்கொண்டார். பெண்கள் எந்த சபலத்துக்கும் ஆளாகக் கூடாது, மனசால்கூட தப்பு செய்யக் கூடாது என்ற மெசேஜ் இந்தக் கதையில் இருக்கிறது. எனவே இதில் நடிக்கிறேன்” என்றார். செங்கல்பட்டு அருகே உள்ள ஒரு கிராமத்தில்தான் படப்பிடிப்பு நடந்தது. எல்லோரும் நன்கு நடித்தனர். இளையராஜாவின் ரீ ரிக்கார்டிங்” (பின்னணி இசை சேர்ப்பு) படத்துக்கு பலமாக அமைந்தது. இந்தப் படம் வெளிவந்த அதே திகதியில் கமலஹாசன் நடித்த சகலகலா வல்லவனும் வெளிவந்தது. அதுவும் நான் டைரக்ட் செய்த படம்தான். அது முழுக்க முழுக்க கமர்ஷியல் படம். இரண்டு படங்களையும் டைரக்ட் செய் தது ஒருவர்தான் என்று யாரும் நம்ப மாட்டார்கள். அப்படி இரண்டு படங்களும் முற்றிலும் மாறுபட்டவை. இரண்டும் வெற்றிகரமானவை.

“எங்கேயோ கேட்ட குரல்” படத்துக்கு தேசிய விருது கிடைக்கும் என்று நினைத்தோம். படம் பார்த்தவர்கள் அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் தேசிய விருது கிடைக்கவில்லை. என்றாலும் மக்களின் பாராட்டு நிறைய கிடைத்தது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது”


இவ்வாறு டைரக்டர் எஸ்.பி. முத்துராமன் கூறினார். ரஜினிகாந்த் மூன்று வேடங்களில் நடித்த “மூன்று முகம்” அவருடைய முழுத் திறமையையும் வெளிப்படுத்தியது. குறிப்பாக, அலெக்ஸ் பாண்டியன் என்ற போலீஸ் அதிகாரி வேடத்தில் மிடுக்காகவும், கம்பீரமாகவும் பேசி எல்லோரையும் பிரமிக்க வைத்தார்.

ஆர்.எம்.வீரப்பனின் சத்யா மூவிஸ் தயாரித்த சூப்பர் ஹிட் படம் இது. கதையை பீட்டர் செல்வகுமார் எழுத, ஆர்.எம்.வி. திரைக்கதை அமைத் தார். பிறகு செல்வகுமார் வசனம் தீட்டினார். ஏ.ஜெகந்நாதன் டைரக்ட் செய்தார்.

### கதை

திருப்பங்களும், நெஞ்சைத் தொடும் சம்பவங்களும் நிறைந்த படம் “மூன்றுமுகம.”

நேர்மையும், கண்டிப்பும் நிறைந்த போலீஸ் டி.எஸ்.பி அலெக்ஸ் பாண்டியன், தனது



## ரஜினி நடித்த காவியம் “எங்கேயோ கேட்ட குரல்”

எல்லைக்குள் நடமாடும் கள்ளச் சாராய கோஷ்டிகளைகளையெடுக்கிறார். இதனால் லட்சக்கணக்கில் நஷ்ட த்தை சந்திக்கும் கள்ளச்சாராய கும்பலின் தலைவன் (செந்தாமரை) டிஎஸ்பியை கொல்ல முடிவெடுக்கிறான். அதற்கான தருணத்தை எதிர்நோக்கி காத்திருக்கிறான்.

### மர்மக்குரல்

அலெக்ஸ் பாண்டியனின் மனைவி ராஜலட்சுமி நிறைமாத கர்ப்பிணி. பிரசவவலி எடுத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறார். மனைவியை பார்க்க ஆஸ்பத்திரி வரும் வழியில் அலெக்ஸ் பாண்டியனுக்கு போன் வருகிறது. போனில் பேசிய பெண், ஒரு பாழடைந்த பங்களாவில் தன்னை அடைத்து வைத்து சித்ரவதை செய்கிறார்கள் என்று பதட்டமாய் கூறியவள், தான் கடத்தி வைக்கப்பட்டிருக்கும் பங்களா இருக்கும் இடத்தையும் கூறி தன்னைக் காப்பாற்ற வரும்படி கதறுகிறாள்.

இந்தப் போனுக்குப் பின்னணியில் தன்னை கொல்ல வகுக்கப்பட்டிருக்கும் சதித்திட்டம் பற்றி அறியாத அலெக்ஸ் பாண்டியன், தனியாளாய் அந்த பங்களாவுக்குள் போகிறார். அவருக்காக காத்திருந்த சாராயக் கும்பலின் தலைவனும், அவனது அடியாட்களும் அலெக்ஸ் பாண்டியனை தாக்கி கொன்று விடுகிறார்கள்.

### இரட்டைக் குழந்தைகள்

அலெக்ஸ் பாண்டியன் இறந்த அதே நேரத்தில் அவரது மனைவிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இரண்டுமே ஆண் குழந்தைகள். குழந்தை பிறந்த அதே நேரம் ஜன்னி வந்து தாயும் உயிர் விடுகிறாள்.

பிரசவத்துக்கு துணையாக வந்த அலெக்ஸ் பாண்டியனின் தாயார் சகாய மேரி, மகன் - மருமகள் இருவரும் ஒரே நேரத்தில் இறந்த சம்பவத்தால் அதிர்ச்சி அடைகிறார். *(தொடரும்)*

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

# சீரமைக்கும் புதிய...

...நிலைமையை அது ஏற்படுத்துவதாகவே அமையும் எனலாம்.

அடுத்த வாரத்தில் அமைச்சருக்கு அவர்களுடனான எமது உறவுகளை சீராக்குவது மற்றும் UNHRC தீர்மானங்கள் மட்டிலான விடயங்களை கையாள்வது போன்ற வேலைகளிலும் பார்க்க கூடுதலாக இலங்கை தனது பங்கிற்கு நிறைவேற்ற எதிர்பார்க்கப்படும் நிலைமைகளே வாஷிங்டனில் தயாராக காத்திருக்கும்.

இராஜதந்திர அரசியல் பொருளாதார, வர்த்தக மற்றும் ‘முதலீட்டு’ விவகாரங்கள் மட்டில் முழுமையான ஈடுபாட்டுடன் கூடிய கலந்துரையாடல்களில் கலந்து கொள்ள வேண்டிய தேவையும் இருக்கும்.

தேர்தலுக்கு முன்னர் கொழும்பிலிருந்த முன்னாள் அமெரிக்கத் தூதுவர் முன்னைய எதிர்க் கட்சித் தலைவரை பிரத்தியேகமாக சந்தித்தன் மூலம் முன்னாள் ஜனாதிபதியை வேண்டும் என்றே தவிர்த்துக் கொண்டது பலர் அறிந்த இரகசியமே.

எதிர்க்கட்சி தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்திற்கு வரும் பட்சத்தில் அமெரிக்காவுடனான உறவுகளை அது கட்டியெழுப்புவதற்கு விரும்பும் என்ற அவர்களது எதிர்பார்ப்பே இதற்கு காரணமாக இருந்தது.

ஜனாதிபதி ரஜபக்ஷ நிகழப் போவது பற்றி விளங்கிக் கொண்ட போதிலும் நிலைமையின் தீவிரத்தை தணித்து சீர்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஆட்சி மாற்றத்திற்கான நடவடிக்கைகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் கருவிகளாக பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்களை அடுக்கியதுடன் வளர்ந்துவரும் ‘இந்தோ - US’ நட்புறவை புரிந்து கொள் ளத்தவறி அமெரிக்காவுக்கு நேர் எதிரான கொள்கையை கண்மூடித்தனமாக கைக்கொள்வதில் தீவிரம் காட்டியிருந்தார்.

அமெரிக்காவுடனான உறவுகளிலிருந்து விலகிச் செல்லும் ராஜபக்ஷ நிர்வாகத்தின் இவ்வித தளம்பல் போக்கினை சமனிலைப்படுத்த வேண்டிய தேவை இருப்பதை அமெரிக்கா உணர்ந்தது என்பதில் சந்தேகமில்லை.

வாஷங்கடனில் இருக்கும் போது அங்குள்ள இலங்கை தூதரகம் பல்லாண்டு காலமாக இயக்கப்பட்டு வந்த விதம் தேவையற்ற செயற்பாடுகள் மற்றும் அது சம்பந்தமான ஏனைய செயற்பாடுகள் செலவீனங்கள் மட்டிலும் ஆய்வொன்றினையும் அமைச்சர் மேற்கொள்வார்.

நல்லுறவுகளுக்கான இந்த தூதரகப் பணியில் ஒருகால கட்டத்தில் தொழில்சார் இராஜதந்திரி ஒருவர்கூட சேவையில் இருக்கவில்லை.

தூதரகப்பணி அபிவிருத்திகளுக்கான தகவல் போன்ற ஏனைய பரிமாற்ற நடவடிக்கையில் ஊழலும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன.

உறவுகள் மட்டிலான பிரச்சாரப்பணிகளுக்கு பத்திரிகை அறிக்கைகள் வெளியிடுவதற்கென்றே அமெரிக்காவில் தளம் கொண்டிருக்கும் நிறுவனங்களை தெரிந்து பயன்படுத்திக் கொள்ளுமளவிற்குக்கூட அதனது ஆற்றல பரிதாபகரமானதாக இருந்திருக்கிறது.

இவற்றுக்கான பணக் கொடுப்பனவுகள் மத்திய வங்கியின் ஊடாகவும் கொழும்பிலுள்ள தனி நபர் முகவரிகள் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விதமான சந்தேகத்துக்குரிய சர்வதேச ரீதியிலான பணக்கையாளல்கள் பற்றிய விபரங்கள் அவ்வப்போது அது நடைபெறும் தருணங்களில் வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

எப்படியும் வெளிவிவகார அமைச்சர் வாஷிங்கடனில் என்னென்ன விவகாரங்களில் எந்தளவுக்கு எப்படியெல்லாம் இணங்கிப் போயிருக்கிறார் என்பது பற்றிய விபரங்களை இலங்கை அரசிற்கே சமர்ப்பிக்க வேண்டியவராய் இருக்கிறார்.

எந்தவிதத்திலும் மேற்கத்தேய அழுத்தங்களுக்கு மண்டியிடும் விதமாக அவர் செயற்பட முடியாது என்பதுடன் இராஜதந்திர நலன்கள் என்ற பெயரில் எமது நாட்டு ஆயுதப்படைகளை சர்வதேச பலி பீடத்தில் காணிக்கை பொருளாக்கிவிடவும் கூடாது.

அரசியல் ரீதியில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய பெறுமானம் ஒன்று உள்ளது. அதுதான் வரவிருக்கும் மற்றொரு தேர்தல்!

அண்மையில் தேர்தல்களில் தோல்வி கண்டவர்கள் வேட்டையாட காத்திருக்கும் பயங்கர வேட்டை நாய்கள் போல் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து எப்பக்கமும் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். காட்டிக்கொடுப்பு ஒன்றோ அல்லது எவ்விதமான உடனடி அச்சுறுத்தலோ அண்மித்திருக்கிறது என்பதே உண்மை.”

மேற்கினை எதிர்ப்பது போன்றதொரு அணுகுமுறை எப்போதேனும் அதனது நலன்களுக்கு சாதகமாக இருக்கப் போவதில்லை. ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவர்ஸை நியூயோர்க்கில் அமைச்சர் சந்திப்பதற்கான ஏற்பாடும் உள்ளது.

இலங்கை விடயம் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதியுடன் அங்கிருக்கும் செல்வாக்கு குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல என்ற காரணத்தால் இது நல்லதோர் நகர்வே ஆகும்.

இன்றைக்கு அறுபத்தி ஏழு வருடங்களுக்கு முன்னர், இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாளுக்கு முதல் நாளன்று இலங்கையின் முதலாவது பிரதமரான டீ.எஸ்.சேனநாயக்க அவர்கள் நாட்டு மக்களுக்கு விடுத்திருந்த பகிரங்க அறைகூவலில், “எமக்கு கிடைத்த சுதந்திரம் அதுமட்டில பாரதூரமான பொறுப்புணர்வுகளையும் எம்மீது சுமத்தியே உள்ளது.

எனவே எமது செயற்பாடுகளுக்கும் தவறுகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் நாமேதான். எமது நிர்வாகத்தில் இடம்பெறும் குறைபாடுகளுக்கும் தவறுகளுக்கும் மற்றவர்களையே நாம் தொடர்ந்து குறை கூற முடியாது” என அவர் குறிப்பாகவே கூறியிருந்தார். சுதந்திரம் என்பது அதற்கான பொறுப்புணர்வுடன் கூடிய கடப்பாடுகளையும் கூடவே தொடர்பு படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் எழுச்சியும் வீழ்ச்சியும்

“அவரின் பிரபாகரனை பெயர்த்த அபரிமிதமான நம்பிக்கை, சோதிட நம்பிக்கை ஆறு வருடங் களுக்காக இரண்டு வருடங்களை இழந்த அதிகார ஆசை, அப் பட்டமான இனவாத பிர சாரம் ஏனைய இன மக்களை மதிக்காமை என்பனவற்றின் மூலம் தனக்குத்தானே குழி தோண்டினார் மகிந்த.”

பி.முத்துலிங்கம்
ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர்



மகிந்த நீண்டகால அரசியல் அனுபவத்தைக் கொண்டவர். இவர் பாராளுமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, பிரதம மந்திரியாக, ஜனாதிபதியாக பதவி வகித்தவர். இவர் தொழில் ரீதியாக சட்டத்தரணியானதோடு, பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தவர்.

மகிந்த ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் பற்றியோ, இனப்பிரச்சினை தொடர்பாகவோ அலட்டிக் கொள்ளாதவர். அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா 2000-ம் ஆண்டளவில் முன்வைத்த அரசியல் தீர்வுப் பொதி தொடர்பாக மௌனம் காத்தவர்.

2005-ம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தவுடன் விடுதலைப் புலிகளுடன் நோர்வேயின் அனுசரணையோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அந்தப் பேச்சுவார்த்தை வெறும் தர்க்க ரீதியானதாக மாத்திரம் அமைந்தபடியால், இரு தரப்பினரும் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டார்கள்.



அடிப்படையில் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையிழந்த விடுதலைப் புலிகள், யதார்த்தவாதி ராஜபக்ஷவுடன் சண்டையிட்டு ஒன்றில் வெல்லுவோம் அல்லது தோற்போம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

விடுதலைப் புலிகளின் தொடர் தாக்குதல்கள், மாவிலாறு நீர்ப்பிரச்சினை என்பவற்றை தொடர்ந்து விடுதலைப் புலிகளை அழிப்பது தொடர்பான உறுதியான முடிவை மகிந்த மேற்கொண்டார். அதற்காக புலிகளின் ஆளணிப்பற்றாக்குறை, போராட்டம் மக்கள் மயமாக்கப்படாமை, அவர்களின் இராணுவ கட்டமைப்பு தொடர்பாக மதிப்பீடு செய்தார்.

இராணுவத்தின் உயர் மட்ட ஆளணியை சரியாக பயன்படுத்தினார். தனக்கிருந்த வாய்ப்பாக சர்வதேச பயங்கரவாத எதர்ப்பு அலையை சரியாக கையாண்டார். இவ் உத்திகள்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரிழப்புக்கள், உடல் ஊனம், இலட்சக்கணக்கான மக்களின் இடப்பெயர்வு என்பனவற்றின் மத்தியில் 2009 மே மாதம் 18 ஆம் திகதி போரில் வெற்றி கண்டார்.

இதன்மூலம் சிங்கள மக்களின் அதி உன்னதமான தலைவராக மதிக்கப்பட்ட மகிந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இரண்டாம் தடவையும் வெற்றிபெற்றார்.

2010 தொடக்கம் 2014 வரையான நான்கு ஆண்டு காலப் பகுதியில் ‘ஆசியாவின் ஆச்சரியம்’ ஆக்கவிளைந்தார்.

அதற்காக பெருந்தெருக்கள் வலையமைப்பு, உள்ளூர் உற்பத்தி, கல்வி, சுகாதாரம், துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்றவாறான உள்சார் கட்டமைப்பு வடக்கு, கிழக்கு உட்பட சகல மாகாணங்களிலும் ஏற்படுத்தப்பட்டன.

ஆனால் இவற்றுக்குப் பின்னால் பண மோசடி, துஷ்பிரயோகம், குடும்ப ஆதிக்கம் என்பன தலைவிரித்தாடின. நாட்டின் மனித உரிமைகள் மீறப்பட்டன. எத்தனையோ புகழ் பெற்ற ஊடகவியலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அவை தொடர்பான கொலையாளிகள் இதுவரை கண்டறியப்படவில்லை. நாட்டின் யுத்த செலவீனம் குறைவடைந்த போதும் வாழ்க்கைச் செலவு அதிகரித்தது. அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. நாட்டில் பரவலாக கொலை, களவு, போதவஸ்து பாவனை, பாலியல் துஷ்பிரயோகங்கள், தனி நபர் தற்கொலை என்பன மோசமாக அதிகரித்த நிலையிலும் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படவில்லை.

இவ் ஆட்சியில் ஒரு நாடு ஒருதேசம் இங்கு வாழ்பவர்கள் யாவரும் ஓர் இனம். பௌத்தர்கள் வாழாத இடங்களில் விகாரைகள், புத்தர் சிலைகள் என்பவற்றை நிறுவுதல் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் நிர்வாகங்களின் அபரிமிதமான இராணுவத்தலையீடு, முறையற்ற இராணுவ ஆட்சேர்ப்பு, தேர்தல் பிரசாரத்தில் இராணுவம் ஈடுபடுதல், பௌத்த அடிப்படைவாத அமைப்புக்கள், ஏனைய மதங்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்கள், வர்த்தக நிலையங்கள் மீதான தாக்குதல்கள் என்பன ஏனைய இன மத மக்களை சிந்திக்க வைத்தன.

மகிந்த அரசின் மீது உள ரீதியான வெறுப்பை ஏற்படுத்தியது. இவ்வாறாக மகிந்த அரசு பல்லின மத கலாசார கொள்கையை ஏற்றுக்கொள்ளாமை பாரிய பிரச்சினையாக இருந்தது. சிறுபான்மை இன, மத, மக்களின் இருப்பு கேள்விக்குரியானது.

மறுபுறமாக மகிந்த அரசாங்கத்தில் பொருளாதார வளர்ச்சி 7 வீதமாக உயர்ந்தது. வறுமை வட்டம் 23 வீதமாக இருந்து 7 வீதமாக குறைந்தது. பண வீக்கம், வீழ்ச்சி, வேலைவாய்ப்பு அதிகரிப்பு, நடுத்தர வருமான நாடு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, போன்ற சுட்டிகளையும் அரசியல் போக்குகளையும் காட்டிய போதும் நாட்டில் சர்வாதிகாரம், அராஜகம், ஜனநாயக சூழல் இன்மை, பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பின்மை, புள்ளிவிபரங்களின் உண்மைத்தன்மை இல்லாமை என்பன எல்லா இன மக்களையும் பொதுவாக பாதித்தது.

இதன் வெளிப்பாடே மகிந்த 47.6 வீத வாக்குகளையும் எதிரணி பொது வேட்பாளர் 51.3 வீதமான வாக்குகளையும் பெற காரணங்களாக அமைந்தன.

அவரின் பிரபாகரனை பெயர்த்த அபரிமிதமான நம்பிக்கை, சோதிட நம்பிக்கை ஆறு வருடங்களுக்காக இரண்டு வருடங்களை இழந்த அதிகார ஆசை, அப்பட்டமான இனவாத பிரசாரம் ஏனைய இன மக்களை மதிக்காமை என்பனவற்றின் மூலம் தனக்குத்தானே குழி தோண்டினார் மகிந்த.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லா ஒரு நாள் ஒரு பெரிய பணக் காரரிடம் சென்றார். "ஒரு மனிதனுடைய கஷ்ட நிலைகண்டு மனம் பொறாமல் தங்களிடம் வந்திருக்கிறேன். அந்த மனிதன் ஒரு பணக்காரரிடம் கொஞ்சம் பணத்தை கடனாக வாங்கிவிட்டான். அது இப்பொழுது வட்டிக்கு வட்டியெனக் கூடி இன்று இத்தொகையினைத் திருப்பிக் கொடுக்க முடியாது திணறுகின்றான். அவன் தற்கொலை செய்து விடுவானோ



வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் கஷ்டப் படுகின்றான்" என்றார் முல்லா. "உம்மை எவ்வாறு நம்புவது பணத்தை வாங்கிய பின் "நான்தான் அந்த ஏழை" என்று கூறமாட்டீர் என்பதற்கு என்ன நிச்சயம்" என்று செல்வந்தர் கேட்டார். "நீங்கள் இவ்வாறு கூறுவீர்கள்

# கடன் வாங்கிய ஏழை

என்றுகூட எனக்குப் பயமாக இருக்கின்றது. நீங்கள் ஒரு ஆயிரம் பொற்காசுகள் அந்த மனிதனுக்கு அவனின் கடனை



அடைப்பதற்கு கொடுத்தால் அவன் உரிய காலத்தில் அதைத் திருப்பிக் கொடுத்து விடுவான். அதற்கு நான் உத்தரவாதம் தருகிறேன்" என்று முல்லா மிகவும் உருக்க மாகக் கூறினார்.

அதைக்கேட்டு மனம் உருகிய செல்வந்தர் முல்லாவிடம் ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்து "அவ்வளவு கஷ்டப் படும் மனிதன் யார்?" என்று கேட்டார். "வேறு யாருமல்ல நான்தான்" என்று கூறிச் சிரித்தவாறு முல்லா சென்றுவிட்டார். இரண்டொரு மாதங்கள் கழித்து முல்லா அப்பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். இரண்டொரு மாதங்கள் கழிந்த பின்பு மீண்டும் ஒருநாள் முல்லா அப்பணக்காரரிடம் வந்தார். "யாரோ ஒருவர் பணம் வாங்கிக் கஷ்டப்படுகின்றாராக்கும். அதை என்னிடம் வாங்கிக் கொடுக்க வந்திருகின்றீராக்கும்" என்றார் செல்வந்தர். "ஆமாம்" என்றார் முல்லா.


"அந்தக் கஷ்டப்படும் ஆள் நீர்தானே" என்று செல்வந்தர் கேட்டார். "இல்லை உண்ணமையிலையே ஒரு ஏழைதான் என்று தெரிந்துதான் அந்த ஆளை நேரில் கொண்டு வந்து வாசலில் நிறுத்தியிருக்கிறேன்" என்றார் முல்லா.


பிறகு வாசல் பக்கம் சென்று ஒரு ஏழையை அழைத்து வந்தார். "நீர்தான் கடன் வாங்கி கஷ்டப்படும்ஏழையா?" என்று கேட்டார் செல்வந்தர். "ஆமாம்" என்று அந்த ஏழை பதில் சொன்னான். செல்வந்தர் முல்லா சொன்ன தொகையினை ஏழையிடம் நீட்டினார். அதனை முல்லா கை நீட்டி வாங்கிக் கொண்டார்.

"என்ன பணத்தை நீர் வ்ாங்கு கிறீர் பழையபடி என்னை ஏமாற் றுகிறீரா?" என செல்வந்தர் கேட்டார். "நான் பொய் சொல்ல வில்லையே கடன் வாங்கியது அந்த ஏழைதான் ஆனால, கடன் கொடுத்தவன் நான். கொடுதத கடனை இப்பொழுது வசூல செய்கிறேன்" என்று கூறியவாறு ஏழையை அழைத்துக் கொண்டு முல்லா நடந்தார்.

# சிறுவர் அரங்கம்

# வரைவோம்






# விடுகதை

1) வெடி வெடித்தும் இடிந்து விழாத கோட்டை- அது என்ன?

2) ஊரார் அறிந்த காரம், ஊரை அடக்கும் காரம்- அது என்ன?

3) வடிக்காத சோறு, கொதிக்காத குழம்பு- அது என்ன?

4) பட்டத்தரசி பவனி வரும்போது பரிகாரங்கள் பக்கத்தில் வரும்- அது என்ன?


5) உலகை எல்லாம் உப்பிட்டு வளர்த்தவர் யார்?

6) பறந்து செல்லும். ஆனால் பறவையும் அல்ல. பால் கொடு க்கும் ஆனால் விலங்கும் அல்ல அது என்ன?

## விடைகள்

1. இடி- வானம்
2. அதிகாரம்
3. பொங்கல், சட்னி
4. நிலா- நட்சத்திரங்கள்
5. கடல்
6. வௌவால்

# மயிலே குயிலே



மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குறிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே
பறந்து வா
பழுத்த கொய்யா
தருகிறேன்!
சிட்டுக் குருவி
நடந்து வா
சட்டை போட்டு விடுகிறேன்!



ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப்புறாவே இறங்கி வா
மடியில் குந்திப் பேசலாம்!

அன்பு வாசகர்களே!
வலம்புரி- சங்குநாதம் பகுதிக்கு தங்களிடமிருந்த சிறுகதை, சிறுவர்கதை, சிறுவர் பாட்டு, கட்டுரை, கவிதை உள்ளடங் கலான தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
ஆக்கங்களை: ஆசிரியர்,
வலம்புரி-சங்குநாதம்,
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங் கோதை



வைகறை மேகங்களை துடைத்துக்கொண்டு வெளிவரும் ஆதவனை ஆரோகணித்து வரவேற்க ஆயத்தமாகும் அந்த இளங்காலையில் கேட்கும் இனிய கீதங்களை ரசிப்பதற்காய் இமைக்குள்ளே விழிகளைத்திறந்தபடி அமைதியாகப் படுத்திருந்தவளின் அருகிருந்து தலையை தடவியபடி "பள்ளிக்கூடம் போகல்லயோ நேரமாகுது" என்று மெதுவாகக் கேட்ட குரல்பட்டு மலர்ந்து முனகினாள் பூங்கோதை. இண்டைக்கு "பள்ளிக்கூடத்தில கவிதைப் போட்டி என்றெல்லோ சொன்னனி பிள்ள. விடிய வெள்ளண எழும்பி ஒருக்கால் எண்டாலும் குரல் தடக்காமல் வாசிச்சு பார்த்தால் தானே நல்லது. நாலு பேருக்கு முன்னால நடக்கிற போட்டியெல்லோ. எழும்பு பிள்ள".

தாயின் அன்புக்குரல் அவளின் திறமைக்கு திறப்பணம் ஆகியது. கவிதைகளில் அலாதிப்பிரியம் கொண்டு தன்னை ஒரு தலை சிறந்த கவிதாயினியாய் உருவாக்க வேண்டுமென்பதில் கட்டுரை கொண்டவள் இன்னும் தாங்குவாளா என்ன...?

கடுகதி போல் தன் கடன்களை முடித்து போட்டிக்கான கவிதையினை தன் நினைவரங்கத்திலே பாடிப்பழகினாள். கண்ணாடியின் முன் கவியரங்கை நடத்திப் பார்த்தவளை பார்த்த பூபதி பூரித்துப் போனாள்.

"அட இவ்வளவு அழகாக என் மகள் பெரிய போட்டி ஒன்றில் படித்துப் பரிசு பெறுவதை என்று காண்பேனோ..." என்று மனதுக்குள் நினைத்தபடி அகன்று அடுக்களைக்குள் நுழைந்தாள். அம்மா... என்று அழைத்த குரல் கேட்டு திரும்பிய பூபதி வெள்ளைக்குயிலாக நின்ற தன் மகளை கண்டு நிறைந்தாள் மனம். 'என்னம்மா சாப்பாடு என்றவளின் பார்வைக்கு ... "உனக்கென்ன பிடிக்குமோ அதைவிட ஏதும் இதுவரைக்கும் செய்திருப்பேனோ இல்லைதானே... இந்தா நெய்த்தோசை" என்றாள் தாய்."தலை நரைத்தாலும் தன் மகளுக்கெனச் செய்வதில் மனங்கோணாதவள் அவள்" போய்வாறன் அம்மா... செல்லமாய் மகள் சொல்லிப் போகும் வெள்ளை அழகை மனதுள் ரசித்தபடி தன் வேலையில் மூழ்கினாள் பூபதி.

பாடசாலையின் அரங்கம் கவிதைகளால் ஆர்ப்பரித்தது. "தரம் பன்னிரண்டு மாணவி பூங்கோதையின் கவிதை இடம்பெறும்" ஒலித்தது ஒலி வாங்கி. சபையோர் வணக்கத்துடன் ஆரம்பித்த கவிதை சபையோரின் கண்களில் நீர் வழிய "ஆளாய் நீ வளர வேண்டுமென்று யாரும் அறியாமல் தொழுவேனே நானிருந்து" என்ற வரிகளுடன் நிறைவு பெற இந்த ஆண்டுக்கான மாகாண மட்டப்போட்டிகள் நிறைவு பெற்றன. போட்டிகளுக்கான முடிவுகள் அடுத்த வாரம் தெரிவிக்கப்படும் என்று ஒலித்து ஓய்ந்தது ஒலி வாங்கி.

அவரவர் தங்கள் பிள்ளைகளை பக்குவமாக ஏற்றிக் கொண்டு வெளியேறிக் கொண்டிருந்த போது இலாவகமாக உள் நுழைந்து அவளின் காலடியில் நின்றது மோட்டார் சைக்கிள். தலைக் கவசத்தை கழற்றி " என்னவாம் .... எத்தனையாவது நீ..." என்று புன்னகையோடு விசாரித்த ஆசையண்ணன் பூங்காவலனுக்கு புன்னகையால் பதில் சொல்லி தானும் புறப்பட்டாள் பூங்கோதை. வாசற் கதவை கட்டிப்பிடித்துக் கொண்டு நின்றவள் போல் "என்னவாம் பிள்ளை" ஆவலின் தன்மை அமைதியாய்க் கனப்பதை அறிந்தவள் போல அடுத்த கிழமை தான் சொல்லுவினமாம் என்பதற்கு..... ஏனாம்....? என்பதாய் தாயின் தலையாட்டல் .... நாள் ஒவ்வொன்றும் நிமிடங்களைக் கழிந்து வாரத்தின் நான்காம் நாள்.... அதிகாலைப்பொழுது... "வெள்ளைக் குயிலே எந்தன் கவிதைகள் உனக்காகவே கூடுகட்டுகின்றன.

ஏனெனில்...... உன் தாலாட்டை தாலாட்டவே..." வானொலியின் இறுதிக்கவி வரிகளை கேட்டு அதிர்ந்தவளானாலும் யாருடனும் இது பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருந்தவளின் காதுகளில் விழுந்தது தபால்காரரின் மணியோசை.



கடிதத்தைப் பெற்றவள்தன்னறைக்குள்ளே சென்று விரித்துப் பார்த்தவளுக்கு வியப்பைத் தந்தது செய்தி.

இன்று காலைநேரக் கவியரங்கில் படிக்கப்பட்ட அதே கவிதை தான்...யாராக இருக்கும் மனம் முனகுகிறாள்... கவிதை முடிவில் எந்தப் பெயரும் இல்லை என்ன கொடுமை தன்னைதானே அலட்டிக் கொள்கிறாள். முடியவில்லை ... அம்மாவிடம் இது பற்றிக் கதைக்கலாமா சொன்னால் விபரீதங்களாகி சந்தோசங்களின் அத்திபாரங்களையே சில நேரம் பிளந்து விடும். எத்தனிப்புக்கள் எல்லாமே அடங்கிப் போக கவிதையை மீண்டும் படிக்கிறாள்: அதன் அர்த்தங்கள் அவளைக் குடைகிறது. ஆனாலும் மறுக்கிறது மனம்.

"என் கவிதைக்கு பதில் கவிதை எழுதியிருப்பது யார்...? அன்றைய கவி நிகழ்வில் என் கவிதையைக் கேட்டவர்களில் யாராக இருக்கும்.... என்னோடு படித்தவர்களில் ஒருவரா ...அல்லது சபையோர்களில் யாரோ ஒருவரா...?" என சிந்தனையில் பலதையும் நிறுத்திப் பார்க்கிறாள். ஆனாலும் யாருடனும் அது பற்றி ஆலோசிக்கவல்லை. வழமை போல நாளாந் தச் செயற்பாடுகள் நடந்தாலும் அவள் பாதையில் வந்த விடயம் அவள் மட்டுமே அறிந்தது.

கவிதை எழுதியவரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் எல்லாமே கவிதைகளாய் பிறந்தன அவளுக்கு... கவிதைகள் ஒவ் வொன்றாலும் வளர்ந்து காலநீரோட்டத்தில் மதிப்பிற்குரிய கவிதாயினியானது பெருமைக்குரியது.

பூங்கோதை வழமை போல கவித்தேடல்களை வளர்த்துக் கொள்வதற்காக நூலகம் ஒன்றுக்குச் சென்று தனக்குப் பிடித்த மானவர்களின் புத்தகங்களை தேடி எடுத்துக் கொண்டிருக்கையில் ஏற்கனவே விழுந்து கிடந்த புத்தகத்தையும் எடுத்துச் சென்று ரசித்து மனம் நெகிழ்ந்தவளுக்கு அதே வரிகள் ... ஆமாம் அதேவரிகள் தான்...

அசந்து போனாள்..... ஆனந்தப்பட்டாள்... அந்தக் கவிவரிகளுக்கு சொந்தமானவரை நினைந்து வேதனையோடு விருப்பமும் கொண்டாள்.

ஒரு விடுதலைப் போராளியின் கவிவரிகள் அவை" நினைந்துருகி அந்த ஆத்மானவனின் வீடு போய்ச் சேர்ந்து ... வாசற்கடவையில் நின்று மனதைத் திடப்படுத்தி "அம்மா...அம்மா" அழைக்கும் குரல் கேட்காததென்னவோ ..... கடவையை திறந்து உள் நுழைந்த பூங்கோதை வீட்டின் பின் புறத்தில் இருந்து வந்த குயிலம்மாவை பார்த்து " அம்மா இது கவிஞர் பொன்மலரவன் அண்ணன்ர வீடோ" என்றாள். ஓம் மேனை வா பிள்ளை உள்ளுக்கு. அழைத்து உட்கார வைத்தவளின் கண்கள் அமைதியாகக் கலங்கியது.

என்னெண்டு தெரியும் பிள்ளை அவன .... நெடுநாளாத் தெரியுமோ.....? இல்லையம்மா என்று தொடங்கி தன் மனக்கிடக்கையின் உணர்வுகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது .... அவளை இறுக்கி அணைத்து "அவன் ஒரு போராளி ... . கெட்டிக்காரன் நல்லாக் கவிதை எழுதுவான் ... கவிதை எழுதுறவையளையும் அவனுக்கு பிடிக்கும்.

ஆரும் கவிதை எழுதினால் அவயளை ஊக்குவிக்க பாராட்டி கடிதம் எழுதுவான். போன வரியமும் பள்ளிக்கூடமொண்டில கவிதைப்போட்டிக்கு வரேக்க என்னட்டயும் வந்திட்டு போனவன் போனது தான். உயிரோட வரேல்லப்பிள்ளை " வேதனை யோடு சொல்லி முடித்த குயிலம்மாவின் கால்களில் விழுந்து வணங்கி மனம் பதைக்க உள்ளுடல் நடுங்க விடை பெற்றுக் கொண்டு தன் வீடு சென்றவள் தாய் பூபதிக்கு தன் மனக் கதவை திறந்தாள். பூங்காவலன்களங்கமில்லாத தன் தங்கையின் கண்ணீரை வருடித் துடைத்தான். தன்னை உருக்கி தன்·படுக்கையறைக்குச் சென்றவளின்....... காதில் .... அதிகாலையில் எந்த கீதங்களும் கேட்கவில்லை. இனிக் கேட்கவும் வாய்ப்பில்லை.

அன்புடன் உனக்கு...
கவிதைகளினது ஆத்மம்
ஆழமானது - அது
உணர்வுகளின் விருட்சமாய்
மிளிர்வதை நான் அறிவேன் -
என் கவித் தனத்தைக் காலம்
முழுவதும் நிலைக்க வைத்தவன்
- நீ தனிமையில் வாழ்வது -
எனக்கு தண்டனையாகிறது
எனவே
நானும் உன்னோடு.....
என்ற சமர்ப்பணத்தோடு காதலையும் சேர்த்து சங்கமித்துப் போயிருந்தாள்.

த.கங்கை ஆத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைக் கலசம்



## சுன்னாகம் என்னாகும்?

சுன்னாகம், மல்லாகம்
என்னாகும் ? நீ
சும்மாயிருந்தால்
சுடுகாடாகும்!
ஊரெழு. உரும்பிராய்
என்னாகும்? நீ
சும்மாயிருந்தால்
நோயாளர் கூடிய ஊராகும்
எமது மண்ணிலே மோசமான
இரசாயன உரக்கலவை-இதனா...
எமது மக்களிடையே புற்றுநோ...
அதிகரிக்கும் கவலை!
எமது குடிநீர் கிணறுகளில்
எண்ணெய்க்கசிவு-இது
எமது நிலத்தில் துளையிட்டு.
திட்டமிட்டு விடப்பட்ட
எண்ணெய்க்கழிவு
திட்டமிட்ட சதியிலே
சிக்கிக்கொண்டது எம்மினம்
உடலிலே விசமேறிச் சாகப்போகிறது
தினம்தினம்!
இந்தக் கொடுமையைப் பார்த்தும்
பார்க்காமலிருக்கலாம் உங்கள் கண்கள்
தயவு செய்து இதைத் தடுத்து நிறுத்துங்கள்!
உங்கள் சுற்றாடலின் நிகழ்காலம்.
உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம்
இதை நீங்கள் உணர்ந்தால்
உங்கள் வாழ்வே பொற்காலம்!
நிலம். காற்று. நீர் இவை மூன்றையும்
நீ பாதுகாக்கப் போராடு
இல்லையென்றால் இவை மூன்றிடமிருந்தும்
உன்னை யாராலும் பாதுகாக்க முடியாது
உண்ணும் உணவிலும் கலப்படம்
கிணற்று நீரிலும் கலப்படம்
வாழ்க்கை என்னவாகும்? பப்படம்!

**லஷ்மன்**
**பிரித்தானியா**

## சிந்தனை தேன் பிலிற்றும் செந்தமிழே

பூவின் இதழாய் நீ விரியும் போது
பூபாளம் இசை எழுப்பும்
தாவி எழும் கடலலையும்
தாலாட்டி உனைப்பாடும்
கூவி எழும் பூங்குயில்கள்
கான இசையில் வாழ்த்துப்பாடும்
ஓவியரும் பேரறிஞர்களும்
ஒருசேர உன்னில் உறைவர்
காவியமாம் செந்தமிழின் கலைவளர
கூண்டுக்கிளி வாழ்நிலை மண்ணில் நீங்க
நாவினிக்க தமிழ் நெஞ்சினிக்க
நல்ல செய்திகளோடு வருவாய்
மாவிளக்கின் ஒளியேற்றி
மறத்தமிழர் வாழ்வு செழிக்க
வலம்புரி சோதரா சங்குநாதா
சிந்தனை தேன் பிலிற்றும்
செந்தமிழாய் மலர்ந்துவா

**சந்தியாபாலா**
**அல்லைப்பிட்டி**



தொடங்கப்படாத
வாழ்வென்றும்
முடிவே இல்லாத
பயணமென்றும்
எங்கும் இருப்பதில்லை
ஆரம்பம் ஒன்று இருந்தால்
முடிவு இருக்கும்- ஆனால்
அதுமுடிந்த முடிவல்ல
வாழ்க்கை ஒருவட்டம்
அதற்கு தொடக்கமும் இல்லை
முடிவும் இல்லை

மாவை. நா.கஜேந்திரன்

## ஏழையின் தாய்மொழி

விழியோரம் துளிக்கண்ணீர்
விடிவில்லை என எண்ணி
வடிந்தோடும் தினந்தோறும்
வார்த்தைகள் அதற்கில்லை
புவிமீது மாந்தர் எல்லாம்
பூரித்து தான் இருக்க- ஏழை
விழிமட்டும் விடிவை எண்ணி
ஏங்கித் தவிக்கிறது
ஏழைவிடும் கண்ணீரில்
எத்தனை பொருள் இருக்கும்- அதை
புரியாத பல உள்ளங்கள்- அவரை
புறம்தள்ளி வாழ்ந்திருக்கும்
வலிகொண்ட ஏழைக்கு
வார்த்தைகள் எதுவுமில்லை
அவர் விழி சிந்தும் கண்ணீரே
இவர்களின் தாய்மொழி

**யாழ் ஊர் பி.சர்மி**

# மௌனத்தின் தேடல்- 237



## வான்மதிபோல்

சினக்கண்களும்
தமிழ்மொழியின்
தேன் சிரிப்பும்
வாழை இலையைக்
குடையாக்கி மழைத்துளியைத்
தொட்டுக்கொண்டிருக்கும்
நீங்கள், அமைதியைத்
தொலைத்து விட்டிருக்கும்
என் மனதிற்கு வான்மதிபோல்
நிம்மதி தருகின்றீர்கள்

*க. அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

## புதிய உத்தி

பள்ளிச் சிறுவர்களே
கொட்டும் மழையில்
நனையாமல் தப்பிக்க
உங்களுக்கு இந்த வாழையிலையும்
ஒரு குடையானதோ?

*ச. ஜெயரூபன்*
*பருத்தித்துறை*

## இன்பமழை

புன்சிரிப்பு மனநிறைவு
புலரும் இன்பமுறு எதிர்காலம்
பிஞ்சுமன ஒருமையினால்
அஞ்சிடுமோ இனபேதம்
நாட்டுமழை பாராது
ஒருபோதும் மொழிபேதம்
இதுபோல ஓராட்சி நீட்சியுறில்
இப்படியோர் இன்பமழை
நானிலமும் வேண்டுமடா

*சாங்கையூர் வினிஸ்*
*பண்டத்தரிப்பு*

## சிதறிடும் மழைத்துளியில் உதிர்ந்திடும் சிறுவர்கள்

சின்னச் சின்ன
மழைத்துளிகள்
சிதறிவிழும்போது
சிதறிய துளிகள்
சிரசில் சிந்தாது செல்ல
பிஞ்சு (வடு) நெஞ்சுகளின்
வறுமை ஆயுதம்

*த.பிரதீஸனன்*
*கண்ணகி நகர்*

## சிரிப்பு

சிறிசுகளே!
சிரியுங்கள் சிரியுங்கள்
அடம்பன் கொடியும்
திரண்டால் மிடுக்காய்
திரண்டு நில்லுங்கள்
ஊர் உங்களை
சிரிக்க வைத்திடாமல்

**வைமன், கைதடி**

## அடிவிழும்

மழை வந்தால் தடிமன் வரும்
தடிமன் வந்தால் தும்மல் வரும்
என்பதை புரியாமல்
நனைகிறீர்களே!
வீட்டில் அம்மா
கோபம் என்பதை அறியாமல்

*வீரவேல்*
*கொக்குவில்*

## பொழியட்டும் மும்மாரி

தந்தையர் முறைத்திட
அன்னையர் பதைத்திட
கொட்டும் மழையிலே
நண்பர்கள் மூவருக்கும்
ஆனந்தக் கொண்டாட்டம்
மண்பயனுற
பயிர்கள் செழித்திட
நாடு வளம்பெற
எல்லோரும் வாழ்ந்திட
வேண்டும் இங்கொரு மும்மாரி

*லீலா சிவவடிவேல்*
*இணுவில் மேற்கு*

## கவலையிலும் மலரும் மலர்கள்

அழகென்னும் வனப்பிலே
பச்சைத் தாவணிக்குள்
பட்டினியாய்
பாலகர் நாம்
அழுத்துகின்ற
சுமைகள் நெஞ்சில்
அத்தனையையும்
மறைத்துவிட்டதே
இந்த மழைத்துளிகள்

*ந.கௌரிராஜ்*
*மயில்வாகனபுரம்*

## வாழ்க்கை

வாழவைக்கும் வாழை இலையுடன்
விளையாடும் சிறுவர்களே!
வாழ்க்கை விளையாட்டல்ல
சிரிப்பு நிரந்தரமானதுதான்
சிந்திக்க மறந்தால்
சிரிப்பாகி விடும் வாழ்வு
சிந்தி சிரி வாழ்


*அனு, மானிப்பாய்*

## செல்வரே!

விரிந்து வரும் மேகம்
மழையாய் பொழியும் வேளை
சிரித்து விளையாடும்
என்செல்வங்களே
ஒருநாளும் பிரியாமல்
ஒன்றாய் இருந்திடுங்கள்
வரும் இடிகள் எல்லாம்
பனியாய் விலகும்

*க.நாகராசா*
*நுணாவில்*

# மௌனத்தின் தேடல் -238



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 18.02.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணத் தோற்றமும் பரிணாமமும்

உலக சனத்தொகையில் அதிக ரசிகர்களைக் கொண்ட விளையாட்டாக காணப்படும் காற்பந்துடனேயே பின்னிப்பிணைந்திருந்த உலகக்கிண்ணம் என்ற பதம் தற்போது கிரிக்கெட்டுடன் மிகமிக அந்நியோன்னிய மாகியுள்ளது. பதினாறாம் நூற்றாண்டு முதல் தற்போது வரை கிரிக்கெட் வரலாற்றுப் பாதையைக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக 1844ஆம் ஆண்டு முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தாலும், சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்ட 1877ஆம் ஆண்டிலிருந்துதான் கிரிக்கெட்டின் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரலாறு ஆரம்பமாகின்றது. அவ்வாறிருக்கையில் டெஸ்ட் கிரிக்கெட் ஆரம்பித்து 94வருடங்களின் பின்னர் 1971ஆம் ஆண்டே ஒருநாள் கிரிக்கெட் தோற்றம்பெற்றதுடன் அதன் தொடர்ச்சியாக 1975 இல் கிரிக்கெட் அரங்கில் உலகக் கிண்ணத் தொடரானது அறிமுகமாகி தற்சமயம் வெறுமனே நான்கு தசாப்தங்களாகின்றன. இருப்பினும் அதன் தாக்கமும் பிரபல்யமும் அபரிமிதமானது என்று கூறலாம்.

இந்நிலையில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கிரிக்கெட் அணிகளுக்கிடையில் பெருந்தொடரொன்றை நடத்துவது என்ற தீர்மானத்திற்கு அமைவாக 1975 ஆம் ஆண்டு முதற்தடவையாக அக்கால கட்டத்தில் காணப்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான போட்டித்தொடரொன்று நடத்தப்பட்டது.

இத்தொடரானது புருடென்ஷல் கிண்ணத் தொடர் என்றே அழைக்கப்பட்டு வந்தது. 1983 ஆம் ஆண்டு வரை இப்பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தது. காரணம், கிரிக்கெட்டின் தயாகமான இங்கிலாந்தின் பிரபல தனியார் பங்குச் சந்தையான புருடென்ஷல் நிறுவனமே கிரிக்கெட் போட்டிகளுக்கான பிரதான அனுசரணையாளராக காணப்பட்டதால் அப்பெயராலேயே வெற்றிக்கிண்ணமும் அழைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அனுசரணை வெவ்வேறுபட்ட தரப்பினரிடம் கைமாறியபோது அவ் அனுசரணையாளர்களின் பெயராலே அழைக்கப்பட்ட போதும் 1999ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதாவது சர்வதேச கிரிக்கெட் சபையின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கிரிக்கெட் கொண்டு வரப்பட்டதையடுத்து உலகக் கிண்ணம் என அழைக்கப்படலாயிற்று.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச கிரிக்கெட் வாரியத்தால் நடத்தப்படுவது தான் உலகக்கிண்ண கிரிக்கெட்.

கடந்த 1912 ஆம் ஆண்டு டெஸ்ட் அணிகளாக அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகளை வைத்து முத்தரப்பு தொடர் நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் மோசமான காலநிலை காரணமாக கடைசியில் கைவிடப்பட்டது.

இதனை தொடர்ந்து குறிப்பிட்ட ஓவர்களை கொண்ட போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட அவை மக்களை வெகுவாக கவர ஆரம்பித்தன.

இதுவே உலகக் கிண்ணப் போட்டிகளின் அத்திவாரம் என்று சொல்லலாம்.

முதலில் 60 ஓவர்களை கொண்டு தொடங்கிய இந்தப் போட்டிகள் 1983 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிக்கு பின்னர் 50 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

**உத்தியோகபூர்வமான கிண்ணம் உருப்பெற்றது**

1975 முதல் 1999 வரையில் வெவ்வேறு வடிவிலான கிண்ணங்களே வெற்றிபெறுபவர்களுக்கு வழங்கப்பட்டன. 1999ஆம் ஆண்டு முதற்தடவையாக சர்வதேச கிரிக்கெட் சபையின் தீர்மானத்திற்கு அமைவாகவும் கிரிக்கெட்டின் மகிமையைப் பறைசாற்றும் வகையிலும் பந்து, விக்கெட்டுக்கள், துடுப்புமட்டை ஆகிய மூன்றையும் பிரதிபலிக்கும் வகையிலான தற்போதைய கிண்ணம் வடிவமைக்கப்பட்டது. இங்கிலாந்தின் பிரபல்யம் பெற்ற நகைக்கடையான ஜெரால்ட் நிறுவனமே வெள்ளி மற்றும் கில்ட் எனப்படும் ஒருவகை உலோகத்தினால் இக்கிண்ணத்தை வடிவமைத்தது. 11கிலோகிராம் எடையுள்ள இக்கிண்ணமானது 60 சென்ரிமீற்றர்கள் உயரமுடையது. இக்கிண்ணத்தை எத்திசையில் நின்று பார்த்தாலும் எந்தவேறுபாட்டையும் காணமுடியாத விந்தைமிகுந்த விடயத்திற்கு பிளேடெனிக் முறையில் வடிவமைக்கப்பட்டமையே காரணமாகின்றது.





70இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இக்கிண்ணத்தின் கீழ்ப்பகுதியிலிருந்து மேலாக கடந்த காலங்களில் வெற்றி பெற்ற அணிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வெற்றிபெறவிருக்கும் அணிகளின் பெயர்களும் பொறிப்பதற்கான வசதியுள்ளதாக கூறப்படுகின்றது. உலகக் கிண்ணத் தொடர்களில் வெற்றி பெறும் அணிக்கு இக்கிண்ணம் வழங்கப்படுவதில்லை என்பதுடன் இக்கிண்ணத்தைப் போன்ற நகலொன்றே வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் அதன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியம் என்ன ?

நண்பனே நம் நாட்டில் இலக்கின்றி சுத்திக் கொண்டிருக்கின்ற இளைஞர்களின் நீயும் ஒருவன் என்று சொல்லிக் கொள்ள விரும்பமாட்டாய் என நம்பிக்-கொண்டு மேலும் தொடருகிறேன்

"வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் உண்மையானது அந்த நிமிடங்கள் இலட்சியங்களால் மட்டுமே கௌரவிக்கப்படுகின்றன"

உன்னுடைய இலட்சியம் தான் என்ன?

நீ இலக்கற்றுச் சுற்றுகின்றாய் என்பது தெரிந்து கொள்ளும் நாள் வரும்வரை இலட்சியம் கண்ணுக்குத்தெரியாது தோழா! சமூகக்கருவறை பெற்றெடுத்த சிசுக்களில் இளம்சிசு நீ மட்டும் இப்படி உதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாய்.

உன் உருப்படாத செயல்களால். "உலகம் ஆயிரம் சொன்னாலும் உனக்கு நீதான் நீதிபதி" என்று நீ நினைத்தால் நீ எந்தவொரு குற்றவாளியிடமும் தோற்றுப் போகமாட்டாய். ஆனால் நீயோ. சேறும் நீரும் கலந்த நிலத்தில் நீரை மட்டும் குடிக்கும் அன்னப் பறவைகளை விட்டு. பன்றிகளோடு பரிவுகொண்டு திரிகிறாய். வேண்டாம் நண்பா!. உனக்குள் ஆயிரம் சூரியனுக்கிருக்கும் சக்தி இருக்கின்றது. உன்னால் உலகையே ஆட்சி செய்யமுடியும். உள்ளத்தில் உன்னத சிந்தனைப்பயிர்களை நட்டுவிடு. தேர்முட்டிகளில் அமர்ந்து தேவையற்ற கதைகள் பேசி. கூட்டங்கள் பல கூடி குறும்பு செய்கின்றேனென்று நேரத்தை நாட்களைகளிக்கின்றாய்.

"நீ எதுவாக மாற நினைக்கிறாய்? அதுவாக ஆகின்றாய் நீ உன்னை வலிமை படைத்தவன் எண்றெண்ணி விட்டால் வலிமை படைத்தவனாக ஆகிவிடுவாய்" என்றெல்லாம் சொல்லிச் சென்ற விவேகானந்தர் ஓர் இளைஞன். கையில் இலட்சியக் கனிகளை வைத்துக் கொண்டு கசந்து வெந்து போன காய்களை கவர நினைக்கிறாய்! விஞ்ஞானப் பாடங்கள் படிக்கின்ற கலாசாலை ஒன்றில் ஓர் ஆசிரியர் படிப்பித்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் அனைவரும் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தனர். அப்போது மாணவி ஒருத்தி மயங்கி விழுந்தாள். முகம் வெளிறியிருந்தது. உடல் சோர்ந்துகிடந்தது. அவள் ஏழை அவளுக்கு போதிய பணம் இல்லை. பல நாட்கள் தொடர்ந்தாற் போல பட்டினி கிடந்தாள். பசியினால் அவள் மயங்கி விழுந்தாள். பசியையும் பொருட்படுத்தாது பாடுபட்டுப் படித்த அந்தப் பெண்தான் உலகம் போற்றும் பெரிய விஞ்ஞானியானாள். அவள் தான் மேரி கியூரி.

ஏன் இந்த விடயத்தைச் சொல்கின்றேன் என்றால், முன்னெல்லாம் ஒரு நேர உணவுக்கே கஷ்ரப்பட்டுக் கொண்டு படித்த இளைஞர்கள், வேலைக்குப் போய்க் கொண்டு சாதித்த இளைஞர்கள் இருந்தனர். ஆனால் இன்று நாங்கள் கொஞ்சம் நன்றாக இருக்கின்றோம். நீ கற்றுச் சாதித்து நாடு போற்ற வேண்டும் என்று சிலநேரங்களில் உன் சகோதரன் வெளிநாட்டில் ஓட்டை விழுந்த சப்பாத்துக்களுடன் ஓடி ஓடி உழைக்கலாம். நினைவில் வை! ஒரு நாட்டில் இளைஞன் ஒருவன் தோற்றுப்போகின்றான் என்றால், பல புதிய கண்டு பிடிப்புக்கள் நமக்கு கிடைக்காமற் போகும். புதிய கண்டுபிடிப்புக்கள் இல்லாவிடின் எங்கள் நாடு அபிவிருத்தி பாதையில் கரையோரத்தில் கவனிப்பாரற்று நிற்கும். யோசித்துப்பார் ! உன் ஒருவனின் தோல்வி நாட்டில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விடும். முன்னொரு காலத்தில் இலக்கு வைத்துச்சுடப்பழகிய இளைஞர்களை நம் இளம் சமூகத்தில் கண்டிருந்தோம். அவர்கள் தங்கள் வாழ்வின் இலட்சியங்களை நோக்கி இலக்கு வைத்திருந்தார்களாயின் இன்றைக்கு எங்களிடம் பல மேதாவிகள் மலிந்திருப்பர். போனது போகட்டும். நீ அவற்றை மறந்து புதிய பாதையை வகுத்துவிடு.

"நான் ஒரு வைத்தியனாகுவேன்" என்ற இலட்சியத்தோடு புறப்பட்ட பலர், கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல, கையில் ஒரு ஆட்டோவுடன் நிற்கின்ற யதார்த்த நிலை பார்ப்பதற்கு கவலையை தந்தாலும் பல வைத்தியர்களை உருவாக்குவதற்கு நீயும் தனியார் கல்வி நிலையங்களுக்கு பணம் செலுத்திவிட்டாய் ! என்ற பாரிய உண்மையை நீ புரிந்து கொள்ளும் போது உன் சரியான தெரிவு எது என்பதைக் கண்டுபிடி.

உனக்கு தெரியாமற் கூட இருக்கலாம் சிலவேளை உன் திறமையை மற்றவர்கள் கண்டுபிடித்து தருவர். ஏற்றுக் கொள். "முடிந்து விட்டது, இனி என்ன செய்வது? ஏதாவதொரு வேலையைச் செய்வோம்" என்றெண்ணி உன் எதிர்காலம்

யாழ் தர்ஷி

பற்றிய எதிர்பார்ப்பை ஆசையை ஏக்கக் கனவை விட்டுவிடாதே. கைவிட்டு விடாதே ! கோழிக் குழம்பு சாப்பிட ஆசைப்பட்டுக் கொண்டிருந்த நீ, கருவாட்டுச் சொதியுடன் சோறுண்ட கதையாகத்தான் இருக்கும். இதுதான் வாழ்வின் யதார்த்தம். மற்றவர்களைவிட நீ சிறப்பானவன். இளம் பருவத்தில் கால்வைத்த உன்னால் மட்டுமே புதுமையைப் படைக்க முடியும். புதிர் நிறைந்த வாழ்வில் புகழ் பூக்க முடியும். உன்வயதில் வாழ்வின் உண்மையை, தனக்குரிய இலட்சியத்தைக் கண்டுபிடித்தவர்கள் மட்டுமே சாதித்து ஓய்ந்து போவார். "நான் அப்துல் கலாமைப் போல வருவேன்" என்று பெரிய ஓர் ஆசையை வளர்த்துவிடுவர் சின்ன வயதில், நீ வளரும் போது, உனக்கு ஆசை ஏ.ஆர் ரஹ்மானைப் போல வரவேண்டும் என்று. இவையெல்லாம் தாண்டி நீ யார்? நீ ஏன் உன்னைப் போல வரக்கூடாது. நீ ஏன் உன் எண்ணத்தைத் தாண்டி அதற்கு உருவம் கொடுத்து உன் பெயரைப் பொறிக்கக் கூடாது. "பாதைகள் நன்றாக இருந்தால் பயணமும் நன்றாகவே இருக்கும்" நண்பா உன் பாதைகள் நன்றாக இருக்கின்றது பயணத்தை நன்றாக மாற்றிவிடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



மகிந்த ராஜபக்ஷவுக்கு மைத்திரிபால பதிலடி கொடுப்பாரா?

பெண்கள் ஏன் அழகாக இருக்கிறார்கள்?




**க.தில்லையம்பலம் — வதிரி**

*புதிய அரசினால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவது கிலுகிலுப்பையா பணியாரமா?*

இலங்கை சுதந்திரதினத்திற்கு போனதிலிருந்து கிழக்கு மாகாண சபை ஆட்சியை கோட்டை விட்டது வரை எங்கள் ஆட்சியாளர்களின் கோமாளித்தனம் புரிகிறது அல்லவா. போகிற போக்கைப்பார்த்தால் ஒருவர் கிலுகிலுப்பையையும் மற்றவர் பணியாரத்தையும் எடுத்துவிட்டு எங்களை நடுத்தெருவில் விடுவார்கள் போல தெரிகிறது.

**ஈசா ஜெபா — திக்கம்**


*இன்றைய காலத்திற்கு ஏற்ப புது மொழி ஒன்று சொல்லுங்க?*

மற்றவரின் மனம் பலூன் போல அதில் ஒருதடவை முள் வைத்து விட்டு அதன் பின் பூ வைக்க நினைத்தால் முடியாது.

**ஆர்த்திகன் — கரணவாய்**

*மகிந்த ராஜபக்ஷவிற்கு மைத்திரிபால பதிலடி கொடுப்பாரா?*

தேர்தலுக்கு முன்னர் அவருக்கு கைலாகு கொடுக்காமல் சென்று விட்டு கறை படிந்த் அவரின் கைகளை பற்ற விரும்பவில்லை. என்று மிகப்பெரிய அ (இ) டி கொடுத்துவிட்டாரே.



**மது — சாவகச்சேரி**

*திருமணம் என்று வந்துவிட்டால் அழகே அங்கு முக்கியமாகிறது ஏன்?*

கல்யாணத்திற்கு முன் போட்டோவைப் பார்த்து மாப்பிளைக்கு தலை வழுக்கை என நிராகரித்த 90 வீதமான பெண்கள் கல்யாணம் செய்து பத்து வருடங்களில் ஒரு வழுக்கை மாப்பிளையுடனேயே வாழ்க்கை நடத்துகின்றனர். அதேபோல் பெண் குண்டு என்று நிராகரித்த 90 வீதமான ஆண்கள் திருமணம் முடித்து மூன்று வருடங்களிலேயே ஒரு குண்டான பெண்ணுடனேயே வாழ்க்கை நடத்துகின்றனர். இதுதான் யதார்த்தம்.

**கௌரீசன் — அல்வாய்**

*நமக்கு பிடிச்ச பொண்ணுக்கிட்ட எப்படி காதல சொல்லலாம்?*

கோவிலுக்குள்ள காதல சொன்னா செருப்பிருக்காது தெரிஞ்சுகோ. ஆண்க்ள் பெண்களிடம் தங்கள் காதலை சொல்லும் போது ஏன் செருப்பை கலட்டிறாங்க தெரியுமா? ஆண்களோட இதயம் கோவில் மாதிரி கோவிலுக்குப்போகும்போது செருப்பை கலட்டுவதுதானே புனிதம்.

**நிசா யாழ்ப்பாணம் — ஆதிஸ் அல்வாய்**

*பெண்கள் மனதில் ஆண்கள் இருக்கிறார்கள் என்பதை எப்படி அறியலாம்?*

உங்களிடம் பேசும் போது கைக்குட்டையை கசக்குகிறாரா? சுடிதாரின் துப்பட்டாவை அடிக்கடி சரி செய்கிறாரா? எந்த முறையும் சொல்லாமல் உங்களை அழைக்கிறாறா? வேறு பெண்களுடன் நீங்கள் பேசினால் அவரின் முகம் வாடி விடுகிறதா? உங்களைப் பார்க்க வந்துவிட்டு தற்செயலாக உங்களை சந்திப்பதாக சொல்லுகிறாரா? குட்மோனிங் முதல் குட்நைட் வரை தான் செய்யும் செயல்கள் எல்லாம் எஸ்.எம்.எஸில் வருகிறதா? இந்த கேள்விகள் அனைத்துக்கும் ஆம் என்று விடை வந்தால் ஆம் என்பது தான் பொருள்.

**தமி — மீசாலை**



*என்வகுப்புத் தோளி ஒருத்தி என்னை றோட்டில் பார்த்தால் காணதது போல சென்றுவிடுவாள் பிறகு கேட்டால் காணவில்லை என்கிறாளே?*

சிலர் கண்களுக்கு மிருகங்களைத் தெரியாது, சில மனிதர்களின் கண்களுக்கு தெரிவதே இல்லை இதில் நீங்கள் எந்த ரகம்?

**தனாதீபன் — விஸ்வமடு**

*பணம் நகை என்று சுற்றித்திரியும் பெண்களை என்ன செய்யலாம்?*

எங்கள் ஊரில் நீங்கள் கூறியது போல் ஒருவர் இருந்தார். யாரையும் மதிப்பதில்லை. பணம் தான் எல்லாம் என்று இறுமாப்புடன் அலைந்தார்.
ஒருநாள் வீதியோரமாகச் சென்ற அவரை ஒரு பஸ் மோதிவிட்டுத் தப்பிச்செல்ல வீதியில் அனாதையாய் கிடந்தார்.
அவர் பெரிதாய் நினைத்த பணம் அவர் கையிலும் நகை அவர் கழுத்திலும் இருந்ததே தவிர அவரை தூக்கி நிறுத்தவில்லை.
யாரை அவர் ஏழை என்று ஒதுக்கினரோ அவர்களே அவரை வைத்தியசாலையில் சேர்த்தார்கள்.
பணம் சேர்ப்பதிலும் நல்ல மனிதரை சேருங்கள்.

**தாரு — அல்வாய்**

*திறமைக்கும் புத்திசாலித்தனத்திற்கும் என்ன வித்தியாசம்?*

ஒரு பெண்ணை காதலிப்பது திறமை அவள் நண்பிக்கும் நூல்விட்டு அந்த நூலிலே இந்தப்பட்டத்தையும் ஏற்றுவது புத்திசாலித்தனம் புரிந்ததா.

**அனந்திகா — சிறுப்பிட்டி**

*நம்தரத்திற்கு ஏற்றாள் போல் நண்பர்களை வைத்துக்கொள்ளலாமா?*

எனக்கு நண்பனாக இருப்பதற்கு எந்த தகுதியும் தேவையில்லை. எதிரியாக இருப்பதற்கு தகுதி தேவை இதை நான் சொல்லவில்லை நம்ம தல சொல்லுகிறார்.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

*பெண்கள் ஏன் அழகாக இருக்கிறார்கள்?*

ஆண்களை அழ வைப்பதற்காக

# திருவிவிலியத்தில் நீதி மொழிகள் கூறும் பெண்ணியம்

- கருணையுள்ள பெண் மதிப்பை பெறுவாள் 11 : 6
- மதிகேடாய் நடக்கும் பெண் பன்றியின் மூக்கில் உள்ள தங்க மூக்குத்திக்கு சமனானவள் 11 : 22
- மதியற்ற பெண் வாயாடியும், ஒழுக்கம் அறியாத அறிவிலியுமாக இருக்கிறாள் 9 : 3
- அறிவுள்ள பெண் தன் வீட்டைக் கட்டுகிறாள்
  அறிவில்லாத பெண் தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள் 14 : 1
- விவேகம் உள்ள பெண் கத்தர் அருளும் ஈவு 19 : 14
- சண்டைக்காரியும் கோவக்காரியுமான பெண்ணுடன் குடியிருப்பதை விட
  பாலை வெளியில் குடியிருப்பது நலம் 22 : 19
- விபச்சாரியின் வாய் ஆழமான படு குழி 22 : 14
- குணசாலியான பெண்ணின் மதிப்பு முத்துக்களை விட உயர்ந்தது. 31 : 10
- பெண்ணுடனே விபச்சாரம் செய்யிறவன் மதிகெட்டவன் அவன் தன்னையே அழிந்துத் கொள்வான் 6 : 32
- விபச்சார பெண்ணுக்கு உன்னை விலக்கிக் காப்ப[illegible] என்றும் இனத்தார் என்றும் சொல்வாயாக 7 : 4-5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானரத்தின பைரவகீதங்கள்



கடந்த 28.12.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் பூநாரி மரத்தடி செல்வமஹால் மண்டபத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

ஞானரத்தின பைரவகீதங்கள் ஒலியிசைப்பாடல் இறுவெட்டு, விரதமஞ்சரி காணொலி இறுவெட்டு, செல்வன் ஷைலேந்திர சர்மாவின் இசையரங்கு என முக்கலவை நிகழ்வுகளாக இவ் விழா நடைபெற்றது சிறப்புக்குரியது.

சித்தங்கேணி சிவன் தேவஸ்தான குருவாக விளங்கிய அமரர் சிவஸ்ரீ ஞானபண்டிதக் குருக்களின் 30-வது ஆண்டு நினைவை முன்னிட்டும், அவரின் பாரியார் அமரர் இரத்தினம்மாவின் நினைவு சுமந்தும் ஞானசபாரத்தின சர்மா அவர்களின் புதல்வர்களால் ஒழுங்கு செய்யப்பட்டதே இவ்விழாவாகும்.

இதில் மிக முக்கியமானதாக எனக்குப்பட்டது ஞானரத்தின பைரவகீதங்கள் எனும் இசைப் பாடல் தொகுப்பு.

இவ்விசை இறுவெட்டில் குரலறிமுகத்தை தொடர்ந்து மொத்தம் ஏழு பாடல்கள் இருக்கின்றன. இந்த இறுவெட்டே ஒரு புதிய முயற்சியென்றால் அதனுள் இருக்கும் முதல்பாடலும் இன்னொரு புதுத்தன்மையை கொண்டுள்ளது.

அதாவது முதல் பாடல் பைரவருக்கான பள்ளியெழுச்சிப் பாடலாக அமைந்துள்ளது. பைரவருக்கு பள்ளியெழுச்சி பாடுவது என்பது மிகமிக அரிதான விடயமாகும். அதை இவ்விறுவெட்டிலே சாத்தியமாக்கி இருக்கிறார்கள் ஞானரத்தினம் வெளியீட்டகத்தினர்.

முதலில் பைரவருக்கு பள்ளியெழுச்சி பாடப்பெறுவது சாலப் பொருத்தமானது என அன்றையவிழாவில் உரையாற்றிய சிவஸ்ரீ. தாணு மகாதேவக்குருக்கள அவர்களின் கருத்தையும் இங்கே வழிமொழிவது அவசிய மாகும்.

இதில் உள்ள பாடல்கள் அனைத்தையும் சபா.வாசுதேவக் குருக்கள் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஞமலிவாகனன் என்ற நல்ல சொல்லை கையாண்டிருப்பதையும், நிறைவில் வருகின்ற நாமாவளிக்கு முன்வரும் பாதிமதி, சூடி பாம்பணிந்த பெருமான் என்று தொடங்கும் துதியிலும், ரேவதி இராகத்தை மையப்படுத்தியமைந்த "காப்பவனே உலகை" என்ற பாடலில் நவக்கிரகங்களால் ஏற்படும் தோஷங்கள் நீங்க எந்த எந்த பைரவமூர்த்தங்களை வழிபட வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது போன்றவைகளிலும் இவ்வாளுமைகளை நாம் காணலாம்.

இப் பாடல்களுக்கான இசையினை இசைக் கலைமணி செல்வச்சந்திரன் வழங்கியிருக்கிறார். வார்த்தைகளின் அர்த்தம் உணர்ந்தும் அப்பாடல்களின் தேவையுணர்ந்தும் அதற்கான இசையை கையாண்டிருப்பது சிறப்பிற்குரியது.

எஸ்.ஜீ. சாந்தன் பாடிய "அண்ட பிரகண்டம் அனைத்தும் நடுங்க" என்ற ஷண்முகப்பிரியா இராக அடிப்படையில் அமைந்த பாடலை சிறப்பித்து சொல்ல முடியும். எந்தக் கட்டங்களிலும் இசை மேவாமலும் பாடல்களின் பக்தித்தன்மை குறையாமலும் பாதுகாத்து இசையமைத்திருப்பது பாரட்டப்பட வேண்டியதே.

இருப்பினும் மிக அரிதாக ஒருசில இடங்களில் வார்த்தையும் இசையும் பொருந்தும் தன்மை இன்னும் சற்று அழுத்தமாக பதிந்திருக்கலாமோ என்று எண்ணவும் தோன்றியது.

"தூக்கிய திரிசூலத்தால்" என்ற பாடலில் வரும் பைரவா, பைரவா உள்ளிட்ட இணை குரலில் வந்த மெட்டை உதாரணமாக குறிப்பிட முடியும். இருப்பினும் ஜெயராமன், சிவகுமார், சத்தியன், துரைராஜா, வேல்மாறன், நந்தகுமார், பானுதீபன், வேதாஷினி போன்ற யாழ்ப்பாணத்தின் பெருமை மிகு கலைஞர்களின் பங்காற்றுகையுடனும் சாந்தன், சுகுமார், தனசொரூபி, உமாரமணக் குருக்கள், கதிர், சுந்தரலிங்கம், தர்சனன் ஆகியோரின் குரலினிமையிலும் இப்பாடல்கள் செவிக்கு தேன் பாய்ச்சுகின்றன என்பதை மறுக்க முடியாது.

சமகால படைப்புகளுடன் ஒப்பு நோக்கும் போது இவ்விறுவெட்டில் முதன்மையாக இருப்பது ஒலிப்பதிவு என்றே சொல்ல வேண்டும். பக்திப்பாடல்களின் தன்மையுணர்ந்தும், மெருகேற்றப்பட்ட இசையின் வலிமையுணர்ந்தும், பாடகர்களின் குரல்வள பக்குவமுணர்ந்தும் அதற்கேற்ப ஒலிப்பதிவினை ஸப்தமி கலையகம் மேற்கொண்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியது. ஒலிப்பதிவாளர் கோ.சத்தியன் மிகச்சிறந்த இசையமைப்பாளராக இருப்பதும் இப்பாடலின் இறுவெட்டின் ஒலிப்பதிவு வெற்றி சாத்தியமாகியுள்ளது என்று கருதலாம். அடிப்படையில் இது பக்தி மேலோங்கிய கடவுளுக்கான படைப்பு. அதில் மனித மதிப்பீடுகளுக்கு இடமில்லை. இருந்தாலும் அதன் அருமை பெருமைகளை எடுத்தியம்புவதும் வழிபாட்டியலின் ஒரு அம்சமே என்பதற்கிணங்க இவ் விடயங்கள் இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. உண்மையில் எமது படைப்புலகமும், பக்தியுலகமும், இசையுலகமும் ஏன் அனைவருமே கேட்டு பயன் பெற வேண்டிய இசைப்பாடல் இறுவெட்டு இது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

**கவிஞர் : கு.வீரா**

# காலத்தால் அழியாத கானங்கள்...

படம் : விவசாயி
பாடியவர் : T.M.சௌந்தரராஜன்
இயற்றியவர் : A.மருதகாசி
இசை : K.V.மகாதேவன்
வெளியான வருடம் : 1967




கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி
விவசாயி .... விவசாயி ....
கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி
விவசாயி .... விவசாயி ...

முன்னேற்ற பாதையிலே மனச
வைத்துமுழு மூச்சா அதற்காக
தினம் உழைத்து
முன்னேற்ற பாதையிலே மனச
வைத்துமுழு மூச்சா அதற்காக
தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்து பிறர்
வாழமண்ணிலே முத்தெடுத்து
பிறர் வாழவழங்கும் குணம்
உடையோன் விவசாயி
விவசாயி ... விவசாயி ....

என்ன வளம் இல்லை இந்த
திருநாட்டில்ஏன் கையை ஏந்த
வேண்டும் வெளிநாட்டில்
என்ன வளம் இல்லை இந்த
திருநாட்டில்ஏன் கையை ஏந்த
வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய் பாடு படு வயல்
காட்டில்ஒழுங்காய் பாடு படு
வயல் காட்டில்உயரும் உன்
மதிப்பு அயல் நாட்டில்
விவசாயி .... விவசாயி ....

கருப்பென்றும் சிவப்பென்றும்
வேற்றுமையாய் கருதாமல்
எல்லோரும் ஒற்றுமையாய்
கருப்பென்றும் சிவப்பென்றும்
வேற்றுமையாய் கருதாமல்
எல்லோரும் ஒற்றுமையாய்
பொறுப்புள்ள பெரியோர்கள்
சொன்னபடி பொறுப்புள்ள
பெரியோர்கள் சொன்னபடி
உழைத்தால் பெறுகாதோ
சாகுபடி விவசாயி ....
விவசாயி....


இருந்திடலாம் நாட்டில் பல
வண்ணக்கொடி எத்தனையோ
கட்சிகளின் எண்ணப்படி
இருந்திடலாம் நாட்டில் பல
வண்ணக்கொடி எத்தனையோ
கட்சிகளின் எண்ணப்படி
பறக்க வேண்டும் எங்கும் ஒரே
சின்னக் கொடி அது பஞ்சம்
இல்லை என்னும் அன்னக்கொடி
பஞ்சம் இல்லை என்னும்
அன்னக்கொடி
விவசாயி .... விவசாயி ....

**அன்பு வாசகர்களே !**

காலத்தால் அழியாத கானங்கள் பகுதிக்கு, தாங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியை எழுதி, ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சங்குநாதம், இல.3. 2ஆம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள் நீங்கள் விரும்பும் பாடல் இப் பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

# ஈழத்து கவிஞர்கள்



கவிஞர்
வ.ஐ.ச.ஜெயபாலன்

**பாலைப் பாட்டு**

வேட்டையாடும்
பின்பனி இரவு அகல
புலரும் காலையில்
உன்னையே நினைந்து
உருகிக் கிடந்தேன்.

அன்பே
மஞ்சத்தில் தனித்த என்மீதுன்
பஞ்சு விரல்களாய்
சன்னல் வேம்பின்
பொற் சருகுகள் புரள்கிறது.
இனி வசந்தம் உன்போல
[illegible]
வரும்.
கண்ணே நீ பறை ஒலித்து
ஆட்டம் பயிலும் முன்றிலிலும்
வேம்பு உதிருதா?
உன் மனசிலும் நானா?
இதோ காகம் விழிக்க
முழங்குமுன் கைப்பறை
இனி இளவேனில் முதற்
குயிலையும்
துயில் எழுப்புமடி.

நாளை விழா மேடையில்
இடியாய்ப் பறை அதிர
கொடி மின்னலாய் படருவாய்
என் முகில் வண்ணத்
தேவதை.
உன் பறையின் சொற்படிக்கு
பிரபஞ்சத் தட்டாமாலையாய்
சிவ நடனம் தொடரும்.

காத்தவராயன் ஆரியமாலா
மதுரை வீரன் பொம்மியென்று
பிறபொக்கும் மானுடம் பாடி
காதலிலும் இருளிலும்
ஆண் பெண்ணன்றி
சாதி ஏதென மேடையை
உதைத்து
அதிரும் பறையுடன்
ஆயிரம் கதைகள் பறைவாள்
என் சதுரி.
என் காதல் பாடினி
திராவிட அழகின்
விஸ்வரூபியாய்
நீ ஆட்டம் பயிலுதல் காண
உன் உறவினர் வீடுகள்
சிறுத்தைக் குகைகளாய்
நெரியும் தெருவில்
எப்படி வருவேன்?

வேம்பு உதிரட்டும் நீ உதிராதே
ஏனெனில் உதிராத
மனிதர்களுக்கும்
உதிந்த வேம்புகளுக்குமே
தளிர்த்தலும் பூத்தலும்.

நாளை நான் கிளை பற்றி
வளைக்க
உன்னோடு சேர்ந்து ஊரும்
கொய்து
கூந்தல்களில் சூடும் அளவுக்கு
பூப்பூவாய் குலுக்குமடி அந்த
மொட்டை வேம்பு.

தேன் சிந்துமே வாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா செய்தி




இந்த வருடத்தின் லவ்வர் பாய், ட்ரீம் கேர்ள் யார்? காதலர் தினக் கொண்டாட்டத்தின் மெர்சல் கேள்வி இதுதானே?

ஆர்யாவுக்கு இது ஹட்ரிக் சந்தோஷம். இவருக்குத் தொடர்ந்து மூன்றாவது முறையாக 'லவ்வர் பாய்' லைக்ஸ் குவித்திருக்கிறார்கள் டீன் டிக்கெட்ஸ். 'ட்ரீம் கேர்ள்' கிரீடம் ஸ்ரீதிவ்யாவுக்கு !

கடந்த வருட சர்வேயில் சமந்தாவுடன் இரண்டாம் இடத்தைப் பகிர்ந்துகொண்ட "ஊதா கலர் ரிப்பன்' திவ்யா, இந்த வருடம் "ஐ' எமி, "கயல்' ஆனந்தி, "மெட்ராஸ்' கேத்ரின் போன்ற புது வரவுகளைச் சமாளித்து முதல் இடம் பிடித்திருக்கிறார்.

"லவ்வர் பாய் - ட்ரீம் கேர்ள்' சர்வேயில் "சிங்கிள்' ஹீரோக்கள், திருமணம் நடந்திருக்காத ஹீரோயின்களுக்கு மட்டுமே என்ட்ரி. இதனால் விஜய், அஜித், சூர்யா போன்ற ஸ்மார்ட் சீனியர்களும்விஜய் சேதுபதி, சிவகார்த்திகேயன் போன்ற "நம்ம வீட்டுச் செல்லங்களும்' இடம்பெறவில்லை.







ஹீரோயின்களில் நயன்தாரா, அனுஷ்கா, த்ரிஷா ஆகியோர் "சுப்பர் சீனியர்கள்' ஆகிவிட்டதால் இடம்பெறவில்லை. தமிழகம் முழுக்க 5,206 கல்லூரி மாணவர்களிடமும், 5,303 கல்லூரி மாணவிகளிடமும் சர்வே எடுக்கப்பட்டது.




ஆர்யா

இளைஞர்களிடையே நயன்தாராவுக்கு இன்னும் கிரேஸ் எகிறியடிக்கிறது. சர்வே தாளில் 'நயன்தாரா' பெயரைத் தேடிப் பார்த்துவிட்டு காணாமல் 'ஏன் அவர் பெயர் இல்லை?' என விசாரித்த பிறகே, அடுத்த சாய்ஸ் யோசித்தனர் பலர்.




"இப்போ தமிழ்நாட்டுல காணாமல்போன ரெண்டு விஷயங்கள்... தாவணி, வெட்கம். "என்னது வெட்கமா..? அது என்ன ஒட்டுற கம்மா?'னு கேட்கிற பொண்ணுங்ககிட்ட, தாவணியைப் பத்தி என்ன பேச? அதான் சினிமாவிலாவது தாவணி கட்டி வெட்கப்படும் ஸ்ரீதிவ்யாவுக்கு என் ஓட்டு என லாஜிக் சொல்கிறார் மதுரை பிரபுதாஸ். இந்த லாஜிக் மேஜிக் நிகழ்த்த, 21.67 சதவிகித வாக்குகளுடன் ஸ்ரீதிவ்யா முதல் இடம் தட்டியிருக்கிறார்.

கடந்த வருடம் ஸ்ரீதிவ்யாவுடன் இரண்டாம் இடத்தைப் பகிர்ந்துகொண்ட சமந்தாவுக்கு, இந்த வருடமும் அதே இரண்டாம் இடம். ஆனால், "செல்ஃபி புள்ள...' பாடலின் "பச்சக் பச்சக்' பெர்ஃபார்மன்ஸ், அவருடைய வாக்கு சதவிகிதத்தை இந்த வருடம் சுமார் ஆறு சதவிகிதம் அதிகரித்து 17.39 சதவிகிதத்தில் நிறுத்தியிருக்கிறது.




"அதான் ஐ படத்துல எல்லாருக்கும் சேர்த்து விக் ரம் நடிச்சுட்டாரே. அப்புறம் எமிகிட்ட யார் நடிப்பை எதிர்பார்த்தா? அந்த கிளாமருக்கு மார்க் போட்டாலே போதும் "சென்னை மகேஷ் சொல்வதெல்லாம் உண்மை. பல வருடங்களுக்கு

| லவ்வர் பாய் | ஏன் பிடிக்கும்? | நடித்ததில் பிடித்த படம் | பிரமாதமான ஜோடி |
|---|---|---|---|
| ஆர்யா | கண்கள், உயரம் | ராஜா ராணி, மீகாமன் | நயன்தாரா |
| ஜெய் | ஸ்மார்ட் பாய் லுக் | ராஜா ராணி, திருமணம் எனும் நிக்காஹ் | அஞ்சலி |
| அதர்வா | உயரம், சிரிப்பு | பரதேசி | ப்ரியா ஆனந்த |

| ட்ரீம் கேர்ள் | ஏன் பிடிக்கும்? | நடித்ததில் பிடித்த படம் | பிரமாதமான ஜோடி |
|---|---|---|---|
| ஸ்ரீதிவ்யா | ஹோம்லி லுக் | வருத்தப்படாத வாலிபர் சங்கம் | சிவகார்த்திகேயன் |
| சமந்தா | செம க்யூட் ஸ்மைல் | நீதானே என் பொன்வசந்தம், கத்தி | விஜய் |
| எமி ஜாக்சன் | கிளாமர் | மதராசப்பட்டினம், ஐ | ஆர்யா |

முன்னரே அறிமுகமாகிவிட்டாலும், ஐ மூலம்தான் எமி பலரையும் "ஃபாலோ மீ' ஆக்கியிருக்கிறார். இந்த பிளாஸ்டிக் அழகிக்கு சர்வேயில் 15.50 சதவிகிதத்துடன் மூன்றாவது இடம்.

"என்னதான் ஆச்சு நம்ம பொண்ணுங்களுக்கு?' என இளைஞர்கள் கவலைப்படும் அளவுக்கு ஆர்யாவுக்கு "அன்-அப்போஸ்டு' ஆதரவு தொடர்கிறது. "அந்த பிரவுன் கலர் கண்களுக்கு நான் ஃபேன். செம மேன்லி லுக் செம பாடி பாய் ஃப்ரெண்டுன்னா, இப்படி இருக்கணும்' பச்சக் பச்சக்கென வாக்குகளைக் குவிக்கிறார் ஆர்யா. இத்தனைக்கும் கடந்த வருடம் "மீகாமன்' படத்தில் மட்டுமே முழுதாக நடித்திருந்தார் ஆர்யா. அதிலும் விர்ர் கதைக்கு உர்ர் ரியாக்ஷனுடன்தான் வலம்வந்தார். ஆனாலும் "நம்பர் ஒன் பேச்சுலர்' அந்தஸ்தை இந்த வருடமும் தக்க வைத்துக் கொண்டார்.

"ராஜாராணி' கிரேஸ் இன்னமும் கைகொடுக்கிறது ஜெய்க்கு. சென்ற வருடம் ஜெய் நடித்த படங்கள் ஆவரேஜ்க்கும் கீழேதான் ரிசல்ட் கொடுத்தன.

ஆனாலும், "இப்படி ஒரு அம்மாஞ்சி பாய் ஃப்ரெண்ட் இருந்தா சுப்பர்ல' என தம்ஸ்-அப்புகிறார்கள் பல பெண்கள்.

கடந்த வருடம் பிடித்த மூன்றாவது இடத்தை முந்தைய வருடத்தைக் காட்டிலும் அதிக வாக்கு சதவிகிதத்துடன் தக்கவைத்திருக்கிறார் அதர்வா. நெடுநெடு உயரம், பளிச் சிரிப்பு... இரண்டும் இவருக்கான ப்ளஸ்.

ஆக, இந்த சர்வே உணர்த்தும் சில உண் மைகள்... "நிக்காஹ்' முடிக்கும் வரை ஆர்யா மற்றவர்களுக்கு செம சவால் கொடுத்துக் கொண்டே இருப்பார். பக்கத்து வீட்டுப் பெண் அழகு மட்டுமே ஸ்ரீதிவ்யாவின் பலம். ஆனால், செம க்யூட் சமந்தாவும், செமி நியூட் எமியும் அவரைத் தொட்டுவிடும் தூரத்தில் துரத்துகிறார்கள். கவர்ச்சி தாண்டி இருவரும் கெஞ்சல் கொஞ்சலாக நடிக்க முயற்சித்தால், முதல் இடத்தை சுலபமாக எட்டிப்பிடிக்கலாம்.

தொடர்ந்து மூன்றாவது முறை "லவ் வர் பாய்' பட்டம் பெறும் ஆர்யாவுக் கும், "ட்ரீம் கேர்ள்' ஸ்ரீதிவ்யாவுக்கும் கங்கிராட்ஸ்!


**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

**இடம் : யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)**

**நேரம் : காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை**

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

தரம் 1 முதல் 11 வரையான இரண்டாம் மொழி சிங்கள Model Paper வெளிவந்துவிட்டது.

- 15 % முதல் 20 % வரை விலைக்கழிவு.

Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus),English literature உரிய புத்தகங்கள் வெளிவந்துவிட்டது. பத்திரிகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

**யாழ். புத்தகசாலை**

305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org